Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්


மார் 08 - 14, 2007


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 703



## கும்புறுப்பிட்டியிலிருந்து - நாயாறு வரை தொடர்கிறது படை நகர்வு!







## இராஜதந்திரிகள் மீதான தாக்குதல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள்!!

"சிவாஜி" கிளைமாக்ஸ் கிசு கிசுக்கள்

வர்ணங்கள் கூறும் வாழ்க்கை இரகசியங்கள்!



சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## வேடத்தால் பயனில்லை

உலகம் தோன்றிய காலந்தொட்டு அறிவில் குறைந்த மிருக ஜாதிகள் தொடக்கம் நுண்ணறிவுபடைத்த மனிதர்கள் வரை சண்டை, சச்சரவுகள் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆட்சியில் சண்டை, பொருளால் சண்டை, பெண்ணால் சண்டை, இனச் சண்டை, இப்படி எதற்கெடுத்தாலும் சண்டையிலேயே காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கும் மனிதர்கள் மதச் சண்டையில் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்தும் இன்னும் சண்டை முடிந்தபாடில்லை.

இதற்கு விதிவிலக்காக 'எம்மதமும் சம்மதம்' என்று கூறிக்கொண்டு இருப்பவர்கள் மதத்தின் நோக்கத்தைச் சரியாக அறிந்தவர்களா என்றால் அதுவுமில்லை. இது பற்றித் திருமூலர் கூறுவதைக் கவனிப்போமா?

"வேடநெறி நில்லார் வேடம் பூண்டு என் பயன்
வேடநெறி நிற்போர் வேடம் மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல் வேந்தன்
வேடநெறி செய்தல் வீடது வாகுமே."

நெறி நின்று வாழ்வோரை (அறவோரை) அரசன் (தலைவன்) காக்க வேண்டும், என்பதும் அறந்தவறி வாழ்வோரை தண்டித்து அறவளியில் செல்ல அவர்களை நிற்பத்திக்க வேண்டும். அதுவும் ஒருவழியில் வீடுபேறு அடையும் செயல்தான் என்றார் போலும்.

"அறநெறியில் வாழாதார் வெளிவேடம் பூணுவதில்
பயனில்லை என்பதாம்."

-என்.எஸ். ராஜா, தம்பலகமம்

## தேவன் நம்மை மீட்பார்!



உலகில் வாழும் யாவரும் இறைவனுக்கு எதிராக குற்றங்கள் பல செய்து பாவக்கறை படிந்த தூய்மையற்ற பாவிகளாகவே காணப்படுகின்றோம். "எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" (ரோமர் 3.23) மகா பரிசுத்தமும், பராக்கிரமும் பொருந்திய கடவுள் அண்டை செல்வதற்கு அருகதையற்ற அற்பரும் ஈனருமாயுள்ளோம்.

எனினும் தேவன் இரக்கத்திலே ஐசுவரியம் உள்ளவர். அவர் அளப்பெரிய அன்பின் நிமித்தம் தள்ளி விடாது, உலக மாந்தர் யாவரையும் பாவமற சுத்திகரித்து தன்னண்டை சேர்த்துக் கொள்ள சித்தம் கொண்டார். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." (யோவான் 3:16) மனித ரூபம் கொண்டு, சிலுவையிலே கொடிய மரணத்தை அனுபவித்ததன் மூலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, எமது பாவங்களுக்கான தண்டனையை தன்மேல் ஏற்றுக்கொண்டார். எம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு இறைவனோடு ஒப்புரவாகும் சலாக்கியத்தை உண்டு பண்ணினார். மரணத்தை ஜெயம் கொண்டு உயிர்த்தெழுந்த, எங்களுக்கு என்னென்றுமாய் தேவனோடு சஞ்சரிக்கும் நித்தியமான வாழ்க்கை கிட்ட வழி வகுத்தார்.

பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வருமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன். (ரோமர் 6.23)

இயேசு கிறிஸ்துவை எமது ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்று விசுவாசித்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோம். பிறக்கும் அவ்வழியை காண்பிப்போம்.

-செ.கீதாஞ்சலி, கொழும்பு-06

## வட்டி வாங்காதீர்கள்!

ஒருவர் எந்த அளவிற்கு வட்டிப்பொருள்களை உண்டாரோ, அந்த அளவு அவர்களின் வயிற்றில் இறைவன் நெருப்பை நிரப்புவான். அவன் மீது இறைவனின் கோபம் எக்காலமும் நிலைத்திருக்கும். அவனிடம் அந்த வட்டிப்பொருள் இருக்கும் காலமெல்லாம் அவன் மீது இறைவனின் லஃ. னத்து இறங்கிக் கொண்டே இருக்கும்.

-அல்பீதீஸ்.

வட்டிப்பொருளைத் தின்றவன் கப்ரிலிருந்து மிகுந்த நாற்றத்தோடு எழுப்பப்படுவேன்.

-அல்பீதீஸ்.

அளவை நிறுவைகளில் குறைப்பதும், கூட்டி நிறுப்பது வாங்குவதும், குறைத்து நிறுத்துக்கொடுப்பதும், அடமானம் வாங்கிய வீட்டில் குடியிருப்பதும், அடமானப் பொருள்களை புழங்குவதும், வியாபாரத்திற்குப் பணம் கொடுத்து ஆண்டுக்கு இவ்வளவு கொடுத்து விடவேண்டும். நஷ்டத்திற்கு நான் பொறுப்பில்லை என்று கண்டிப்புடன் பேசிக் கொள்வதும், அதன்படியே வாங்குவது ஆகிய இவை அனைத்தும் வட்டியில் சேர்ந்தவைகளாகும்.

வட்டிப் பொருள்களை உண்பவர்கள் ஷைத்தான் பிடித்தவர்களைப் போலன்றி வேறுவிதமாக (தங்களின் மண்ணறையிலிருந்து) எழமாட்டார்கள்.

-அல்குர்ஆன்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07

## கவிதைப் போட்டி இல.700



பாராட்டுக்குரியது

### சுமை

தலையில் கூடையையும்
மனதில் கவலையையும்
சுமந்து செல்லும் இச் சிறுமிக்கு
இந்த நாட்டில் எதிர்காலமே
சுமைதான் என்பது
தெரியாது போலும்.

-- கே.எல்.எப்.றிஸ்னா,
ஏறாவூர் - 03.




## கவிதைப் போட்டி இல.703



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 13.03.2007.

கவிதைப் போட்டி இல.703
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### வயிற்றுப் பசியின் பாரம்

சுமந்து
போனால்தான்
சோறோ, கஞ்சோ
நமக்கு.
எந்த 'நாயும்' சுமந்து
தராது.
நம்ம பாரத்தை
நாமே சுமந்து
இறக்குவோம்.

-காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா - 05.

### சிறப்புரிமை

வியாபாரிகளுக்கு
மூட்டை தூக்குவதும்
கட்டிடம் கட்டுவோர்க்கு
கல்தூக்குவதும்
போர்ப் பிரியர்களுக்கு
துப்பாக்கி தூக்குவதுமே
இந்நாட்டுச் சிறார்களின்
சிறப்புரிமை.

- அ.சந்தியாகோ,
கண்டி.

### கோலம்

புத்தகம் சுமக்க
வேண்டிய வயதில்
கல் சுமப்பதா தலையில்?
காலம் செய்த
கோலமா இது!

- ரி.ஆரிப்சராவுடீன்,
கோட்டைமுனை.

### குறை

குளு குளு அறையில் இருந்து
குறை காணும் சிறுவர்
உரிமையாளரே
களத்துக்கு வந்து என் கஷ்டத்தைப்
பார்த்து
வாழ்வதற்கு எனக்கொரு வழி
சொல்லித் தாருங்கள்.

- சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### எவன் நினைத்தான்?

உலகெங்கும்
ஓராண்டில்
ஒரு நாள்
சிறுவர் தினமாம்...

அதிலொன்றுங்
குறைவில்லை!

அவனி முற்றும்
அவஸ்தையுறும்
சிறுவர்களின்
தலைச்சுமையிறக்க
எவன் நினைத்தான்?

- பொன்.நவநீதன்,
கல்முனை.

### அவல நிலை

குழந்தைகளை அடிமைகளாக்கி
எங்களை அகதிகளாக்கி
வாழ வழியின்றி
வயிற்றுப் பிழைப்புக்காக
அலைகின்றோம்
யுத்தத்தினால்.

- என்.சிபாத் வஹ்ஜத்,
மருதமுனை.

### இனப் பசி

இன வாதிகளின் இனப்
பசியைத் தீர்க்க
ஆயுதம் ஏந்துவதை விட
வயிற்றுப் பசியைத்
தீர்க்க கூடை
ஏந்துவதே மேல்.

ஏ.ஆர்.எப்.ஸஹானா,
ஏறாவூர் - 03.

# உங்கள் பக்கம்

## பொரளை சுரங்கப் பாதை சட்டவிரோதக் குகை!

ஆசியப் பிராந்தியத்திலேயே மிக முக்கிய நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுவது கொழும்பு. கிட்டத்தட்ட முப்பது இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் நாளாந்தம் கொழும்பு வீதிகளைப் பயன்படுத்துவதாகக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

வாகனங்களின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும், பாதசாரிகளின் நடமாட்டத்திற்கெனவும் பல திட்டங்கள் இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு வழிப்பாதைகள், மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் என்று பல வகை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பின் கேந்திரப்பகுதிகளில் ஒன்றாக விளங்கும் பொரளை, நாற்சந்தியில் சுரங்கப் பாதையொன்று அமைக்கப்பட்டு பல வருடங்களாகி விட்டன. நாலாதிசைக்கும் செல்லக்கூடிய வசதிகள் இதில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தும் கூட அநேகமானோர் இப்பாதைகளைப் பயன்படுத்தாது வீதிகளுக்கு குறுக்கும் நெடுக்குமாகச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மேலும் இச் சுரங்கப் பாதையில் போதைவஸ்து வியாபாரம், விபசாரம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது. வீதிக்குக் குறுக்கே பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருக்கும் கம்பி வேலிகளுக்கு மேலாக வாலிபர்கள் பாய்ந்து செல்வது நாளாந்தம் காணக்கூடிய ஒரு காட்சியாகவுள்ளது. இதனால் வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றன. வாகன ஓட்டிகள் அதிக சிரமத்திற்குள்ளாகின்றனர்.

வீதிப் போக்குவரத்து கண்காணிப்புக்கென நிறுத்தப்பட்டிருக்கும் பொலிஸார் கூட இதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே பொரளை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு இந்த ஒழுங்கற்ற நிலையைக் கருத்திற் கொண்டு தயவு செய்து கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-பாதசாரிகள் சார்பாக,
ஆர்.பிரசன்னா,
பொரளை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

## வாடாமலர் முரசு!

தினமுரசின் 700ஆவது மலர் கண்டேன். மனதில் மகிழ்ச்சி கொண்டேன். முரசின் ஸ்பெஷலாக 22ஆம் பக்கத்தையும் செய்திப் பக்கமாக மாற்றியதை மனதார வரவேற்கிறோம். நன்றிகள் பல.

'பெண் சிவாஜி' கின்னஸ் சாதனை என்ற தலைப்பில் நடிகை மனோரமா பற்றி வாரா வாரம் தவறாது படித்து வருகிறோம். 700ஆவது இதழில் தவறுதலாக வேறு தலையங்கத்தில் செய்தியைப் போட்டு எங்களைத் திகைக்க வைத்து விட்டீர்கள். இப்படியான தவறுகள் இனியும் வேண்டாம்.

- முஸ்னா றஷிகா,
கல்முனை - 07.

## அறிவின் கருவூலம்

அறிவின் கருவூலம் வாசகர் தம்மிடை
தெரிவாக நிற்கின்றாய் தினமுரசே!
உருவில் சிறிதாக இருந்தாலும் எம்மிடை
உனக்கொரு தனி இடம் உண்டென்றால்
மிகையன்று நீ வாழி.

எஸ்.புண்ணியம்,
வவுனியா.

## தினமுரசு வாழ்க!

பல வண்ணம் தாங்கி நீ
புதன் தோறும் வெளிவந்து
எமதெண்ணம் நிறைவேற்றி
நிற்கின்றாய் முரசே!
நல்லெண்ணம் கொண்ட நின்
வாசகர் நெஞ்சத்தில்
பொன்வண்ணம் தந்தாய் நீ
வாழ்க. வாழ்க!

என்.எஸ்.ராஜா,
தம்பலகமம்.

## ஆரம்பத் திகதியை அறியத் தந்த முரசு

700ஆவது தினமுரசு என் கரம் கிடைத்து இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தேன். அதன் ஆரம்பத் திகதியை அறியாத எண்ணற்ற வாசகர்களுக்கு இது 1993.05.30 ஆம் திகதி மிளிர்ந்தது என்று இதன் ஆசிரியர் கூறியபோது, மூக்கின் மேல் விரல் வைத்து முரசின் முழுநேர வாசகர்கள் ஆகிய அத்தனை பேரும் அக மகிழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

- எம்.சி.கலீல்,
கல்முனை - 05.


# அதிகரித்துவரும் ஆட்கடத்தல்கள், படுகொலைகளைக் கட்டுப்படுத்த துணிகர நடவடிக்கை வேண்டும்

நாட்டில் கடந்த சில வருடங்களாக இடம்பெற்று வரும் ஆட்கடத்தல்கள், காணாமல் போவோர் பற்றிய சம்பவங்களுக்குப் பல்வேறு தரப்பினர் காரணமென்று இச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக்குழு அதிகாரியொருவர் தெரிவித்தார். பாதாளக் கும்பல்கள், ஆயுதமேந்திய குழுக்கள், இராணுவத்தை விட்டுத் தப்பியோடியோர் போன்ற பல்வேறு தரப்புகள் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சொன்னார். அவர் மேலும் தெரிவிக்கையில் 2005ஆம் வருடம் இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், கொழும்பு, நுகேகொட உட்பட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 953 பேர் காணாமல் போயுள்ளனரென்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களிலும் 800க்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். இனமோதலோடு சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்ல, கப்பம் பெறுதல், பழிவாங்குதல் போன்ற காரணங்களுக்காகவும் பலர் கடத்தப்படுகின்றார்கள். தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களவர்களும் கடத்தப்படுகிறார்கள். கடந்த வருடம் மே மாதம் பாதாள உலகப் புள்ளியான நாவல நிஹால் நீதிமன்றத்திலிருந்து திரும்பும் வழியில் கடத்திச் செல்லப்பட்டார். அவரை யார் கடத்தினார்கள். அவருக்கு என்ன நடந்ததென்பது பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதே போன்று டிசம்பர் 15ஆம் திகதி கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்ட கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் பற்றிய தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. கடந்த இருபது வருடங்களுக்கு மேற்பட்ட யுத்தமும் இவ்வாறான மிலேச்சத்தன மான சம்பவங்களுக்குக் காரணமாக அமைகின்றன. படைகளை விட்டுத் தப்பியோடியோர், யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தோர் போன்றவர்களும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சக்திகளும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் சம்பந்தமாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, விசாரணைகளை நடத்தித் தன் அறிக்கையையும் சமர்ப்பித்து விட்டது. இருந்தாலும் கடத்தல் சம்பவங்களும் காணாமல் போவோரும் குறைந்தபாடில்லை. இச் சம்பவங்களைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடுவதில் அர்த்தமில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன்னிறுத்திக் கடுமையான தண்டனைகள் வழங்குவதன் மூலமே இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

தேசிய ரீதியிலான மற்றும் சர்வதேச ரீதியிலான மனித உரிமை அமைப்புகள், இச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டதாக அரசாங்கத்தின் மீது குற்றஞ் சுமத்துகின்றன. அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டுமென்பது உண்மைதான். ஆனால், பெருந்தொகையான சிறு ஆயுதங்கள் இன்னமும் இலங்கையில் தாராளமாகவே புழக்கத்தில் இருக்கின்றன. பல வருடங்களாக யுத்தம் நடைபெற்ற நாடுகளில் இவ்வாறான சம்பவங்கள் தாராளமாகவே நடைபெற்றிருக்கின்றன. நடைபெறுகின்றன. ஆயுத கலாசாரத்தை முற்றுமுழுதாக முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலமே இக் கொடும் செயல்களுக்கு முடிவுகட்ட முடியும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த மாதம் 66 பொதுமக்கள்சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனரென்றும் 62 பேர் காணாமல் போயுள்ளனரென்றும் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவிக்கின்றது. ஆட்கடத்தல், காணாமல் போதல், படுகொலைகள் ஆகிய சம்பவங்கள் தற்போது வவுனியா மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாகரை மீள்குடியேற்றம் ஆரம்பம்



வாகரையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறும் போது படையினர் பாதுகாப்பு வழங்குவதை பார்க்கலாம்.

அரசாங்கப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதலினால் பாதிக்கப்பட்டு வாகரையை விட்டு வெளியேறிய மக்களை மீளக் குடியேற்றும் பணிகள் கடந்த 6ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக 12 கிராமசேவகர் பிரிவிலுள்ள 16 ஆயிரம் மக்களை மீளக்குடியேற்றும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார். புலிகளிடமிருந்து படையினர் கைப்பற்றிய வாகரைப் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, மின்சாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அது தொடர்பான பணிகள் மேலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புலிகள் தப்பி ஓடுகையில் மண்ணிற்குள் புதைத்து வைத்திருந்த பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் மீட்கப்பட்டிருக்கின்றன.

இடம் பெயர்ந்த வாகரை மக்கள் மட்டக்களப்பிலுள்ள பல்வேறு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். தமக்குப் போதிய அடிப்படை வசதிகள் வழங்கப்படவில்லை என்றும் தாம் பாரிய கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி இருந்ததாகவும் இடம் பெயர்ந்த மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். மீளக் குடியேறும் மக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா நிதி, உதவி யாக வழங்கப்படுமென்றும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

வாழைச்சேனை விநாயகபுரம் அகதி முகாமில் இருந்த மக்களில் நூற்றுக்கணக்கானவர்கள் வாகரையிலுள்ள ஊரியன் காட்டுப்பகுதியில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் பொருட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் மீள் குடியேற்றப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

## ஈ.பி.டி.பி.யின் பெயரைப் பாவித்து மோசடி செய்தவர்கள் விளக்க மறியலில்

யாழ். - திருமலை பயணிகள் கப்பலில் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்து தருவதாகக் கூறி மோசடியான முறையில் பணம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட மூவர், யாழ். நீதிவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இம் மூவரில் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் பரமசாமிலோகராஜா என்பவரே விடுவிக்கப்பட்டார். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ந.கருணாகரகுருமூர்த்தி செய்த முறைப்பாட்டையடுத்து 258, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கவேலு கனகரட்னம், 16/4, 2ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த, யோக லிங்கம் துஷ்யந்தன், யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த பரமசாமி லோகராஜா ஆகி யோரே கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் லோகராஜா விடுவிக்கப்பட்டார். ஏனைய இருவரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். தங்கவேலு கனகரட்னத்தின் மனைவி நீதிமன்றத்தில் வைத்து தலா 5 ஆயிரம் ரூபா வீதம் பணம் பெறப்பட்டவரிடம் கையளித்தார். நீதிபதியின் உத்தரவுக்கிணங்கவே பெறப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

முறைப்பாட்டாளரான ந.கருணாகரகுருமூர்த்தியும் பொலிஸாரும் குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குவதற்கு கால அவகாசம் வழங்கும்படி கேட்டுக் கொண்டனர். இதற்கிணங்க வழக்கு பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.


## உலக நாடுகளிடம் வாஷிங்டன் டைம்ஸ் கோரிக்கை

சர்வதேச சமுகத்தின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வெளிப்படையாகவே பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வரும் புலிகளை உலக நாடுகள் அனைத்தும் தடை செய்ய வேண்டுமென அமெரிக்காவின் வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. புலிகள் தங்களை எவ்வாறு அடையாளப்படுத்திக் கொண்டாலும், இன்று அவர்களது பயங்கரவாதச் செயல்களை அரசாங்கம் நன்கு புரிந்து கொண்டுள்ளது. இதேவேளை, மட்டக்களப்பில் வெளிநாட்டுத் தூதுவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன. சர்வதேச பொலிஸ் ஊடாக புலிகளின் நடவடிக்கையை முடக்க வேண்டும் என்றும் அந்நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. கிழக்கில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காகச் சென்ற வெளிநாட்டுத் தூதுவர்கள் மீது புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலினூடாக புலிகளின் மிலேச்சத்தனம் தலை தூக்கியுள்ளமை தெரிகிறது என வாஷிங்டன் டைம்ஸ் ஆசிரி யர் தலையங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. உலகத்தில் பெரும்பாலான நாடுகள் புலிகளின் உண்மையான சுயரூபத்தை கண்டு கொண்டுள்ளன. அமெரிக்கா, கனடா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ளன என்பதையும் வாஷிங்டன் டைம்ஸ் ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## யாழ்ப்பாணத்துக்கு சீமெந்து

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கட்டிட நிர்மாண தேவைகளுக்காக ஒரு தொகுதி சீமேந்து எடுத்து வரப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு சீமேந்து பொருட்கள் தரைவழியாக எடுத்து வருவது தடைப்பட்டது. இதனையடுத்து தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சீமேந்தினால் யாழ்ப்பாணத்தில் கட்டிட நிர்மாணப் பணிகளை முழுமையாக முன்னெடுக்க முடியவில்லை. இதனால் சந்தையில் சீமேந்தின் விலை பல மடங்காக உயர்ந்திருக்கிறது. இந்நிலையில் கப்பல் மூலம் 2350 மெற்றிக் தொன் சீமேந்து குடாநாட்டிற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.இந்த சீமெந்தை வர்த்தகப் பெருச்சாளிகள் பதுக்கிக் கொள்ளை இலாபம் அடிப்பதைத் தடுப்ப தற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

## "செல்வம் சுவிஸில்" வினோ லண்டனில்!



வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களான செல்வம் அடைக்கலநாதனும் வினோநோராதலிங்கமும் மேற்கத்தேய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்வதாக வன்னி மக்கள் தெரிவிக்கின்றனர். மீன்பிடித் தடை மற்றும் அன்றாடப் பிரச்சினைகளைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருக்கும் நிலையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகின்றார். அரசாங்கத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் கத்திக் குளறினாலும் எம்.பி.களுக்கு இருக்கக் கூடிய வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி அவர் சுகபோகம் அனுபவிப்பதாக சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழ் வாலிபர்கள் குற்றம் சுமத்துகின்றனர். கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக அவர் இந்த நாடுகளுக்குச் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையில் வினோநோராதலிங்கம் எம்.பி.தனது குடும்பத்தினரை லண்டனிற்கு கூட்டிச் சென்று அங்கு குடியேற்றியுள்ளார்.

பாராளுமன்றக் கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் சமுகமளிக்கத் தவறினால் எம்.பி.பதவியை இழக்க நேரிடும் என்பதால் அடைக்கலநாதன் எம்.பி. விரைவில் இலங்கை வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழ்மொழி மூல சட்டக்கல்லூரி மாணவர் தெரிவுக்கான தொடர் போராட்டம்

சட்டக் கல்லூரிக்கு தமிழ்மொழி மூல மாணவர் தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதாக குற்றம்சாட்டி வரும் ஓர் அமைப்பு இது தொடர்பான தொடர்ச்சியான பல வெகுஜன போராட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது. கவன ஈர்ப்புப் போராட்டம், கண்டனப் பேரணி, உண்ணாவிரதம் போன்ற பல்வேறு வடிவிலான போராட்டங்களை நடத்தவுள்ளதாக "சமூக நீதி நடவடிக்கைக்குழு" என்ற அமைப்பின் அமைப்பாளரான க.தேவதாசன் தெரிவித்தார். "சிங்கள மொழி மூல மாணவர்கள் சட்டக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்படுவதைப் போன்று போதியளவு தமிழ்மொழி மூல மாணவர்களும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்." பல சாக்கு போக்கு களைச் சொல்லி கல்லூரி நிர்வாகம் இப்பிரச்சினையை இழுத்தடித்து வருகின்றது. எமக்கு நீதி தேடித் தருவதற்கு அரசியல் வாதிகளும் ஊடகங்களும் உதவ வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சர்வகட்சி மாநாட்டின் இறுதி யோசனைகள் மே மாதத்திற்கு முன்னர் இல்லை

சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தின் இறுதி யோசனைகள் ஏற்கனவே எதிர் பார்த்ததைப் போன்று எதிர் வரும் புதுவருட தினத்திற்கு முன்னர் வெளியிடப்படக் கூடிய சாத்தியமில்லை என்று மேற்படி கூட்டத்தின் தலைவரான அமைச்சர், பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்தார். இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பல்வேறு அரசியல் கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகளின் அடிப்படையில் அமைச்சர் திஸ்ஸ வித்தாரண தனது சிபாரிசுகளை முன் வைத்திருந்தார். இது தொடர்பாக பெரும்பாலான அரசியல் கட்சிகள் தமது ஆலோசனைகளை முன்வைத்து விட்டன. சுதந்திரக் கட்சி தனது யோசனைகளைத் தயாரிப்பதற்கென குழுவொன்றினை அமைத்துள்ள போதிலும் இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. சுதந்திரக் கட்சியின் சிபாரிசுகள் இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில் சர்வகட்சிக் கூட்டத்தை விட்டு வெளியேறிய, பகிஷ்கரித்து வரும் ஜே.வி.பி.யை மீண்டும் இணைத்து கொள்ளுமாறு அமைச்சர் திஸ்ஸ வித்தாரண கோரிக்கை விடுத்த

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## புலிகளைத் தடை செய்வது குறித்து அவுஸ்திரேலிய அரசு பரிசீலனை

அவுஸ்திரேலியாவில் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தைத் தடை செய்யுமாறு அங்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா விடுத்த கோரிக்கையை அந்த நாடு சாதகமாகப் பரிசீலிக்க முன்வந்துள்ளது. புலிகளைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரைச் சந்தித்து அமைச்சர் நிமால் விளக்கமளித்துள்ளார். இலங்கையில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் புலிகள், ஆயுதமுனையில் தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகக் கொடுமைப்படுத்தி வருகின்றனர். சமாதான வழிமுறையில் தீர்வுகாண ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் புலிகள் தட்டிக்கழித்து, படையினருக்கும் மக்களுக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதையும் அமைச்சர் அங்கு சுட்டிக்காட்டினார். அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட உலகின் பல்வேறு நாடுகள் புலிகளைத் தடைசெய்துள்ள நிலையில், அவுஸ்திரேலியாவும் பயங்கரவாத இயக்கமான புலிகளைத் தடைசெய்ய முன்வர வேண்டும். புலிகள் இறுதி யுத்தம் செய்யப்போவதாகக் கூறி அவுஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழ் மக்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பலாத்காரமாக வசூலித்து வருகின்றனர். எனவே புலிகளின் இவ்வாறான செயற்பாடுகளை முடக்கும் பொருட்டு அந்த இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டுமெனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தமிழ்க் கூட்டமைப்பிற்குள் கசமுசா

இந்தியா சென்றுள்ள தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.சிவாஜிலிங்கத்தின் செயற்பாடுகள் குறித்து கட்சிக்குள் கசமுசாக்கள் எழுந்துள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய மத்தியரசு தலைவர்களையோ அல்லது கருணாநிதி போன்ற செல்வாக்கு மிக்க தமிழக மாநில தலைவர்களையோ சந்தித்து இலங்கை நிலைவரம் தொடர்பாக எடுத்துரைக்க தவறி விட்டார் என்று கட்சியின் வெளிவிவகாரக் குழுவினர் தெரிவித்தனர். பாதுகாப்புக் காரணங்களை காட்டி லண்டனில் தங்கியிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், இரா.சம்பந்தன் போன்றோர் இது குறித்து கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. புலி இயக்க ஆதரவாளரான வைகோ, இராமதாஸ், தொல் திருமாவளவன் போன்றவர்களை அடிக்கடி சந்தித்துப் பேசுவதிலும் அவர்களின் வீடுகளில் விருந்து உண்பதிலும் அர்த்தமில்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# முரசம்

## புலிகளின் நிலைப்பாடு அச்சமா? எச்சரிக்கையா?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

அரசின் தாக்குதல் நடவடிக்கைகள் புலிகளுக்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது என்பதை இந்தவாரம் நோர்வே தூதுவரைச் சந்தித்த தமிழ் செல்வனின் சூசகமான கருத்துக்கள் தெளிவு படுத்துகின்றன. சர்வதேசத்தின் தற்போதைய அணுகு முறையானது, இலங்கை அரசின் இராணுவ செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதாகவோ, அரசியல் தீர்வை நோக்கி நகரச் செய்வதாகவோ இருக்கவில்லை என்று தமிழ்ச் செல்வன் கூறியிருக்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகளால் மீறப்படுகிறது என்று புலிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அதிகரிக்கின்றன. சுமார் 4000 முறைப்பாடுகள் புலிகளின் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே புலிகள், ஒப்பந்தத்தை மதித்து, சமாதானப் பேச்சுக்குத் திரும்ப வேண்டும் என இதே சர்வதேச சமூகம் கோரிக்கை மேல் கோரிக்கையாக விடுத்துக் கொண்டிருக்கையில், குண்டு வெடிப்புக்கள், கிளைமோர் தாக்குதல்கள், படுகொலைகள், சிறுவர்களைப் படைக்குப் பிடித்தல் போன்றவற்றைச் செய்து கொண்டிருப்பதோடு, தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தினரே அப்போதெல்லாம் சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டிருந்ததைப் புலிகள் வசதியாக மறந்து விட்டார்களா? என்று புலிகளின் செயற்பாடுகளைத் தொடர்ந்து அவதானித்து வரும் சில இராஜதந்திரிகள் கேட்கும் கேள்விகளுக்குப் புலிகள் என்ன பதிலைக் கூற முடியும்.

இறைமையுள்ள அரசு என்ற வகையிலும், வெளிநாட்டு நிதிகளை நம்பியிருக்கும் நாடு என்ற வகையிலும், இலங்கை அரசை சர்வதேச சமூகமும், உதவி வழங்கும் நாடுகளும் சமாதானத்தை நோக்கித் தள்ளி விடவும், மனித உரிமை விடயங்கள் குறித்து தமது அதிருப்தியையும் வலுவாகத் தெரிவிக்க முடியும் என்பது நியாயமானது. இதே மாதிரியான அணுகுமுறைக்குள் எக்காலமும் உள்வாங்கப்பட முடியாத பயங்கரவாத அமைப்பான புலிகள், இலங்கை அரசின் மீது அழுத்தம் கொடுத்தது போதாதென்று எந்த ரீதியில் சர்வதேச சமூகத்தைப் பார்த்துக் கேட்க முடியுமென்று அரசின் உயர்மட்டத் தரப்புக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் புலிகளின் பதில் எப்படியானதாக இருக்கும்.

இதற்கிடையே இராணுவத்தின் தாக்குதல்கள், மணலாறு பகுதியை நோக்கியதாக ஆரம்பிக்கப்படுமாக இருந்தால், அதை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், அது ஒரு யுத்தச் சூழலைத் தோற்றுவிக்கும் என்றும் தமிழ்ச்செல்வன் கூறியிருப்பது, படையினரின் நகர்வுகளைத் தடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. கிழக்கு மாகாணத்தைக் கைவிடத் தயாராக இருக்கும் புலிகள், வன்னியில் தமது இருப்புக்கு ஆபத்து என்றால், போர்ச்சூழல் ஏற்படும் என்பது, கிழக்கு மாகாணம் மீதான புலிகளின் அணுகு முறைகள் எந்தளவுக்கு முக்கியத்துவமானதாக இருந்துள்ளது என்பதைத் தெளிவு படுத்துகிறது. புலிகளின் சர்வதேச செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ள நிலையிலும், ஆயுதக் கடத்தல் உட்பட்ட கடல் மார்க்கப் போக்குவரத்து ஆபத்து நிறைந்ததாக மாறியுள்ள நிலையிலும், கிழக்கு ஆதிக்கமற்ற மாகாணமாக ஆகியுள்ள நிலையிலும், புலிகளின் தற்போதைய நிலைப்பாடு, வன்னியைக் காத்துக் கொள்வதுதான்.

படை நகர்வு ஒன்றை நடத்தி வன்னிக்குள் படையினர் தாக்குதல் நடத்தினால் அதை எதிர் கொள்வது முன்னரை விட நெருக்கடி மிக்கது என்பதால், படையினரை நகர விடாமல் நிறுத்த நோர்வேயூடான காய் நகர்த்தல் உதவுமா என்று புலிகள் எதிர்பார்ப்பதாகவே இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஏன் என்றால், சர்வதேச நாடுகள் என்னதான் சொன்னாலும் உடனடி முயற்சியின் பயனாக இரு தரப்பும் பேச்சு வார்த்தை மேசைக்குச் செல்ல வாய்ப்புக்கள் இல்லை. அதுதவிர இனித்தான் போர்ச் சூழல் உருவாகும் என்றும் இல்லை. தற்போதே நாடு போர்க்கோளத்தில்தான் காட்சி தருகிறது. தற்போதைய நாட்டின் போக்கு சமாதானம் தாண்டி தண்டத்தில் நிற்கிறது. இதில் சர்வதேசத்தின் தலையீடு முழு வலுவுள்ளதாக இருந்தால் தற்போதைய சூழலிலிருந்து நாட்டை மேலும் மோசத்துக்குள் தள்ளி விடாமல் இருந்தாலே போதும் என்பதாகவே மக்களின் எதிர்பார்ப்பு இருக்கிறது.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---


### எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இராஜதந்திரிகள் மீதான தாக்குதல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள்!!

ந ர ன்

**மட்டக்களப்பு** வெபர் மைதானத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளை ஏற்றி வந்த ஹெலிகொப்டர்கள் தரையிறங்கிய சமயம், புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதல் இராஜதந்திரிகளை இலக்கு வைத்து நடத்தப் படவில்லையென்று இலங்கையிலுள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகர் ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித்த கருத்து, அரசாங்க மட்டங்களில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐ.நா.சபையும், அமெரிக்கா அங்கம் வகிக்கும் இணைத் தலைமை நாடுகளும் இத்தாக்குதலைத் திட்டவட்டமாகக் கண்டித்த பின்னரேயே அமெரிக்க உயர் ஸ்தானிகரின் சர்ச்சைக்குரிய கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

இத் தாக்குதலைக் கண்டித்த ஐரோப்பிய ஒன்றியம், ஆக்கபூர்வமான எண்ணங்களின் அடிப்படையில், நீடித்த ஒரு தீர்வைக் காண்பதற்காக அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை



மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர்...

மேசைக்குத் திரும்ப வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனும் ஓரளவிற்கு இதே பாணியிலேயே கண்டனம் தெரிவித்துள்ளார்.

"முன்னர் பல தடவைகள் செய்ததைப் போன்று, வேண்டுமென்றே இராஜதந்திரிகளை இலக்கு வைத்துப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்" என்று அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறைப் பேச்சாளர் அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கின்றார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்தை இதற்கு ஆதாரமாக சுட்டிக் காட்டியுள்ளார் ரம்புக்வெல. ராஜீவ் காந்தியை தாங்கள் படுகொலை செய்யவில்லை என்று ஆரம்பத்தில் மறுப்புத் தெரிவித்த புலிகள், பத்து வருடங்களின் பின்னரே அதனை ஏற்றுக் கொண்டனர் என்றும் அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டியுள்ளார். ராஜீவ் காந்தியின் படுகொலையை மட்டுமல்ல, தமிழர்களின் மகோன்னதத் தலைவர் அமிர்தலிங்கத்தையும் கொன்று விட்டு, முதலில் மறுத்தவர்கள் புலிகள். பல வருடங்களுக்குப் பின்னர்தான் அவர்களின் பாரம்பரிய வழக்கப்படி அதற்கான பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர். இதேபோன்று, சில மாதங்களுக்கு முன்னர் முகமாலை முன்னரங்கப் பகுதிக்குச் சென்ற ஊடகவியலாளர் குழுவொன்றின் மீது புலிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலையும் உதாரணமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார் அமைச்சர் ரம்புக்வெல. ஊடகவியலாளர்களின் விஜயம் குறித்து தமக்கு அரசாங்கம் அறிவிக்காததாலேயே தாக்குதல் நடத்த நேர்ந்ததாகவும் அப்போது புலிகள் காரணம் கூறினார்கள். இதே பாணியிலேயே இப்போதும் தமது காரணங்களைப் புலிகள் கூறியிருக்கின்றனர்.

அமெரிக்கா, இத்தாலி, ஜேர்மனி, பிரெஞ், ஜப்பான் உயர் ஸ்தானி கர்களும், ஐரோப்பிய ஒன்றியம், யுனிசெப், உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் சென்றிருந்த போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. இத்தாக்குதலின் போது அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக், இத்தாலியத் தூதுவர் பியோ மாட்டினி, ஜேர்மன் தூதுவர் ஜீர்யென் வீர்த் ஆகியோர் சிறு காயங்களுக்கு இலக்கானதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பத்திற்கு மேற்பட்டோர் காயமுற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு வெபர் மைதானத்திலிருந்து ஆறு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள வவுணதீவிலிருந்தே இந்த எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு வாவிக்கு அப்பாலுள்ள வவுணதீவுப் பகுதி, புலிகளின் பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. மோதல்களால் பாதிக்கப்பட்டு, மட்டக்களப்பிற்கு இடம் பெயர்ந்திருக்கும் அப்பாவி மக்களுக்கு, மனிதாபிமான உதவிகளை வழங்குவது குறித்து ஆராய்வதற்காகவே வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டக்களப்பிற்குச் சென்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை இலக்கு வைத்து அண்மைக் காலங்களில் புலிகள் நடத்திய மூன்றாவது தாக்குதல் இதுவெனக் கூறப்படுகின்றது. இத்தாலிய இராஜதந்திரி ஒருவரை இலக்கு வைத்த இரண்டாவது தாக்குதல் இதுவென்றும் சொல்லப்படுகின்றது. இத்தாலியைச் சேர்ந்த பெண் அமைச்சர் ஒருவர் உலங்கு வானூர்தியில் சென்றபோது தாக்குதல் நடத்தப்பட்டதாக முன்னர் செய்திகள் வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐ.நா.பந்தோபஸ்துப் பிரிவின் தலைவர் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் இணைப்பு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டதையடுத்தே வவுணதீவிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல் நிறுத்தப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. முக்கிய இராஜதந்திரிகளை அழைத்துச் செல்வதற்கு முன்பதாக, அது பற்றித் தமக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற விதிமுறை பின்பற்றப்படாததாலேயே இச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவித்த புலிகளின் பேச்சாளரான இளந்திரையன், இது குறித்து அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருந்தார்.

ஆனால், இது குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததாக சில தூதுவர் தரப்புகள் தெரிவித்துள்ளன. இறைமையுள்ள ஒரு நாட்டிற்குள் பயங்கரவாத அமைப்பொன்றினை சமபங்காளராகக் கருதி முன்கூட்டியே அறிவிக்க வேண்டிய தேவையில்லையென்றும் சில தரப்புகளில் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும், அப்பாவிப் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் கூடியிருந்த ஒரு இடத்தை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தியமைக்குப் புலிகள் என்ன நியாயம் சொல்லப் போகின்றார்களோ தெரியவில்லை. அவர்களின் அகராதியில், "தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுணம் பிழைத்தால் சரி" என்பதுதான் அவர்களின் நோக்கம். அப்பாவித் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதைப் பற்றி அவர்கள் என்றுமே கவலை கொள்வதில்லை. மக்கள் நடமாடும் பகுதிகளிலும், மாணவர்களின் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் வாசல் புறங்களிலும் அயல்களிலும் படையினரைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதே அவர்களின் வழக்கமாகும். அப்பாவி மக்களைக் கொன்று விட்டு, அடுத்தவர் மேல் பழி போடுவது, கொலை மிரட்டல்களை விடுத்துவிட்டு மற்றவர்கள் மீது குற்றம் சாட்டுவதெல்லாம் அவர்களுக்குக் கை வந்த கலை.

ஏற்கனவே இருபதாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது வீடு, வாசல், சொத்து, சுகங்கள் அனைத்தையும் இழந்து மட்டக்களப்பில் அகதி களாகத் தஞ்சம் புகுந்திருக் கின்றார்கள் என்பது புலிகளுக்கு நன்கு தெரியும். இவர்கள் மழையிலும், வெயிலிலும், மர நிழல் களிலும் மைதானங்களிலும் போதியளவு வசதிகளின்றி அல்லாடிக் கொண்டிருக்கின் றார்கள். இவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் பற்றி ஆராய்வதற்காகவே வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டக்களப்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

வவுணதீவிலிருந்து புலிகள் கடந்த 27ஆம் திகதி நடத்திய எறிகணைத் தாக்குதலையடுத்து புலிகளின் பகுதிகளிலிருந்து மேலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்துள்ளனர். புலி நிலைகள் மீது, அரச படையினர் பதிலடி கொடுக்கலாம் என்ற பயத்தின் காரணத்தினாலேயே புலிப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். வவுணதீவு, மகிழடித் தீவு, ஈச்சந்தீவு, ஆயித்தியமலை, விளாவெட்டுவான், கரவெட்டி, முதலைக்குடா, முனைக்காடு ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பாரிய கஷ்டங்களுடன் வாழ்வதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 3 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பாதுகாப்புத் தேடி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. புலி நிலைகள் மீது தான் தாக்குதல் நடத்தப்படுவதாக அரச படையினர் கூறினாலும், அப்பாவி மக்களும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. மக்களைப் புலிகள் கேடயங்களாகப் பயன்படுத்து கின்றார்கள் என்பதும் உண்மைதான். இரு தரப்புகளுமே மாறி மாறி பரஸ்பரம் குற்றங்களைச் சுமத்துகின்றனர். ஆனால், யுத்தத்தில் சம்பந்தப்படாத மக்களே பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். அது ஈராக்காக இருந்தால் என்ன, பொஸ்னியாவாக இருந்தால் என்ன, ஐவரிகோஸ்ற்றாக, இருந்தாலென்ன, உகண்டாவாக இருந்தாலென்ன, பிலிப்பைன்ஸாக இருந்தா லென்ன, இந்தோனேசியாவாக இருந்தாலென்ன, இதுதான் உண்மை. ஆனால் புலிகள் தாக்குதலை நடத்தும் பொழுது, படையினர் பதில் தாக்குதல் நடத்தாமல் கைகட்டி, வாய் பொத்தி, மௌனியாக இருப்பார்களென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. படையினர், பதில் தாக்குதல் நடத்துவார்கள். மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதை நன்கு தெரிந்து கொண்டே புலிகள் இவ்வாறான தாக்குதல்களை ஆரம்பிக் கின்றார்கள். புலிகளின் இந்த இராணுவ ரீதியான தாக்கு தல்கள், அரசியல் ரீதியாக அவர்களுக்கு பெரும் விழுக் காட்டை ஏற்படுத்தியிருக்கின்றது. சர்வதேச ரீதியில், பயங்கர வாதிகள் என்ற முத்திரை அவர்கள் மீது அழுத்தமாக குத்தப்படுவதற்கு இவ்வாறான சம்பவங்களே அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்பதை சர்வதேச சமூகம் மென்மேலும் புரிந்து கொள்ளுமளவிற்கு இவ்வாறான புலித் தாக்குதல்கள் காரண மாக அமைகின்றன.

இலங்கையில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் யுத்தம், மனித அவலங்களையும் அகதிகளையும் தோற்றுவித்திருக் கின்றது. யுத்தத்தால் அவதிப்படும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு உலக நாடுகள் உதவத் தேவையில்லை என்று புலிகள் இயக்கம் நினைத்துக் கொண்டால், அதனால் சங்கடப்படப் போவது சர்வதேச சமூகமல்ல. தமிழ் மக்கள்தான். யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் வேறு நாடுகளை நோக்கி தமது உதவிக் கரங்களை உலக நாடுகள் நீட்ட வேண்டுமென்றே புலிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

கடந்த நவம்பரில் புலித் தலைவர் பிரபாகரன் விடுத்த தமிழீழ யுத்தப் பிரகடனத்திற்குப் பின்னர், 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கின்றார்கள். பாதுகாப்புத் தேடி உள்ளூரில் இடம் பெயர்ந்திருக்கும் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை இலட்சத்தை எட்டிக் கொண்டிருக்கின்றது. சர்வதேச சமூகம் வலியுறுத்துவதைப் போன்று, புலிகள் யுத்த முனைப்பைக் கைவிட்டு, பேச்சு மேசைக்குத் திரும்பினால் மட்டுமே, அப்பாவித் தமிழ் மக்கள் அல்லல் படமாட்டார்கள்.

கிழக்கில், அண்மையில் புலிகள் படுதோல்வியுற்றமைக்கு பல முக்கிய காரணங்கள் இருக்கின்றன. சர்வதேச சமூகம், குறிப்பாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை முக்கிய காரணமாகும். சர்வதேச அளவில் புலிகளின் ஆயுதக் கொள்வனவு வலைப் பின்னலைத் தகர்ப்பதற்கு பல நாடுகள் முன்வந்திருக்கின்றன. இலங்கை அரசாங்கம் இது தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, பர்மா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் எடுத்த முயற்சிகள், புலிகளின் ஆயுதக் கடத்தலை முறியடிப்பதற்கு பெரிதும் உதவியிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து சாம் -7 ஏவுகணைகளைக் கொள்வனவு செய்து, கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டமை மிக முக்கியமானது. இதேபோன்று இந்தியாவில் ஆயுதக் கடத்தல் காரர்களைத் தேடி வலை விரிக்கப்பட்டமையும், இந்தியக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டமையும் புலிகளுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கின் பூகோள நிலைமைகளையும் பிரபாகரனின் புலிகள் இயக்கத்தின் வலுவிடங்களையும் நன்கு தெரிந்து கொண்ட கருணா அணியினரின் படை நகர்வுக்கான பங்களிப்பும், புலிகளை மோசமாகப் பாதித்திருக்கின்றது. இந்த நிலையில் இனியும் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய நிலையில் புலிகள் இல்லையென்று இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வெளிநாட்டு இராஜ தந்திரிகள் மீது நடத்திய சில்லறைத்தனமான சேட்டைகளைக் கைவிட்டு, தமிழ் பேசும் மக்களின் நலன் பேணும் நோக்கில், புலிகள் இயக்கம் சமாதான மேசைக்குத் திரும்ப வேண்டும்.

---

### ஊரிலிருந்து....



நடிகர் சத்தியராஜ் திரைப்படம் ஒன்றில் தேர்தல் வேளையில் தன்னைப் பற்றிய உண்மைகளை கூறிவிடுவேன் என மிரட்டிய அவரது மனைவியை அவரே கொலை செய்வார். இதன்மூலம் பொதுமக்களினது அனுதாப வாக்குகளையும் பெற்றுக் கொள்ளுவார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். குடாநாட்டில் சிலர் கொலை செய்யப்பட்டும் பலர் காணாமல் போயும் உள்ள நிலையில், அதில் சிலர் வன்னியில் உலாவித் திரிவது ஏனோ தனக்கு சத்தியராஜின் அந்த திரைப்படத்தினை ஞாபகப்படுத்துவதாக மாஸ்டர் சொல்லுறார்.

# கும்புறுப்பிட்டியிலிருந்து நாயாறு வரை

**கிழக்கு** மாகாணத்திலிருந்து புலிகள் தொடர்ந்து பின்வாங்கிக் கொண்டிருக்கின்றனர். மாவிலாறு, சம்பூர், வாகரை என்று தொடரும் பின்வாங்கல் நகர்வுகள், மட்டக்களப்பில் கொக்கட்டிச் சோலை - தொப்பிக்கல என்று ஒருபக்கமாகவும், திருகோணமலையில், கட்டுக் குளப்பற்று பெருநிலப்பரப்பிலிருந்தும் தொடர்கிறது. வாகரையைப் புலிகள் இழந்தப் பின்னர், திருகோணமலையில் இருந்த புலிகள் கட்டுக்குளப்பற்று என முன்னர் அழைக்கப்பட்ட பெரும் காட்டுப் பகுதியான பேராறு, கொட்டுக்குளம், கோமரங் கடவெல, பதவிய, திரியாய், கள்ளம்பத்தை ஊடாக வன்னி நிலப்பரப்புடன் தொடர்புபட்ட காட்டுக்குள் ஒதுங்கினர். பேராறு காட்டுக்குள் இருக்கும் புலிகளுக்கு, வன்னியுடனான தொடர்பு இலகுவாகக் கிடைக்கும் என்பதால், அங்கிருந்து கொண்டு எந்த வேளையிலும் குச்சவெளி, பொலிஸ், நேவி, படைத்தளம் மீதும், கோமரங்கடவெல, பதவிய டிவிஷன் படைத்தளங்கள் மீதும் புலிகள் தாக்குதலை நடத்தலாம் என்று படைத் தரப்பு கருதியது. இந்த அச்சுறுத்தலை நீடிக்க விடாமல் புலிகளை இந்தக் காட்டுப் பகுதியிலிருந்து வன்னி நிலப்பரப்புக்குள் விரட்டியடிக்க வேண்டுமென திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதன் ஒரு கட்டமாகவே வடக்குக்கும் - கிழக்குக்குமான கரையோரப் பகுதியை கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவருவதற்கான நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டது.

இந் நகர்வின் போது புலிகளின் பலமான எதிர்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் புலிகள் பெரியளவில் எதிர்ப்புக் காட்டாமல் பின்வாங்கியுள்ளனர். புலிகள் எதிர்ப்புக்காட்டாமல் கரையோரப் பகுதியை விட்டுச் செல்வதற்கு பிரதான காரணமாக அமைந்தது, படைநகர்வுகள் ஒரு வழியாக கரையோரத்தை மட்டும் வழியாகத் தெரிவு செய்யவில்லை. கரையோரமாக முன்னேறும் அதேவேளையில், முன்னேறும் கரையோரங்களை மேற்காக அமைந்துள்ள படைத்தளங்களில் இருந்தும் ஒரு நகர்வை கரையோரங்களை நோக்கியதாக நடத்தினர். நிலப்பரப்பாக இரு முனைத்தாக்குதல்களையும் கரையோரமாக ஒருவழித் தாக்குதலையும் படையினர் மேற்கொண்டதால், புலிகளுக்கு தாம் சுற்றிவளைக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக தாக்குதலின் ஆரம்பத்திலேயே கனரக ஆயுதங்களையும், முக்கியஸ்தர்களையும் பாதுகாப்பாக வன்னி நோக்கி பின்நகர்த்த வேண்டியதாகிவிட்டது.

புலிகள் எதிர்த்து நிற்க வேண்டிய களமாகக் கருதப்பட்ட கரையோரப் பகுதிகளின் மீதான நகர்வில், புலிகளை பின்வாங்கச் செய்த படையினரின் நகர்வுகள் பற்றிப் பார்க்கலாம்.

திருமலை நகரிலிருந்து வடக்காக பெரும் காட்டுப் பகுதியானது புல்மோட்டை வரை தொடர்கிறது. ஆகவே புல்மோட்டையை இலக்காக வைத்து நகர்வுகளை மேற்கொள்வதே இந்த நகர்வின் பிரதான நோக்கமாக இருந்தது. இதற்காக கரையோரப் பகுதியாக திருமலையிலிருந்து குச்சவெளி - புடவைக்கட்டு - திரியாய் - கள்ளிரவு - புல்மோட்டை வரையும், மேற்கு நிலப்பரப்புப் பகுதியிலிருந்து பதவிய, சிறிபுர இராணுவத்தளத்திலிருந்து கிழக்காக புல்மோட்டையை நோக்கிய காடுகள் ஊடாக முன்னேறி கள்ளம்பத்தை கிராமத்தை சுத்தம் செய்து கொண்டு புடவைக்கட்டு நோக்கி கட்டுக்குளம் பகுதியூடாக நகர்வதும், இதே மேற்குப் பகுதியிலிருந்து காடுகள் ஊடாக மொறவெவ படைத்தளத்திலிருந்து பன்குளம் - பறையன்குளம் ஊடாக முன்னேறி, பேராறு காட்டைச் சுத்தம் பண்ணிக் கொண்டு குச்சவெளிக்கு வடக்காக புலிகளை பின் நகர்த்தி புடவைக்கட்டு நோக்கி கரையோரத்துக்கு நகர்த்தி விடுவதுமாக படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த நகர்வுக்கு விநியோக உதவிகளை வழங்கும் பிரதான படைத்தளமாக திரியாயில் அமைந்துள்ள இராணுவத்தினரும், கடற்படையினரும் இருந்தனர். மொறவெவ - பதவிய பகுதிகளிலிருந்து நகரும் படையினருக்கு இராணுவத்தினர் உதவிய அதேவேளை, திருமலை குச்சவெளியிலிருந்து முன்னேறிய படையினருக்கும் - கடற்படையினருக்கும் திரியாயில் உள்ள கடற்படையினர் விநியோக உதவிகளைச் செய்தனர். கடந்த 23.02.07 அன்று ஆரம்பமான இந்த நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் விதமாக கும்புறுப்பிட்டியிலிருந்த புலிகளின் மூன்று முகாம்கள் படையினரால் கைப்பற்றப்பட்ட சம்பவம் அமைந்தது. இது தவிர பேராறு காட்டுக்குள் இருந்த புலிகளின், பயிற்சி முகாம் ஒன்றும், ஆயுதக் களஞ்சிய முகாம் ஒன்றும், மருத்துவ வசதி வழங்கல் முகாம் ஒன்றும் படையினரால் கைப்பற்றப்பட்டது. இதனால் காயமடையும் புலிகளை மருத்துவ வசதிக்காக வன்னிக்கே கொண்டு செல்லவேண்டிய தேவை இருந்தது. இதுவும் புலிகளை வன்னியை நோக்கி பின்வாங்கச் செய்த காரணமாகும். காட்டுப்பாதை என்றாலும் உணவுக்காகவும், மருந்துவ வசதிக்காகவும், ஆளணி உதவிக்காகவும், காடுகளுக்குள் நீண்ட தூரத்தைக் கடக்கவேண்டியதாக இருந்தது. இது தவிர கடல்மார்க்கமாக வன்னியிலிருந்து உதவிகளை வழங்க புலிகள் எடுத்துக்கொண்ட முயற்சியை, விமானப் படையினர், கடற்புலிகளின் முகாம்கள் மீது அலம்பில் கொக்கிளாய்ப் பகுதிகளில் நடத்திய தாக்குதலால் முறியடிக்கப்பட்டது. இந்த விமானத் தாக்குதலுக்கு முன்னதாகவே விமானப் படையினரால் நாயாறு பகுதியில் உள்ள புலிகளின் வடக்குடனான நேரடி விநியோக மார்க்கப் பகுதிகள் அழிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் புலிகள் கடற்பாதை வழியாக திருமலைக் காட்டுக்குள் உள்ள புலிகளுக்கு உதவுவது சிரமமானதாக அமைந்தது. கடற்புலிகளின் பிரதான தளம் அமைந்திருக்கும் முல்லைத்தீவிலிருந்து கடல் வழியாக நகர்வதும் பாரிய அச்சுறுத்தல் நிறைந்த பயணமாக அமைந்துள்ளது. கடற்படையினரினதும் விமானப்படையினரினதும் தாக்குதல்களுக்கு எந்த நேரத்திலும் உட்படலாம் என்ற அச்சுறுத்தல் இருப்பதால் கடற்புலிகளின் உதவி கிடைப்பதும் நிச்சயமற்றதாகவே இருந்தது. இந்த நிலையில் படையினர் புலிகளை வன்னி பெருநிலப்பரப்பு நோக்கி பின்வாங்கச் செய்யும் திட்டத்தோடு, திருமலை கரையோரப் பகுதியை மையமாக வைத்து திருமலையின் மேற்காகவும், தெற்காகவும் கிழக்காகவும் நடத்திய தாக்குதல் புலிகளின் எதிர்தாக்குதலைக் கட்டுப்படுத்தியது. ஆகையால்




அலசுவது
**- மதியூகி -**

புல்மோட்டையைச் சென்றடைந்த படையினர், அங்கிருந்து வடக்கு நோக்கியதாக அமைந்துள்ள கரையோரப் பகுதியான தென்னை மரவாடி, கொக்கிளாய் ஊடாக நாயாறு பகுதியைச் சென்றடைந்துள்ளனர். நாயாறு வரையான இத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் காயமடைந்ததாகப் புலிகள் கூறினர். படையினருக்கும் - புலிகளுக்கும் எதிர்பார்த்ததை விடவும் குறைந்தளவு இழப்புக்களே ஏற்பட்டுள்ளது. நாயாறு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் இந்தச் சம்பவம் குறித்து நாயாறு மக்கள் கூறும்போது 'கரையோரப் பகுதி நோக்கி படையினர் நகர்வுகளை மேற்கொண்டிருக்கின்றனர் என்ற செய்திகள் வெளிவந்ததுமே நாயாறு பகுதியில் இருந்த மக்கள் தாம் இடம்பெயர்ந்து வன்னி நோக்கிச் செல்லப் போவதாக குடிபெயர்ந்த போதும் அந்த மக்களை தடுத்த புலிகள், தாம் நாயாறு வரை படையினரை முன்னேற விடப்போவதில்லை என்றும், மக்களை நாயாறை வீட்டு வெளியேற விடாமல் தடுத்ததாக கூறுகின்றனர்.

தற்போது நாயாறு பிரதேசம் படையினரின் வன்னிக்கான முகப்பு முன்னரங்காக இருக்கிறது. இது புலிகளின் கரையோர விநியோக மார்க்கத்தை தடைசெய்வதுடன், வன்னி பெருநிலப்பரப்பிலிருந்து கரையோரமாக படையினரை எதிர்கொள்ள வேண்டிய முதன்மை இடமாகவும் உள்ளது.

இந்த நிலையில் நாயாறு பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரின் அடுத்த இலக்கு எது என்பதுதான் இப்போது இருக்கும் கேள்வியாகும். நாயாறிலிருந்து புலிகளில் முதல் தளமாக செம்மலை இருக்கிறது. அதற்கு அடுத்து செம்மலைக்குடி, அது கடந்தால் அலம்பில். அலம்பில் பகுதியிலிருந்து 10 தொடக்கம் 15 கிலோ மீற்றர் தொலைவில் குமுளமுனை எனும் வன்னியின் பெருங்காட்டுப் பிரதேசம் இருக்கிறது. அதாவது நாயாறிலிருந்து எடுக்கும் நகர்வு வன்னிக்குள் நுழையும் நடவடிக்கை என்பதால் புலிகள் கிழக்கிலிருந்து பின்வாங்கியதுபோல் நாயாறிலிருந்து முன்னேறுகின்றபோது பின்வாங்கமாட்டார்கள். ஏன் என்றால் நாயாறிலிருந்து படையினர் முன்னேறி விட்டால், கரையோரமாக முல்லைத்தீவைக் கைப்பற்றுவதே இலக்காக இருக்கும். அத்தகையதொரு நிலை ஏற்பட்டால் புலிகளின் இருப்பு குமுளமுனைக் காட்டுக்குள் சுருங்கிப்போய் விடும். பின்னர் கடற்புலிகளின் மொத்தச் செயற்பாடும் முடக்கப்பட்டுவிடும். அவ்வாறானதொரு நெருக்கடியை புலிகள் ஏற்படுத்தாமல் பாதுகாக்க வேண்டும். ஆனால் நாயாறில் தங்கியிருக்கும் படையினர் அங்கிருந்து முன்னேறும் வாய்ப்பு அதிகரிக்கிறது. இதற்கு ஏதுவாகவே விமானப்படையினரின் தாக்குதல்கள் புலிகளை இலக்குவைத்து நடத்தப்படுகிறது. அலம்பில் பகுதியைக் கைப்பற்றி அங்கு பாரியதொரு கடற்படை முகாமை நிறுவவேண்டியது வட கடல் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முக்கிய தேவையாக அரசுக்கு இருக்கிறது. புலிகளின் கடுமையான எதிர்த்தாக்கம் இந்த களமுனையில் எதிர்பார்க்கப்படுவதால், கனரக ஆயுதங்களுடன் சரியான திட்டமிடல்களும் தயாரிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது. இதற்குச் சான்றாக முப்படைத் தளபதிகளின் அண்மைய கிழக்குக்கு விஜயம் அமைகிறது.

தற்போது நாயாறு பிரதேசம் படையினரின் வன்னிக்கான முகப்பு முன்னரங்காக இருக்கிறது. இது புலிகளின் கரையோர விநியோக மார்க்கத்தை தடைசெய்வதுடன், வன்னி பெருநிலப்பரப்பிலிருந்து கரையோரமாக படையினரை எதிர்கொள்ள வேண்டிய முதன்மை இடமாகவும் உள்ளது. இந்த நிலையில் நாயாறு பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரின் அடுத்த இலக்கு எது என்பதுதான் இப்போது இருக்கும் கேள்வியாகும். நாயாறிலிருந்து புலிகளின் முதல் தளமாக செம்மலை இருக்கிறது. அதற்கு அடுத்து செம்மலைக்குடி அது கடந்தால் அலம்பில். அலம்பில் பகுதியிலிருந்து 10 தொடக்கம் 15 கிலோ மீற்றர் தொலைவில் குமுளமுனை எனும் வன்னியின் பெருங்காட்டுப் பிரதேசம் இருக்கிறது.

# அதிரடி அய்யாத்துரை



**யாழ்ப்பாணத்தில** கடந்த காலங்களில அநாமதேயப் பெயர்களில துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது போல், இப்போது மக்கள் பாதுகாப்பு கண்காணிப்புக் குழு எண்டொரு குழு புதுசா முளைச்சிருக்குது. அவை ரெண்டெழுத்தாரின்ர ஆசீர்வாதம் பெற்றவை எண்டதாலை அவையின்ர தரப்பிலை நடத்தப்படுகிற சம்பவங்களைக் கண்டு கொள்ளாமல் விடுவினம். படைத்தரப்பு சம்பந்தப்பட்டிருந்தால் அதுபற்றி மனித உரிமை அமைப்புக்களில கொம்பிளைண்ட் பண்ணுவினம். அவை கொம்பிளைண்ட் பண்ணாத கொலை, கொள்ளைகளை ரெண்டெழுத்தார்தான் செய்திருப்பினம் எண்டொரு முடிவை மக்கள் எடுத்துக் கொள்ளினமாம். உந்தக் குழு போனவாரம் யாழ். கட்டளைத் தளபதியைச் சந்திச்சு தரவையில படையினர் பயிற்சி எடுக்கினமே, அதை நிறுத்துங்கோ எண்டு கேட்டிச்சினமாம். உப்பிடிச் சொல்லப்போறதை படைத்தரப்பு மறுத்துச்சினமெண்டால் அவைக்குக் காட்டிறதுக்காக ஆதாரங்களையும் கொண்டு போயிருந்திச்சினமாம்.

உவை உதைச் சொன்னதும் கட்டளைத் தளபதி சொன்னாராம், ஓம் நாங்கள் பயிற்சி எடுக்கின்றோம். படையினர் எண்டால் பயிற்சி எடுக்கத்தான் வேணும், அது தப்பில்லையே. அதைவிட தரவையில பாடசாலை மாணவர்களுக்கோ, அல்லது வேறு யாரையும் கட்டாயமாகப் பிடிச்சுக்கொண்டு போயோ யாருக்கும் பலாத்காரமாக பயிற்சி கொடுக்கயில்லையே. அப்புடி ஏதாவது நடக்குதெண்டால் சொல்லுங்கோ, அது பிழையான காரியம், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறன் எண்டாராம் பாருங்கோ. போன குழுவுக்கு முகத்தில அடிச்சமாதிரிச் சொல்லவும் என்ன பதில் சொல்லிறதெண்டு தெரியாம திரும்பி வந்திட்டினமாம். மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறது யார் எண்டதைப் பற்றி எப்புடி இவை வாய்திறந்து கதைக்கிறது. அப்புடிச் சொல்லப் போனால் அது "எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை" எண்ட கதையாகவெல்லோ போகும்.

**தீர்வுத்திட்டம்** வரும் வருமெண்டு வாய்பிளந்து கொண்டு இருந்தவைக்கு இன்னும் ரெண்டுமாசமாவது ஆகலாம் எண்டு செய்திகள் வெளியாகி இருக்குது. சிவப்புக் கட்சியும் காவிக்கட்சியும் ஆலோசனை சமர்ப்பிக்கயில்லை எண்டது சரி, அதிகாரத்தில இருக்கிற நீலக்கட்சியே இன்னும் ஆலோசனையைச் சமர்ப்பிக்கவில்லையெண்டதுதான் சந்தேகத்தைத் தருகுதுங்கோ. மற்றவையளைப் பார்த்து இன்னும் இவை திட்டத்தைத் தரவில்லை எண்டு சொல்லுற அதிகாரத்தரப்பு, தங்கட பக்கம் ஏன் ரொம்ப வீக்காக வச்சிருக்கினம். பச்சைக் கட்சியை விடுங்கோ, அது எதிர்க்கட்சி எண்டதாலை எதிர்க்கவும் செய்யுவினம். அது இந்த நாட்டின்ர சாபக்கேடு. ஆனால் ஆளும் கட்சியே இந்த விடயத்திலை தன்ர பங்கைச் சரியாகச் செய்யவில்லையே எண்டது தான் ஏமாற்றமாக் கிடக்குதுங்கோ.

கட்சிக்குள்ளேயே குழப்பம் எண்டதுக்காக அதிகாரமானவர் அதுகளை பார்த்துக் கொண்டிருக்க முடியாதுங்கோ. அவர் தீர்வுத் திட்டமொன்றை விரைவில முன்வைப்பார் எண்டும், அதற்காகத்தான் அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டியிருக்கிறார் எண்டும் சொல்லிக் கொண்டு வந்தவைக்கு, நீலக் கட்சி இன்னும் தன்ர யோசனையை முன்வைக்க இல்லை எண்டது ரொம்ப எரிச்சலுங்கோ. கிழக்கு மாகாணத்தில சில இராணுவ வெற்றிகள் பெறப்பட்டிருக்குது எண்டது உண்மைதான். அதுக்காக தொடர்ந்து இராணுவ வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றோ தொடர்ந்து வெற்றிபெற்று வன்னியையும் பிடிச்சுவிடலாமெண்டு நினைச்சால் தாக்கம் ரொம்பவும் மோசமாக இருக்கும்.

யுத்தம் செய்யுங்கோ எண்டு குரல்கொடுக்கிறவைக்கும் கொடி பிடிக்கிறவைக்கும் நான் ஒண்டு தான் சொல்லுவன். ரெண்டெழுத்தாரை ஆயுத ரீதியாக அடக்கிப் போட்டால் தமிழ் மக்களுக்கு இருக்கிற அரசியல் பிரச்சினை தீர்ந்து போகும் எண்டு யாரும் பகல் கனவு காணாதேங்கோ. ஏன் எண்டால், ரெண்டெழுத்தாரின்ர பிரச்சினை வேறு, தமிழ் மக்களின்ர பிரச்சினை வேறு எண்டு உலகமே புரிஞ்சு கொண்டிருக்குது. உதை நீங்களும் புரிஞ்சு கொண்டு, புரிஞ்சு கொள்ளாத மாதிரி நடந்து கொள்ள விரும்பினால் அது சின்னப் புள்ளைத் தனமாகத்தான் போய் முடியுமுங்கோ.

**தமிழ்** நாட்டில இருந்து ஆயுதக்கடத்தல் செய்தது ரெண்டெழுத்தார்தான் எண்டு மத்திய குற்றப் புலனாய்வுத்துறை குறிப்பாகச் சொல்லிக் கொண்டிருக்கேக்கையே, எங்கட கூத்தமைப்புக்காரர் தமிழ் நாட்டிலயே நிண்டு கொண்டு எந்த ஆயுதக் கடத்தலுக்கும் ரெண்டெழுத்தாருக்கும் தொடர்பு இல்லை எண்டு சொல்லிக் கொண்டிருக்கினம். உப்பிடி ஒரு பொய்யான செய்தியை கிளப்பிவிட்டு ரெண்டெழுத்தார் மேலை ஏற்பட்டுவருகிற அபிப்பிராயத்தை இல்லாமச் செய்யப் பார்க்கினம் எண்டு ரெண்டெழுத்தாரின்ர தலைவரே தங்களிட்டச் சொல்லச் சொன்னவர் எண்டும் கூத்தமைப்பு எம்.பி.சீறிரகாந்தர் தமிழ் நாட்டில வண்டில் விட்டிருக்கிறார். அவர் எம்.பி.யாகி இன்னும் ஏ-ஒன்பது பாதையிலேயே காலடி பதிக்கயில்லை அவரைக் கூப்பிட்டு அவர் சொன்னாராம் எண்டு என்ன மாதிரிங்கோ குண்டு வெடிக்கிறார். ரெண்டெழுத்தார் உங்க இருந்து குண்டு தயாரிக்க இரும்புக் குண்டுகள் கடத்தினம் எண்டால், இந்த சீறிரகாந்தர் உங்கபோய் குண்டு போடுகிறார் எண்டு அவரின்ர சகாக்கள் கொழும்பில சொல்லிச் சிரிக்கினமுங்கோ. உவர் லோயர் எண்டதுக்காக சி.பி.ஐ. சொல்லிற குற்றச்சாட்டை இல்லையெண்டு நிரூபிக்க முடியுமோ, உவையள் உப்பிடிச் சொல்லிக் கொண்டு டெரரிஸ்டுக்குச் சப்போர்ட் பண்ணிச்சினமெண்டால் எதிர்காலத்தில அண்டை நாட்டுக்குள்ள உள்நுழையும் அனுமதிகூட ரத்துச் செய்யப்படலாம் எண்டு சொல்லினம். பிறகு எங்கட சாத்திர வேந்தனார் போலை "சீ...சீ... அந்தப் பழம் புளிக்கும்" எண்ட கதையாக அண்டைநாட்டைப் பற்றி அறிக்கை விட்டுக் கொண்டு இருக்க வேண்டியதுதானுங்கோ...

**நாட்டு** நடப்பு நாளுக்கு நாள் மோசமடைஞ்சு போய்க் கொண்டிருக்கு எண்டு நமக்குத் தெரியுது. தெரிஞ்சு என்ன பயன். உதைச் சொல்லிக்கொண்டு பயந்து பயந்து வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறம். ஆனால் சில பெரிய ஆக்கள், தங்கட குடும்பத்தோடை நாட்டை விட்டு புலம் பெயர்ந்து போறதுக்கு விண்ணப்பங்கள் செய்திருக்கினமாம். அதிலையும், லண்டன் நாடு எங்கட நாட்டை அச்சுறுத்தல் நிறைந்த நாடாக குறிப்பிட்டிருக்கிறதாலை, அங்கதான் தஞ்சம் கோர வாய்ப்பு இருக்குது எண்டதாலை கொழும்பில இருக்கிற தூதரகத்துக்கு விண்ணப்பங்கள் செய்யப்பட்டிருக்குதாம். அதிலை முக்கால்வாசிப் பேர் அரசியல் பிரமுகர்கள் எண்டு தகவல்கள் கசியுதுங்கோ. ஓடிப்போய் நிண்டுகொண்டு தஞ்சம் கோரினால் அதை சாதகமாக பரிசீலிக்கலாம். உது அரசியல் தஞ்சக் கோரிக்கை, உதை கையாளிறதுல பிரச்சினைகள் இருக்குது எண்டு எம்பசிக்காரர் சொல்லினம். மிச்சமான காவாசிப் பேரிலை ஊடகவியலாளர்கள் ஒரு பங்கெண்டும் சொல்லினம். அரசியல் பிரதிநிதிகளும் - ஊடகவியலாளர்களும் நாட்டில சண்டை வரும் வரை ஓயமாட்டம் எண்டு கொடுக்குக்கட்டிக் கொண்டு உசுப்பேத்திப் போட்டு நிலைமை மோசமடையவும், தஞ்சம் தாங்கோ எண்டு கெஞ்சிக்கொண்டு நிக்கினம். உதில பகிடி என்னவெண்டால் தஞ்சம் கோரி விண்ணப்பிச்சுப் போட்டும், இன்னும் தமிழ் மண், தமிழ்த் தேசியம் எண்டு வாய் கிழியப் பேசி கொண்டும், எப்புடி நடிக்கிறாங்கள் எண்டதுதானுங்கோ. உவங்கள் தானுங்கோ உலக மகா நடிகர்கள் எண்டால் பொருந்துமுங்கோ...வ்...

# ஏணி





**நாம்** வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கையில் சந்திக்கின்றவர்கள், நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றவர்கள் பற்றி எந்தளவுக்குத் தெரிந்து கொண்டு அவர்களுடன் பழகுகிறோம், நம்புகிறோம் என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் இது தொடர்கிறது. நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமல் இருப்பது மேல் என்று சொல்வார்கள். தீமை செய்து விடக்கூடாது என்றால் நன்மையும் செய்ய முடியாது. நன்மையென்று நினைத்து செய்யப்படுகின்ற ஒரு காரியம் தீமையாகவும் மாறிவிடும். நாம் செய்கின்ற காரியம் நன்மையா, தீமையா என்று தெரியாமல் இயங்காமல் இருப்பதில் என்ன நன்மை இருக்க முடியும்.

இயங்காமல் ஒரு ஜடப் பொருளாக இருப்பதைவிடவும், சிகரம் தொடுகின்ற முயற்சியோடு உழைப்பது மேல். நமது வெற்றி என்பது நமக்கு மட்டுமானதல்ல. வெற்றி பெறத்துடிக்கும் புதியவர்களுக்கும், வெற்றியின் விளிம்பில் நின்று கொண்டு அடுத்து வைக்கப்போகும் அடி வெற்றியின் பிடியிலா, பாதாளத்தின் மடியிலா என்பது தெரியாமல் திணறிக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு உற்சாகமாகவும் இருக்கிறது. ஒரு வெற்றியின் பின்னணியில் அதற்காக உழைத்தவர்கள், நம்பிக்கை தந்தவர்கள் என்று சிலர் இருப்பார்கள். அத்தகையவர்கள் பற்றி நாம் கண்டு கொள்வதே இல்லை. ஒருவர் வெற்றியின் உச்சியில் நிற்பதற்கு அவரது பாதங்களை சுமந்து ஏற்றி விட்டவர்கள் மரத்தின் வேர்களைப் போல் மறைந்து கொண்டிருப்பார்கள். அவர்கள்தான் ஏணிகள். அவர்களின் தோள்கள் மீது கால்வைத்து ஏறி வந்து விடுகிறவர்களில் அநேகமானவர்கள் ஏணியாக தாங்கியவர்களை மறந்து விடுகிறார்கள்.

இது ஒருவகையில் நம்பிக்கைத் துரோகமும் கூட. ஏணியாக இருப்பவர்கள் இலாபக் கணக்குப் பார்க்கக் கூடாது என்பது வேறுவிடயம். வெற்றிபெற்ற ஒருவர் அதற்காக உதவியவர்களை மறந்து விட்டு உச்சத்திலேயே நின்று கொண்டால் மீண்டுமொரு சறுக்கலில் விழும்போது அடி பலமானதாக இருக்கும்.

உச்சத்துக்கு ஏறுவது ஏணிகளின் துணை இருந்தால் இலகுவானதுதான். ஏணிகளை மறந்து ஏணிகளை உதைத்துத் தள்ளியவர்கள் இறங்கி வருவது சிரமமாகிவிடும். அதேபோல் நமக்கு உதவி செய்தவர்களை மறந்து நாம் கண்டபடி வாழ்ந்துவிட்டால் மீண்டும் வாழ்க்கையில் துன்பம் வரும்போது உதவ ஆள் இல்லாமல் நிரந்தரத் துன்பம் பிடித்து விடும். ஏற்கனவே உதவியவர்களை உதாசீனப்படுத்திய குற்றச்சாட்டு பதியப்பட்டு இருக்குமானால், புதியவர்கள் கூட உதவ முன்வரமாட்டார்கள். உச்சத்தில் ஏறியவனால் உதைக்கப்பட்டவர்களால் உதைத்து விழுத்தப்பட்ட ஏணிகள் மீண்டும் நிலத்தை விட்டு எழுந்து நிற்பதில்லை. நீங்கள் ஏறிப் பயணிக்க ஒரு ஏணி வேண்டும் என்று நினைக்கும் நீங்கள், இன்னொருவருக்கு ஏணியாக இருக்கிறீர்களா என்பதை சிந்திக்க வேண்டும். இன்னொருவருக்கு ஏணியாக இருக்கமுடியாது என்று நினைக்கும் உங்களுக்கு ஏணியாக இன்னொருவர் இருக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது.

என்னுடைய வெற்றிகளுக்குப் பின்னால் யார் ஏணியாக இருந்தார்கள் என்று நினைத்துப் பார்க்கிறேன். யாருமில்லை. சில வெற்றிகளுக்குள் என்னைப் பொருத்த வேண்டிய சூழ்ல், என்னிடமிருந்து வெளிப்பட்ட முயற்சி என்பனவே என் வெற்றிக்குக் காரணமே தவிர, என்னை




வெற்றியாளனாக்க வேண்டும் என்று திட்டமிட்டு எவரும் என் பாதங்களைத் தாங்கும் ஏணிகளாக இருக்கவில்லை. சில சமயங்களில் சிலருடன் பழகியதற்காகவும், அவர்கள் என்னை ஏற்றிவைத்த ஏணிகள் என்று கூறமுடியாது. இருந்தாலும், அவர்களுடனான பழக்கத்தையும் அவர்கள் என் மீது காட்டிய அன்புக்காகவும் அவர்களை என் மரியாதைக்குரியவர்களாக கௌரவத்தோடு என்றும் நினைவில் கொள்வேன்.

அப்படியானவர்களில் சிலர் என்னை ஏற்றிவிட்ட ஏணிகள் தாங்கள் தான் என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்வதாக அறியும் போது, அதை நிராகரித்து அவர்களின் மனதைக் காயப்படுத்துவதற்கு விருப்பமில்லை. அவர்களின் அன்பு உண்மையானதாக இருந்ததற்காக, எது வெற்றி என்ற யோசனை இப்போது எனக்குள் ஒரு எழுத்தாளனாக ஆகியதாலா, ஒரு அந்தஸ்துக்குரிய இடத்துக்கு வந்ததாலா எது வெற்றி. கவிப்பேரரசு கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதத்தில் ஒரு பகுதியில் சொல்வார், நமக்கு முன்னால் பத்து ரூபாய் தாள் கிடந்தால் இன்னும் சற்று முன்னால் நூறு ரூபாய் தாள் கிடைக்கும் என்று மனம் நினைக்குமாம். அதுபோல் வெற்றியும் நமக்கு முன்னால் காலத்துக்குக் காலம் சூழலுக்கேற்ப இன்னொன்றாக இருந்து கொண்டே இருக்கிறது. தற்போதைய இலக்குகளாக இருக்கும் வெற்றிகளைத் தொடுவதற்கு ஏணிகள் தேவைப்படுகிறது.

அதுவும் முருங்கை மர ஏணிகள் அல்ல, முதுரை மர ஏணிகள். ஏணிகள் வந்து நம்மை ஏற்றி விடாது என்பது உண்மை. ஏணிகளைப் பயன்படுத்தி நாம் ஏறிப்போக வேண்டும். உதைத்து விடும் கால்களுக்குக் கீழாக விழுந்து கிடப்பதற்கு சில ஏணிகள் இருக்கின்ற போதும், எப்போதும் கௌரவப்படுத்தக்கூடியவர்களுக்கு ஏணிகள் அமைவதில்லை. சந்திக்கின்றவர்களில் பலர் கால்களைத் தாங்குபவர்களாக இல்லாமல் கால்களைப் பிடித்து கீழே விழுத்திவிடுபவர்களாகவே இருக்கின்றனர். நான் கடந்த பாதையில் ஏணிகளே என் கால்களைப் பிடித்து இழுத்துவிட்ட துர்ப்பாக்கியம் நடந்தது. பாவம் அந்த ஏணிகள் நான் கடந்து வந்து விட்ட பிறகு விசப் பற்களோடு பாதாளத்துக்குள் கிடந்து நெளியும் பாம்புகளைப் போல் இன்னும் அதே இடத்தில் கிடக்கின்றன. காலை இழுக்கும் ஏணிகள் கௌவரப்படுத்தப்படுவதில்லை. சிலருக்கு தாங்கள் ஏணிகள் என்பதே தெரிவதில்லை. ஏணியாக இருந்தால் ஏறிப்போய் விடுவானோ என்று சில ஏணிகள் நினைக்கலாம். பாவம் அத்தகைய ஏணிகள் அவைகளாலும் மேலே வர முடியாது. ஏணிகள் ஏறிப்போனதாக சரித்திரமில்லை. அடுத்த வெற்றியைத் தொட ஏணிகளின் அவசியம் இருக்கின்றபோதும் என் கால்களைத் தாங்க ஏணிகள் இல்லை. அதற்காக ஏணிகள் வரும் வரை ஓய்ந்து விடப்போவதுமில்லை. கால்களில் பலம் இருக்கிறது. மனதில் உறுதி இருக்கிறது. தளராத நம்பிக்கை இருக்கிறது. வெற்றிப் பயணம் தொடரும். ஏணிகள் கிடைத்தால் சந்தோசம் இல்லையென்றாலும் கவலையில்லை.


பிள்ளைகளின் முதல் ஏணியாக ஒவ்வொரு தந்தையும் இருக்கவேண்டும். ஏணிகளாக இருக்கக்கூடிய தந்தையரைப் பெறாத துர்ப்பாக்கியசாலிகள், வெளியில் ஒரு ஏணியைத் தேடுவது துயரமானதுதான்.

ஏணிகளுக்காகக் காத்திருக்காதீர்கள். ஏறிப்போகும் உங்கள் முயற்சியை தொடருங்கள். வெற்றிக்கு முன்பு வரும் ஒவ்வொரு தோல்விகளும் பின்னடைவில் சிறந்த அனுபவங்கள். அனுபவங்கள் தான் ஒவ்வொருவரையும் பக்குவப்படுத்துகிறது. அனுபவங்கள் தான் உங்களை உலகுக்கு அடையாளப்படுத்துகிறது. ०

**ஏணிகளை மறந்து ஏணிகளை உதைத்துத்தள்ளியவர்கள் இறங்கி வருவது சிரமமாகிவிடும். அதேபோல் நமக்கு உதவி செய்தவர்களை மறந்து நாம் கண்டபடி வாழ்ந்துவிட்டால் மீண்டும் வாழ்க்கையில் துன்பம் வரும்போது உதவ ஆள் இல்லாமல் நிரந்தரத் துன்பம் பிடித்து விடும். ஏற்கனவே உதவியவர்களை உதாசீனப்படுத்திய குற்றச்சாட்டு பதியப்பட்டு இருக்குமானால், புதியவர்கள் கூட உதவ முன்வரமாட்டார்கள். உச்சத்தில் ஏறியவனால் உதைக்கப்பட்டவர்களால் உதைத்து விழுத்தப்பட்ட ஏணிகள் மீண்டும் நிலத்தை விட்டு எழுந்து நிற்பதில்லை.**


**நிரூபித்து காட்டும் என் மலையாள மந்திர சக்தி**
**அதிசயம் ஆனால் உண்மை**





46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திகையில் அறிமுகப்படுத்துவது எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்து காட்டாகவும் மேலும் எனது மாந்திரீக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப்தளம் www.drpksamy .com

**குறிப்பாக மாந்திரீக துறையில் வாங்கும் பணதிற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே**

**வெளிநாட்டவருக்கு விஷேச 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு.**

**ஜேர்மனி அன்பரின் மடல்** மனித தெய்வமாகிய ஐயாவுக்கு ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700KM அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்** பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு: என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்** பெருமதிப்பும் மரியாதையும் கொண்டஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி** தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப் பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல் தீராத தலைவலி தீர்த்துவிட்டது** மதிப்பிற்குறிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி** அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்குப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி** வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்** அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் கூறியது பலிதம்** மரியாதைக்குரிய ஐயா உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாணம் அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை** மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP ஐயா**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO-162 KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-

# டட்லி — செல்வா ஒப்பந்தத்தில் தமிழர் தாயகக் கோட்பாடு

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

**அதிகாரப்** பகிர்வின் அளவைப் பொறுத்தவரை, தமிழர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அதிகாரப் பொறிமுறையொன்றினை வழங்குவதனூடாகவே நாட்டிலுள்ள தமிழர்களுக்கு அரசியல் அதிகாரப் பகிர்வின் சரியான இடத்தை வழங்குவது சிறந்ததென பண்டா - செல்வா ஒப்பந்தமும், டட்லி - செல்வா ஒப்பந்தமும் ஏற்றுக் கொண்டிருந்தன. இருந்த போதிலும், இந்த இரண்டு ஒப்பந்தங்களுமே எவ்வித முன்னேற்றங்களையும் எட்டவில்லை. உண்மையில், அவை வெறும் வார்த்தைகளாகவே இருந்தன. மகிமைப்படுத்தப்பட்ட மாநகர சபைக்கான அதிகாரப் பகிர்வே இதுவென்று, விமர்சகர்கள் இது குறித்துக் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பின்னடைவுகளுக்கு மத்தியிலும், இந்த ஒப்பந்தத்தை ஓர் இணக்கப்பாடாக ஏற்றுக்கொள்ளத் தமிழ் அரசியல் சமூகம் தயாராக இருந்தது.

1958ஆம் ஆண்டின் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) மசோதாவை அமுலாக்கும் பொருட்டு, 1966 ஜனவரியில் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டவிதிகளை நிறைவேற்றியதன் மூலம் இந்த ஒப்பந்தத்தின் முதலாவது கட்டம் கௌரவிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை கௌரவிக்கும் நோக்கினை சாதகமான அறிகுறிகள், தமிழ் அரசியல் சமூகத்தில் அபரிமிதமான ஆர்வத்தை ஏற்படுத்தியது. அவர்கள் இணக்கப்பாட்டுக்காக முன்வைத்த தமது ஆரம்பக் கோரிக்கைகளையும் கைவிடத் தயாராகவிருந்தனர். கீழ்க்கண்ட வரலாற்று நிகழ்வுகள் அதற்குச் சான்று பகர்கின்றன.

1. 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர், முதல் தடவையாகத் தமிழர்கள், 1966ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் மனப்பூர்வமாகப் பங்குபற்றினர். அதுகாலவரை சுதந்திர தினம், துக்க தினமாகவும் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்கும் தினமாகவுமே இருந்து வந்திருக்கின்றது.

2. 1966ஆம் ஆண்டு ஜுன் மாதம் கல்முனையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டின் இறுதிநாளன்று பிரதமர் டட்லி சேனநாயக்கா கௌரவ பேச்சாளராகக் கலந்து கொண்டார். பிரதான தமிழ் அரசியல் கட்சியொன்றின் கூட்டத்தில் பேசுவதற்கு நாட்டின் தலைவர் ஒருவர் அழைக்கப்பட்ட முதலாவதும் ஒரேயொரு சந்தர்ப்பமும் இதுவேயாகும். அவர் தனது உரையில் கீழ்க்கண்டவாறு கூறினார்.

*"நான் பிரதமராக இருக்கும் வரை, தமிழ் மொழியும் பண்பாடும் என்றுமே பாதிக்கப்பட மாட்டாது என்று தமிழர்களுக்கு உறுதியளிக்க விரும்புகின்றேன். இலங்கையைப் போன்ற பல்லின நாடொன்றில் பல்வேறு குழுக்களின் கலாசாரத்தையும் மொழியையும் பேணிப் பாதுகாப்பது ஜனநாயகத்தின் முக்கிய அங்கம் என்பதை நீங்கள் என்னுடன் சேர்ந்து ஏற்றுக் கொள்வீர்கள். சுதந்திரத்தின் கனிகளை நாம் அனுபவிக்க வேண்டுமானால் இந்த இன சௌஜன்யம் பேணப்பட வேண்டும்."*

**சிப்பாயல்ல, மாஜிஸ்திரேட்டே இடமாற்றம் செய்யப்பட்டார்!**

**"அப்பாவித் தமிழர்கள் மீது அரச படையினர் நடத்திய அடாவடித்தனம்" என்ற தலைப்பில் கடந்த வாரம் வெளியான ஆய்வறிக்கையில், தவறொன்று நேர்ந்து விட்டது. "செவிப்புலனற்ற சலவைத் தொழிலாளி ஒருவரை வீதியில் வைத்து சுட்டுக் கொன்ற சிப்பாய் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு, அப்போதைய பருத்தித்துறை மாஜிஸ்திரேட் எஸ்.என். இராஜதுரை பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். இந்தச் சிப்பாய் உடனடியாகவே குருநாகலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்." என்று குறிப்பிடப்பட்டிருந்தது. செவிப்புலனற்ற சலவைத் தொழிலாளியை சுட்டுக் கொன்ற சிப்பாய் இடமாற்றம் செய்யப்படவில்லை. அந்தச் சிப்பாயை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட அப்போதைய பருத்தித்துறை மாஜிஸ்திரேட் எஸ்.என்.இராஜதுரையே உடனடியாக குருநாகலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்பதே சரியானது.**

**வரலாற்றுக் காலம் தொட்டு இந்த நாட்டுத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதிகள், அட்டூழியங்கள், பாரபட்சங்கள் பற்றி எடுத்து விளக்கும் ஆய்வறிக்கையின் மற்றொரு பகுதி இவ்வாரம் பிரசுரமாகின்றது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் பங்குபற்றும் முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பீ. எஸ்.தவராஜா இந்த ஆய்வறிக்கையைச் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தார்.**

3. பிரதமர் டட்லி சேனநாயக்காவை வரவேற்பதற்கு 1966ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் திரண்டிருந்தமை, யாழ்ப்பாண வரலாறு கண்ட புதிய அத்தியாயமாகும். இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய இரு ஏட்டிக்குப் போட்டியான கட்சிகளும் தமது வேறுபாடுகளைக் கை விட்டு விட்டு, பிரதமரை வரவேற்பதற்காக ஒன்று திரண்டன. கடந்த காலங்களில் கறுப்புக் கொடிகள் மட்டுமே அமைச்சர்களை வரவேற்ற யாழ்ப்பாணத்தில், இதற்கு முன்னரோ, பின்னரோ இவ்வாறானதொரு வரவேற்புக் காட்சியைக் காண என்றுமே முடிந்ததில்லை.

நான் வளரிளம் பருவத்தினனாக இருந்தபோது இச் சம்பவத்தை நேரடியாகக் கண்டிருக்கின்றேன். நகரம் பூராவுமே வர்ணமயமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. யாழ். ரயில்வே நிலையத்துக்குச் செல்லும் வீதி, வாழைக்குலைகள் கொண்ட வாழை மரங்களாலும், தென்னங் குருத்துகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



1961ஆம் ஆண்டு திருகோணமலையில் தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது எடுக்கப்பட்ட படம். தந்தை செல்வநாயகத்துடன் அப்போதைய மூதூர் எம்.பி. ரி.ஏகாம்பரம், திருமலை எம்.பி.என்.இராஜவரோதயம் ஆகியோர் வலதுமிருந்து இடமாக காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையிலிருந்து பிரதமர் உரையாற்றிய போது, அங்கு திரண்டிருந்த பெருந் திரளான மக்கள் எவ்வாறு வாழ்த்தொலி கிளப்பினார்கள் என்பதை என்னால் இப்போதும் நினைவு கூரக் கூடியதாக இருக்கின்றது.

தலைவர் அவர்களே, சிங்களத் தலைமைத்துவம் இந்த ஒப்பந்தத்தைக் கௌரவித்துப் பேணுமென்று தமிழ் அரசியல் சமூகம் நம்பியது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இந் நிகழ்வுகள் அனைத்தையும் நான் குறிப்பிட்டுக் கூறுகின்றேன். நான் குறிப்பிட்ட வரவேற்பு, இந்த நாட்டின் பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பல்ல; தமிழர் பிரச்சினை தொடர்பாக அப்போது ஐ.தே.க. கொண்டிருந்த கொள்கைக்கு அளிக்கப்பட்ட வரவேற்பே அதுவாகும்.

எனினும், அதற்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள், தமிழர்களின் கணிப்பீடு பிழையானது என்பதை நிரூபித்து விட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு ஏற்பட்ட அதே கதி டட்லி - செல்வா ஒப்பந்தத்திற்கும் ஏற்பட்டது. இந்த் இரண்டு ஒப்பந்தங்களும் ஒரே தலைவிதியைச் சந்தித்தமைக்கான காரணமும் கூட ஒன்றுதான். அதாவது, புத்தபிக்குகளின் உணர்வுகளைப் பயன்படுத்தி, பிரதான எதிர்க்கட்சிகள் இலாபம் தேட முனைந்ததே இதற்கான காரணமாகும். 1966 நவம்பர் - டிசம்பர் மாதங்களில் மாவட்ட சபைகளை அமைப்பதற்கான நகல் சட்டவாக்கமும், புத்த பிக்குகளிடமிருந்து எழுந்த வலுவான எதிர்ப்பின் காரணமாகவே கைவிடப்பட்டது.

தலைவர் அவர்களே, மாவட்ட சபை ஒப்பந்தம் பூரணமாக அமுல்படுத்தப்படுவதற்கு அப்போது தென்னிலங்கை அனுமதி அளித்திருந்தால், எமது நாடு இன்றைய காலகட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுபிட்சம் ஆகியவற்றைப் பொறுத்தவரை, சிங்கப்பூரையும் மலேசியாவையும் விட எவ்வளவோ தூரம் முன்னேறியிருக்கும்.

1966 - 1968 காலப்பகுதியில், தமிழருக்கு எவ்வித அரசியல் இலாபமும் இல்லாதபோதும் ஐ.தே.க.வுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி வழங்கிய உறுதியான ஆதரவு, தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு எதிராகக் கடுமையான விமர்சனங்கள் எழுவதற்குக் காரணமாக அமைந்தது. 1966 ஜனவரியில் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்கூட, அதன் உண்மையான தன்மைக்கேற்ப அமுல்படுத்தப்படவில்லை.

அரசாங்கத்துக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்ளுமாறு கோருமளவிற்கு, விமர்சனங்கள் எழுந்தபோது, திரு.செல்வநாயகம் தனது கட்சி உறுப்பினர்களுக்கு கூறியது இதுதான்.

***"அரசாங்கம் தற்பொழுது நெருக்கடிக்கூடாகச் சென்று கொண்டிருப்பதால், அதற்கு அழுத்தம் கொடுப்பது புத்திசாலித்தனமானதல்ல. நெருக்கடியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் தமிழர்கள், ஓரளவிற்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தாம் இணைந்து கொண்ட கட்சியை அந்தரத்தில் விட்டுப் போவது தமிழர்களின் தேசிய குணாம்சத்திற்கு ஏற்புடையதல்ல."***

***"நிபந்தனையற்ற விதத்தில் ஆதரவளிப்பேன் என்று பிரதமருக்கு நான் உறுதியளித்துள்ளதோடு, அவரைக் கைவிட்டுவிடமாட்டேன் என்றும் நம்பிக்கை கொடுத்துள்ளேன்."***

1960களின் பிற்பகுதியிலிருந்த தமிழ் இளைஞர்கள் விரக்தியுற்று, சகிப்புத் தன்மையை இழக்கத் தொடங்கினர். இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம், தமது பாராளுமன்றத்துக்குப் புறம்பான உத்திகள் ஊடாகவும், ஜனநாயக வழிமுறை ஊடாகவும், பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 'தமிழ் இலட்சியத்திற்கு' தீர்வு காணத் தவறிவிட்டதென்று அவர்கள் கண்டார்கள்.

டட்லி சேனநாயக்கா தலைமையிலான அரசாங்கம் தம்மைக் கைவிட்டு விடாது என்றும், ஒப்பந்தத்தைக் கௌரவிக்கும் என்றும், நம்பிக்கை கொண்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம், அரசாங்கத்திற்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வந்தது. தமிழ் இளைஞர்களின் கோபத்தினால் பெரும் நெருக்கடியை சந்தித்த ஒரு தருணத்தில் அவர்கள் அவ்வாறு செய்தார்கள். அதிகரித்து வந்த இந்தக் கோப உணர்வு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 'மூளை' என்று வர்ணிக்கப்பட்ட வீ.நவரட்ணம் எம்.பி.போன்றோர் கட்சியை விட்டு வெளியேறி, தமிழர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு பிரிவினை கோருவதே ஒரே வழி எனக் கூறி, 'சுயாட்சிக் கழகம்' என்றழைக்கப்பட்ட ஒரு கட்சியை உருவாக்கக் காரணமாக அமைந்தது.

தமிழ் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வந்த கோப உணர்வையும், அதன் பின் விளைவுகளையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அப்போதைய தலைமைத்துவம் நன்கு உணர்ந்து கொண்டது. 1967 நவம்பரிலும் 1968 ஜனவரியிலும் பிரதமரைத் தொடர்ச்சியாக இரு தடவைகள் திரு.செல்வநாயகம் சந்தித்தபோது தெரிவித்த எச்சரிக்கையின் மூலம் இது தெளிவாகிறது. அதனை கீழே குறிப்பிடுகின்றேன்.

***"அரசாங்கத்தினால் ஏமாற்றமடைந்துள்ள, எனது கட்சியின் ஒரு பிரிவினர், பிரிந்து செல்லப் போவதாக அச்சுறுத்துகின்றனர். தமிழ் இளைஞர்களின் இந்த ஏமாற்றம் நீண்ட நோக்கில் நாட்டுக்குத் தீங்காக அமையும்."***

***"நான் அமைதியாக இருக்கத் தயாராக இருக்கின்றேன், ஆனால் இளைஞர்கள் அவ்வாறு இருக்கத் தயாராக இல்லை. நீங்கள் எங்களைக் கைவிட்டு விடலாமென்று அவர்கள் கூறுகின்றார்கள். என் மீது அவர்கள் கொண்டிருக்கும் மரியாதையின் காரணத்தினால் அவர்களை என்னுடன் சேர்த்துச் செல்ல முடிகின்றது. நான் ஏமாற்றப்படுகின்றேன் என்று அவர்கள் உணரத் தலைப்பட்டால், அவர்களின் பார்வையில் நான் முட்டாளாகத் தென்படுவேன். அதன் பின்னர் அவர்கள் என்னை மதிக்க மாட்டார்கள். தமிழ் இளைஞர்கள் மத்தியில் எனது செல்வாக்கைத் தக்க வைப்பதற்கு உதவச் சிங்களத் தலைமைத்துவம் தவறுமேயானால், அவர்களே இறுதியில் இழப்பைச் சந்திக்க வேண்டியவர்கள் ஆவர்."***

திரு.செல்வநாயகத்தின் இரண்டாவது கூற்றுத் தொடர்பாகப் பிரதமர் கூறியதாக நான் அறிந்தவற்றை மீண்டும் சொல்கின்றேன்.

***"நான் அதனைப் புரிந்து கொள்கின்றேன். தமிழ் இளைஞர்கள் மீதான கட்டுப்பாட்டை நீங்கள் இழப்பீர்களேயானால், சிங்களவர்களே பாதிக்கப்படுவார்கள்."***

தலைவர் அவர்களே, இவை தீர்க்கதரிசனமான வார்த்தைகள். இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டியது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவமேயென்று சிங்கள அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் கூட அதிகளவில் கண்டனங்கள் தெரிவித்ததை நான் கண்டுள்ளேன். இது மிகவும் மோசமான, கணிப்பீடாகும்.

தமது சமூகம் பாரபட்சத்தின் உச்ச நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென்றும், சம நிலையை ஏற்படுத்துவதற்குச் சிங்களவர்களுடன் எதுவிதமான இணக்கப்பாட்டினையும் ஏற்படுத்துவதற்கான சாத்தியம் இல்லையென்றும், தமிழ் இளைஞர்கள் உணர்ந்த போதுதான் இருக்கக் கூடிய ஒரே ஒரு வழி வன்செயலில் ஈடுபடுவதே என்று அவர்கள் உந்தப்பட்டனர்.

1970ஆம் ஆண்டின் புதிய ஐக்கிய முன்னணி அரசாங்கம், பல்கலைக்கழக அனுமதிக்கு அறிமுகப்படுத்திய 'இனரீதியான கோட்டா முறை' இளைஞர்களின் கோப உணர்வுக்கு மேலும் வலுவூட்டியது. இது தமிழ் மாணவர்களின் உணர்வுகளுக்கு எரியூட்டியதோடு, அவர்களை வன்செயலில் ஈடுபடவும் தூண்டியது.

இந்தப் புதிய பல்கலைக்கழக அனுமதி முறையும், அரசியல் நோக்குக் கொண்ட 'மாணவர், இளைஞர் அமைப்புகளை தோற்றுவித்தது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய ஒரேயொரு கருத்தோட்டம் பிரிவினை' என்பதனை அவர்கள் கொண்டிருந்தனர். ஐம்பதுகளின் மத்தியில் இந்த எண்ணக்கரு ஆரம்பத்தில் திரு.சுந்தரலிங்கத்தினாலும் அறுபதுகளின் பிற்பகுதியில் திரு.வி.நவரட்ணத்தினாலும் மீண்டும் முன்வைக்கப்பட்ட போதிலும், பாரபட்சத்துக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் அதனை தமது சுலோகமாக முன்வைத்த போது மட்டுமே, தமிழ் அரசியல் சமூகத்தின் வேருக்குள் அது ஊடுருவத் தொடங்கியது. அவர்களின் உணர்வுபூர்வமான கோரிக்கை அதனை யதார்த்தமாக்கியது.

தமிழ் அரசியல் சமூகத்தில் புதிதாக உருவான இந்த எண்ணக்கரு, அரசு இயந்திரத்திற்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட இளைஞர்களின் வன்செயலோடு இணைந்து இந்த நாட்டிலுள்ள தமிழ் அரசியல் சமூகத்தின் மற்றொரு திருப்புமுனையாக மாறியது. அவர்களின் வேலைப்பாணி, 1970களின் ஆரம்பத்தில் பெரும் தொகையான இளைஞர்களை ஈர்த்தது.

1970களின் பொதுத் தேர்தலில் ஒப்புதலைப் பெறத் தவறிய ஓர் எண்ணக்கரு, ஒரு சிறிய கால இடைவெளிக்குள் தளம் பெறத் தொடங்கியது. பொதுத் தேர்தலின் போது அதனைப் பரீட்சார்த்தமாக முன்வைத்த 'சுயாட்சிக் கழகம்' படுமோசமாக தோல்வியுற்றது. அவர்கள் தனியொரு ஆசனத்தைக் கூட பெறத் தவறினார்கள் என்பது மட்டுமல்ல, தேர்தலில் மிகக் குறைந்த வாக்குகளையே பெற்றனர்.

பங்களாதேஷின் மாணவர் மற்றும் இளைஞர் அமைப்பான 'முக்தி பஹ்னி' இயக்கம் கொரில்லா அமைப்பாக மாறி, பாகிஸ்தானிடமிருந்து 1971 டிசம்பரில் பிரிந்து சென்று பெற்ற வெற்றி, அப்போதைய காலகட்டத்தில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கைக்கான பாரிய தாக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்திய ஒரு புறநடை அம்சமாகும்.

பிரிவினைச் சுலோகத்துடன் இளைஞர் அமைப்புகள் பெற்ற வெற்றியை உணர்ந்து கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி, 1972 ஜனவரியில் பல்வேறு தீர்மானங்களுக்கு மத்தியில் கீழ்க்கண்ட தீர்மானத்தையும் எடுத்தது.

"தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு வந்துள்ளதால், தமிழினம் பிரிவினைவாத வழிக்கு அரசாங்கத்தினால் தள்ளப்பட்டுள்ளது. இந்த நாட்டிலுள்ள தமது பாரம்பரிய தாயகப் பூமியில் ஆட்சி புரிவதற்கு தமிழர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்று, இக்கட்டத்தில் இந்த மாநாடு கோருகின்றது.


அவர்கள் அத்துடன் நின்று விடவில்லை. தமிழ் அரசியல் சமூகத்தின் மத்தியில் அவர்களின் செல்வாக்குக் குறைந்து வருவது தவிர்க்க முடியாததால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட ஏனைய பாரம்பரிய தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்து, (தமிழர் ஐக்கிய முன்னணி) என்ற ஐக்கியக் கூட்டணி ஒன்றினை 1972 மே மாதம் ஸ்தாபித்தனர். இளைஞர் வன்செயல்கள் தொடர்பான சகல வழக்குகளிலும் இலவசமாகத் தோன்றுவதற்கு தமிழர் ஐக்கிய முன்னணியின் சட்டத்தரணிகளைக் கொண்ட குழு ஒன்றினையும் உருவாக்கினர். **(தொடரும்)**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**இந்த** அம்மையார் ஜெமினியின் 'அவ்வையார்' படத்தில் அவ்வையாராகத் தோன்றி, தமிழர்களின் உள்ளங்களையெல்லம் அள்ளிக் கொண்டு போனார் என்பது சாஸ்வதமான உண்மை.

திருமதி கே.பி.சுந்தராம்பாள் அவர்கள் 'நந்தனா'ராக நடித்த அதே படத்தில் வேதியராக நடித்தவர் மிகப் பெரிய கர்நாடக சங்கீத வித்வான். இன்றைய இசைப் பெருங் கலைஞராக



நம்மிடையே வாழும் பெரியவர் செம்மங்குடியின் குருநாதர் அவர்தான். நந்தனார் படத்தில் வேதியராக நடித்த அந்த மகா வித்வான் கையாண்டதுபோல், 'மோகன' ராகத்தை இதுகாறும் இன்னொருவர் கையாண்டதில்லை. இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சங்கீத மேதைகளில் ஒருவராகத் திகழ்ந்து, சினிமாவிலும் நடித்த அந்த இசை மேதைதான், 'சங்கீத பூபதி' திரு. மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர் அவர்கள். அவரது சகோதரர் திரு. எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தியும், அந்நாளில் திரைப்படக் கதாநாயகர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

இன்றைய புகழ் வாய்ந்த திரைப்பட நட்சத்திரம் திருமதி லட்சுமியின் தந்தை, அந்நாளில் புகழ்வாய்ந்த இயக்குநராகத் திகழ்ந்தவர். அவர் இயக்கிய வெற்றிப் படங்கள் பலவற்றுள், இன்றும் நினைவில் நிலைத்து நிற்பது, எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த 'சிந்தாமணி' ஆகும்.

அந்த இயக்குநரின் பெயர் திரு. வை.வி.ராவ். அவரே மிகச் சிறந்த நடிகரும்கூட. அவர் ஓர் அருமையான படத்தை இசைப் பிரியர்களுக்காகவே இயக்கி வழங்கினார். அந்தப் படத்தின் பெயர் 'பக்த ராமதாஸ்'.

இந்தப் படத்தில் 'பக்தராமதாஸ்' என்னும் கதாநாயகன் பாத்திரத்தை ஏற்று நடித்தவர், அந்நாளைய கர்நாடக சங்கீத வித்வான்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. களக்காடு ராம நாராயண அய்யர் ஆவார்.

'கவிராஜ காளமேகம்' என்னும் திரைப்படம், சிறந்த கர்நாடக இசைக்காகவே அந்நாளில் ரசிகப் பெருமக்களால் வெகுவாக விரும்பப்பெற்றது. மிகச் சிறந்த சங்கீதமேதை ஒருவர் 'காளமேகம்' பாத்திரத்தை ஏற்று நடித்திருந்தார். நடித்தது மட்டுமல்லாமல், அந்தப் படத்தின் பாடல்களையும் அவரே பாடினார். ஓர் இசை மேதை சிறப்பாகப் பாடினதில் என்ன வியப்பு இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். அவர் தொழில் ரீதியாகப் பாடகரல்லர்; வாத்தியக்காரர்.

ஆம், அவர்தான் அகில உலக நாதஸ்வர சக்கரவர்த்தி என்று இன்றளவும் அனைவராலும் போற்றிக் கொண்டாடப் பெறும் திரு. டி.என்.ராஜரத்தினம் பிள்ளை அவர்கள்.

'ரவை ஜாதி சாரீரம், பிர்க்கா சாரீரம்' என்றெல்லாம் சங்கீத விமர்சகர்களால் முத்திரை குத்தப்பெற்ற அற்புதமான சாரீரத்தை வரமாகப் பெற்றிருந்தவரும், கர்நாடக சங்கீதத்தின் 'சூப்பர் ஸ்டா'ராகத் திகழ்ந்தவருமான, திரு.ஜி.என்.பாலசுப்பிரமணியம், அந்நாளைய திரைப்படக் கதாநாயகர்களில் ஒருவராகத் திகழ்ந்த சங்கீதக்காரர். 'சகுந்தலை, உதயணன், வாசவதத்தை' - முதலிய படங்களில் இந்த இசை மேதை கதாநாயகனாக நடித்திருக்கிறார்.

இவருக்கு இணையாக 'சகுந்தலை' படத்தில் நடித்தவர் இசையரசி திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள். ''பக்தமீரா' படத்தில் திருமதி எம்.எஸ். அவர்கள் பாடிய பாடல்கள் சாகாவரம் பெற்றவை. கர்நாடக இசைத் துறையிலும், சினிமாத்துறையிலும் கௌரவமான இடத்தைப் பெற்றிருக்கும் அம்மையார் திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள், லதா மங்கேஷ்கர் போன்றவர்களாலேயே பெரிதும் ஆராதிக்கப் பெற்றவர்.

அந்நாளில், திருமதி எம்.எஸ். அவர்களுக்கு இணையாக விளங்கிய, கர்நாடக இசையில் முன்னணிப் பாடகியாகத் திகழ்ந்த இன்னொரு பெண்மணி, இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஒரே தியேட்டரில் ஓடிய ஒரு வெற்றிப் படத்தின் கதாநாயகியாக நடித்தவர். அவர்தான் திருமதி என்.சி.வசந்தகோகிலம். 'ஹரிதாஸ்' படத்தை மறக்க முடியுமா என்ன?

'கங்காவதார், குண்டலகேசி, கிருஷ்ண விஜயம்' முதலிய படங்களில் திருமதி என்.சி.வசந்தகோகிலத்தின் பாடல்கள் இன்னமும் என் நினைவில் பசுமையாக நிற்கின்றன.

அதேபோல், அந்நாளில் கர்நாடக இசை உலகம் போற்றிக் கொண்டாடிய இன்னொரு அம்மையார் ஏராளமான திரைப்படங்களில் பின்னணியாகப் பாடி, நம் நெஞ்சங்களையெல்லாம் அள்ளிச் சென்றது உண்டு. அவர்தான் கான சரஸ்வதி திருமதி .டி.கே.பட்டம்மாள்.

ஜெமினி அதிபர் திரு.வாசன் அவர்கள் தயாரித்த 'நந்தனார்' படம் நம் நினைவை விட்டு நீங்கி விடுமா என்ன? காலத்தால் அழிக்கவொண்ணா கானங்களை அந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்தவர், தமிழர்களுக்குப் பரம்பரைச் செல்வமாக வழங்கிப் போயிருக்கிறார் என்று சொன்னால் அது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை எந்த சங்கீத ரசிகனும் ஒத்துக் கொள்வான். (தொடரும்)






**இன்று** புலிகளுக்கு ஆதரவாக நின்று புலிகள்தான் தமிழ்பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று வழமைக்கு மாறாக சுருதி மாறி குழல் ஊதும் பிரமுகர்கள் அன்று என்ன நிலைப்பாட்டை கொண்டிருந்தார்கள்?...

அவர்களது அன்றைய நிலைப் பாட்டை தமது கொள்கையாக தலைமேல் ஏற்று புலிகளுக்கு எதிராக களமிறங்கிய தொண்டர்கள் இன்று என்ன ஆனார்கள்? இவைகள் குறித்த சில வாலாற்றுக் குறிப்புகளை இங்கு மறுபடி மீட்கவேண்டியுள்ளது.

இத்தொடரில் சற்று பின்னோக்கிய பழைய வரலாறுகளை


ஆனந்தசங்கரி

ஆராயலாம் என்பதுதான் எண்ணம். ஆனாலும் அதற்கு ஒரு முன்னோட்டமாக இவைகளையும் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

உள்ளூரில் புலிகளின் பெயரைச் சொல்லி அரசியல் நடத்தினாலும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் புலிகள் குறித்த விமர்சனங்கள் வரும்போது நெழிந்து வழிந்து குழைந்து நியாயம் கூற முடியாமல் திணறடிப்பது தமிழ் தேசிய கூட் டமைப்பினரின் அந்தரங்க நிலை.

இதை அவர்களே காதும் காதும் வைத்தது போல் கூறியும் வருகின்றனர்.

2001 ஆம் ஆண்டு தேர்தல் கால கட்டத்தில் கொழும்பில் ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டது. அது அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் திரு.ஆனந்தசங்கரி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.

2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை மாலையில் கொழும்பு பம்பலப்பிட்டி வெஸ்ரன் ஹோட்டலில் அந்த பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டது.

முன்னைநாள் வடக்கு, கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பின்னாள் ரெலோ இயக்க பேச்சாளருமாகிய அபூஜாசப் தலைமையில் நடந்த மேற்படி மாநாட்டில் ஆனந்தசங்கரி அவர்கள் சில விடயங்களைத் தெரி வித்திருந்தார்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே! எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இதையே நாம் தொடர்ந்தும் வலி யுறுத்துவோம்!

1994 இல் சமாதானத்தைக் கொண்டுவரப்போவதாக ஆட்சிக்கு வந்த சந்திரிகா இன்று தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத்தை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார். ரணில் பிரதமரானால் பிரபாகரன் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார் என்றும் சந்திரிகா கூறிக்கொண்டி ருக்கிறார். சிலவேளை பிரபாகரன் மக்களால் தெரிவுசெய்யப்பட்டாலும் கூட சந்திரிகா அந்தக் கதிரையை விட்டு அசையமாட்டார்.

புளொட் இயக்கம் தனது கைகளில் உள்ள, அரசாங்கம் கொடுத்த ஆயுதங்களைக் கீழே போட்டால் மாத்திரமே தமிழ்க் கூட்டமைப்பில் அவர்களை இணைத்துக்கொள்ள முடியும். அரசுக்கு சார்பானவர்களை எம்முடன் இணைத்துக்கொள்ள முடியாது! இவ்வாறு தெரிவித் திருந்தார் ஆனந்தசங்கரி!

இது ஆனந்தசங்கரி அவர்களது அன்றைய கருத்தாக இருந்தது.

இதில் ரெலோ முக்கியஸ்தர் சிறீஸ்கந்தா பேசும் போது

யுத்தத்தினால் அழிந்து கொண்டிருக்கும் எமது மக்களை காப்பதற்கு நடந்து கொண்டிருக்கும் போராட்டம் ஒரு தியாக வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கும் இவ்வேளை யில், ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்திருக்கும் நாமும் இணைந்து கொள்வதற்காகவே நான்கு கட்சி கூட்டமைப்பை உருவாக்கியிருக் கின்றோம்.

நீண்ட காலமாக தமிழ் இனம் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயம் இன்று நிறைவேறியிருக்கின்றது.

ஒற்றுமைப்பட்டுள்ள தமிழினம் நான்கு கட்சி கூட்டமைப்பை வெற்றி கொள்ளச்செய்து பாராளுமன்றத்திற்கு அனுப்பினால் எமது பலத்தை ஜனநாயக ரீதியில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டத்திற்கு பக்கபலமாக செயற்படுவோம் என்றார் அவர்.

ஆனந்தசங்கரி அவர்களின் கருத்து குறித்தும் சிறிகாந் தாவின் கருத்து குறித்தும் 11.11.2001 ஞாயிறு வீரகேசரி பத்திரிகையில் செய்தியாக வெளிவந்திருந்தன.

சிறிகாந்தாவை புலிகள் போட்டியிடுமாறு நிர்ப்பந்தித்தது திருமலை மாவட்டத்திற்கு. அங்கு ஒரு ஆசனம் மட்டும் தான் கிடைக்கும் என தெரிந்திருந்தும், அது சம்பந் தனுக்கே கிடைக்கும் வாய்ப்பு இருக்கும் என தெரிந்திருந்தும் புலிகள் சிறீகாந்தாவை அங்கு தான் போட்டியிட வேண்டும் என கட்டாயப்படுத்தியிருந்தனர்.

இந்த தமிழ்த் தேசிய கூட்டைமைப்பின் உருவாக்கத் திற்கு முன்னின்று செயலாற் றியவர் தராக்கி எனப்படும் சிவராம். அவரோடு இணைந்த சிலரும் இந்த முயற்சியில் புலிகளின் தூண்டுதலால் ஈடுபட்டிருந்தார்.

சிறிகாந்தாவின் இரட்டை முகம் காட்டும் பேச்சு குறித்து பல விமர்சனங்கள் எழுந்தன. தாம் ஜனநாயக வழி என்று கூறுகின்றார். அதே நேரத்தில் நடந்து கொண்டிருக்கும்

**தேடனார்**

போராட்டத்திற்கு பக்க பலமாக தாமிருப்போம் என்றும் கூறுகின் றார்.

ஜனநாயக வழிக்கு வந்தவர்கள் ஆயுதப்போராட் டத்திற்கு ஆதரவளிக்க மாட்டார்கள். ஆனால் அதற்கு மாறாக சிறீகாந்தா கருத்து கூறியிருந்தார்.

புலிகள்தான் ஏகப் பிரதிநிதிகள் என்று ஆனந்தசங்கரி கூறிய கருத்து வீரகேசரியில் வெளிவந்ததும் ரவீராஜ் தனக்கு நெருக்கமானவர்களோடு அதற்கு மாறான சில கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

ஆனாலும் ரவிராஜ் தனது வாய் திறந்து தானும் புலிகள் தான் ஏகப் பிரதிநிதிகள் என்ற கருத்தையும் கூறியிருந்தார்.

(சாட்சிகள் தொடரும்)




**காவல்** படையினரும் துப்பாக்கிகள் சகிதம் பிடல் தங்கியிருந்த ஓவராஸின் வீட்டைச் சுற்றி வளைத்தனர்.

ஓவராஸின் பெற்றோர் நகரில் முக்கியமானவர்களில் ஒருவர் என்பதால், அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாகப் படையினர் கலைந்து சென்றனர். அதற்குப்பின் பிடல் அங்கு செல்லவில்லை. தலைமறைவாக இருந்தார். பிடலை வெளியில் காணாமல் அவர் ஓடி ஒளிந்து விட்டதாக கிராவின் ஆதரவாளர்கள் பிரசாரம் செய்தனர். இதற்குப் பதிலடியாக பிடல் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதாவது, 'நான் உயிருடன் இருக்க வேண்டியது கியூபாவிற்கும், வரலாற்றிற்கும் தேவை' என்பதாவே அந்தப் பதில் இருந்தது.

பல நாட்களுக்குப் பிறகு அடையாளம் தெரியாத சிலரால் சுதந்திரமணி கிராவின் மாளிகைப் படியில் விட்டுச் செல்லப்பட்டதாகத் தகவல் கிட்டியது. அந்தமணி மீண்டும் மான்சானிலோவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. மான்சானிலோவின் கம்யூனிஸ்ட் மேயராக இருந்த பிரான்சிஸ்கோ 1958 இல் பட்டிஸ்டாவின் கைக்கூலிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிடலின் தலைமறைவுக்குப் பின்னர் கிராவின் ஆட்சியில் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்பட்டது. சட்டம், ஒழுங்கு மோசமாக மீறப்பட்டது. இதைச்

தருவது
**எம். கேஷிகன்**

சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சில குழுக்கள் புரட்சி என்று கூறிக்கொண்டு கொலை, கொள்ளை எனச் செய்து வந்தனர். இலஞ்சமும், ஊழலும் பெருகின. இவற்றுக்கு முடிவு கட்டாமல் வேடிக்கை பார்த்தபடி இருந்த கிரா, 1948 இல் நடக்க வேண்டிய குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் மீண்டும் போட்டியிடப் போவதாக அறிவித்தார். அதற்கு ஏற்றவாறு சட்டத்தையும் திருத்துவதாகவும் அறிவித்தார். 1948 ஆம் ஆண்டு கியூபாவில் பெரும் கொந்தளிப்பான ஆண்டாகக் கருதப்பட்டது.

### பிடலின் பயணம்!

"புரட்சி" என்ற சொல்லைக் காப்பாற்றினால் மட்டும் போதாது. அதற்கு எப்படி உயிர் கொடுப்பது என்று திட்டம் தீட்டியவருக்கு உதித்தது. "புரட்சிகர இயக்கம்" ஒன்றை கட்டியெழுப்புவதுதான் இதற்கான சரியான வழி. இதற்காக ஆர்தோடக்கோ, கட்சியில் நம்பிக்கைக்குரிய இளைஞர்களை உள்வாங்கி அவர்களைப் போராட்டுத்துக்குத் தயார் செய்தார்.

ரால் ரோ கார்சியா "1940 இல் எழுதிய அரசியல் சட்டம் பாதை போட்டதேயன்றி குறிக்கோள் அதுதான் என்ற இடத்தைத் தரவில்லை" என்று எழுதினார். இந்தப் பேராசிரியர் 1959 இல் பிடல் அமைத்த அமைச்சர் சபையில் வெளிவிவகார அமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் புரட்சி இயக்கம் பற்றி ஜோஸ் மார்டி குறிப்பிட்ட கருத்துக்களும் பிடலின் ஞாபகத்தை விட்டகலாதவை. அதாவது, "ஒரு புரட்சிகர இயக்கமானது போராடி அழிய வேண்டும் அல்லது வெற்றிமகுடம் சூடவேண்டும். இரண்டு முடிவுகளுக்கும் இடையில் தடுமாறக் கூடாது" என்பதாகும்.

புரட்சி இயக்கத்தில் மாணவர்கள் இணைந்து கொண்டாலும் புரட்சியின் அடுத்த நகர்வு எங்கே குறிவைத்துள்ளது என்பது தொடர்பில் மாணவர்களிடத்தில் கேள்விகள் எழத் தொடங்கின. இந்தக் கேள்விகள் பிடலை நோக்கி வந்த காலகட்டத்தில், 1940ஆம் ஆண்டு மான்சானியோ நகரத்திலிருந்து நாட்டின் மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவரான ஜீசஸ் மெணன்டஸ் லொரண்டோ என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி பரவியது. இந்தச் செய்தி கேட்டு பிடல் அதிர்ந்தார். ஜீசஸ் மெணன்டஸ் பிறப்பால் கறுப்பினத்தவராக இருந்தாலும் செல்வாக்கும், சுறுசுறுப்பும், அர்ப்பணிப்பும் நிறைந்த சிறந்த



தொழிற் சங்கவாதியாக இருந்தார். அரசின் தவறான கொள்கைளைக் கண்டித்து தொழிற் சங்கங்களைக் கூட்டி எதிர்ப்பார். இதனால் இவர் குறிவைக்கப்பட்டார். தொழில் துறை அமைச்சராக இருந்த கார்லோஸ், தொழிற் சங்கங்களிலிருந்து கம்யூனிஸ்டுகளைக் "களை" எடுப்பது என்ற போர்வையில் கொலை செய்வது, இலஞ்சம் கொடுத்து மெண்டோவின் தொழிற் சங்கங்களுக்கு எதிராகவும், தனக்கு ஆதரவாகவும் இயங்கும் படியான வகையில் "சுதந்திர தொழிற் சங்கம்" என்ற பெயரில் புதிய தொழிற் சங்கங்களை உருவாக்குவது என பலதரப்பட்ட வேலைகளையும் செய்து கொண்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக மெணன்டோவைக் கைது செய்யும்படி காவல் துறையினரைக் கேட்டார். இதையடுத்து காவல்துறை மெணன்டோவைக் கைதுசெய்யச் சென்றபோது, தான் நாடாளுமன்ற வேலைகளில் ஈடுபட்டிருப்பதால் தன்னைக் கைது செய்ய முடியாது என மெணன்டோ எதிர்த்தார்.

கதைத்துக் கொண்டிருக்கும்போதே காவல்துறை அதிகாரி தன் கைத்துப்பாக்கியால் மெணன்டோவைச் சுட்டார். மெணன்டோவின் மரணச் செய்தி காட்டுத் தீ போல் கியூபா முழுவதும் பரவியது.

(அசத்தல் தொடரும்)


# பாடம் புகட்டிய வியட்நாம்




**அவர்களும்** தங்கள் பொதிகளை தூக்கிக் கொண்டு சென்றார்கள். இறுதியாக ஒரு வியட்கொங் இராணுவ வீரன் தனக்குரிய பொதியைத் தூக்கும் போது அதில் இரும்புக் குண்டுகள் அசைவது போல் சிறு சத்தம் தோன்றியது. உடனே அதில் என்ன இருக்கும் என்று இராணுவத் தளபதிக்கு சந்தேகம் வந்தது. அதனால் அவனின் பொதியைக் காட்டும்படி கட்டளையிட்டான்.

அவனின் பொதியில் உண்மையில் கைக்குண்டுகளும் குண்டுகளும் இருந்தன. அவற்றைப் பரிசீலித்தால் மற்றவர்களும் மாட்டிக் கொள்வார்கள் என்ற பயத்தினால் அவன் மற்றவர்களை விரைவில் சென்று விடும்படி கட்டளையிட்டான். அவர்களும் மிகவும் விரைவாக அவ்விடத்தை விட்டு அகன்று செல்லத் தொடங்கினார்கள். இவனைச் சுற்றி வளைத்த படையினர், பொதியில் என்ன இருக்கிறது என்று கேட்டார்கள். இவனும் என் துணிமணிகள் மற்றும் வியாபாரத்திற்காக கொண்டு வந்த பொருட்கள் என்று பதிலளித்தான். அவனின் பதிலிலிருந்த மிடுக்குத் தோற்றத்தைக் கண்ட அமெரிக்க சிப்பாய் கோபமடைந்து அவனைத் தாக்கினான். தாக்குதல் வேகத்தில் அவன் கீழே விழுந்தான். அவனிடம் என்ன பையில் இருக்கிறது என்று சுற்றி நின்று கேட்டார்கள். அவனும் தனது பையைத் திறந்து ஒரு கைக்குண்டின் மூடியை உள்ளிருந்தே கழற்றி விட்டு எடுத்துக் காட்டினான். பயந்து பின்வாங்கி ஓடும் முன்னே அக்கைக்குண்டியை வீசியெறிந்தான் அவர்களின் முன். அது வெடித்ததைத் தொடர்ந்து தன்னிடமுள்ள அனைத்துக் கைக்குண்டுகளையும் வீசியெறிந்தான். கடைசியில் நேரக்குண்டு ஒன்றினை வெடிக்க வைக்க முற்படுகையில் சரமாரியாக அமெரிக்கப் படைகள் துப்பாக்கியால் சுடத் தொடங்கினார்கள். துப்பாக்கி ரவைகள் அவன் உடலைத் துளைத்துக் கொண்டு சென்றன. அவன் எப்படியாவது அக்குண்டை வெடிக்க வைப்பதற்காகத் திரியை





பற்ற வைத்து விட்டு இறந்தான். சுற்றி இருந்த அமெரிக்கப்படைகள் சிதறியோட முற்படுகையிலேயே அக்குண்டு வெடித்துச் சிதறியது. பெரும்பாலான அமெரிக்கப்படைகள் அவ்விடத்திலேயே இறந்தார்கள்.

அவர்களைத் தூக்குவதை விட்டுத் வியட்கொங் இராணுவத் தினரைப் பிடிப்பதற்காக துரத்திச் சென்றார்கள். எப்படியாவது அவர்களை பிடித்து விட வேண்டும் என்று துரத்திச் சென்றார்கள். அவர்கள் தங்களுக்கு அடித்து விட்டார்கள் என்று பெரும் கோபம் கொண்டு இருந்தார்கள். அவர்களின் கோபத்திலும் நியாயம் இருந்தது. ஆனாலும் தங்கள் நாட்டிற்காகப் போராடுவதால் வியட்கொங் இராணுவத்தினரைக் குறைசொல்வதற்கில்லை என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

துரத்திச் சென்ற அமெரிக்க படையினர், வியட்கொங் இராணுவத்தினரைச் சுற்றி வளைத்து பிடித்துக் கொண்டனர். எங்கும் தப்பிக்க முடியாமல் அனைவரும் கைதாகினார்கள். கைதாகிய அனைவரையும் அமெரிக்க படைகள் தங்கள் முகாம்களுக்கு எடுத்துச் சென்றார்கள். அவர்கள் மூலமாக இன்னும் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். அதன் பின்பு தான் இறந்த தங்கள் சகாக்களின் சடலங்களைத் தூக்கிக் கொண்டு அவ்விடத்தை அப்புறப்படுத்தினார்கள். அவர்களின் வீர தியாகங்களைப் பெரிதும் பாராட்டினார்கள் அனைவரும். ஆயினும் ஜனாதிபதிக்கு இன்னும் ஏதாவது ஆபத்து வரும் என்று எண்ணினார்கள். இதனால் ஜனாதிபதியை வியட்நாமுக்கு வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டான் ரிக். ஆயினும் தான் எப்படியாவது வியட்நாமிற்கு வரவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி விடாப்பிடியாக இருந்தார். இவ்வாறிருக்கையில் ஜனாதிபதிக்கு பூரண பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கடுமையான உத்தரவு பெண்டகன் தலைமையகத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று எல்லாவகையான தரவுகளையும் ரிக் தனது நெருங்கிய உயர் அதிகாரிகளுடன் சேர்ந்து எடுத்துக் கொண்டிருந்தான். அதற்கிடையில் வியாகி மூலம் பெற்ற தகவல்களை வைத்து வியட்கொங் இராணுவத்தினரின் புதிய முகாமினை தாக்குவதற்கும் திட்டம் தீட்டப்பட்டது ரிக் தலைமையில் அதற்காக விமானப்படை தயாராகவும் இருந்தது. துரைமார்க்கம் மூலம் வியட்கொங் இராணுவத்தினரை நெருங்க முடியாது என்பதைத் தெரிந்து வைத்திருந்தார்கள். அதனால் எப்படியாவது விமானம் மூலம் தங்கள் வெற்றியை நிர்ணயித்து விடலாம் என்றும் திட்டம் தீட்டினான் ரிக். அவனின் திட்டமும் நன்கு இருந்தது. ஆனாலும் ஜனாதிபதி வந்து போகும் வரை எதும் செய்யவேண்டாம் என்று கட்டளையிட்டான். ஆனாலும் எந்நேரமும் தாக்குதலுக்குத் தயாராக இருக்கவும் என்றும் கட்டளையிட்டான். அவனின் கட்டளையில் உண்மையில் ஒரு விடயம் அடங்கியிருந்தது என்பதை மறுக்க முடியாது.

ஜனாதிபதி வருவதற்கு இன்னும் இருநாட்களே இருந்தது. வியட்நாமின் பாதுகாப்பு 4 மடங்காக உயர்ந்திருந்தது. அனைத்து வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டது. அனைத்து வணக்கஸ்தலங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டது. சுந்தேகத்திற்கிடமானவர்கள் என்று கருதிய அனைவரையும் சிறையில் அடைந்தார்கள். காரணம் கேட்டால் ஜனாதிபதி வந்து போன பின் விட்டு விடுகிறோம் என்றார்கள். வட, தென் வியட்நாம் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது. எந்த வழியாலும் எந்த ஒரு நபரும் நுழைய முடியாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.


(தொடரும்)


## விலங்குகளைக் கொல்லாமல் கிடைக்கும் இறைச்சி

விலங்குகளைக் கொன்று பெறும் இறைச்சியை ஆய்வுக் கூடத்தில் செயற்கையாகவே உருவாக்கிக் கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தற்போது பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குகள் கொல்லப்படுவதன் மூலம் நாம் இறைச்சி பெறு கிறோம். ஆனால் எதிர்காலத்தில் இதற்கு முடிவு கட்டி ஆய்வுக் கூடங்களிலிருந்து நேரடியாக இறைச்சியே கிடைக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் விரும்புகின்றனர்.



விலங்குகளிலிருந்து பெறப்படும் திசுக்கள் ஆய்வுக்கூடங்களில் வளர்க்கப்படும் போது அவை இறைச்சியாகின்றன. இவற்றை வேண்டிய அளவுக்குக் கொழுப்பு மற்றும் சத்துக்களையும் அவற்றிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்பதும் இந்த முறையில் செயற்கை இறைச்சியை தற்போதே ஆய்வுக்கூடத்தில் உருவாக்க முடியும். ஆனால் வர்த்த ரீதியில் ஒட்டு மொத்தமாக உருவாக்குவது பற்றிதான் இப்போது பேச்சே.






ஒரு செல்லிலிருந்து இந்த உலகத்துக்குத் தேவைப்படும் இறைச்சியை விலங்குகளைக் கொல்லாமலேயே உருவாக்கிக் கொள்ள முடியும். முதலில் மருத்துவத் தேவைக்காக விலங்குகள் செல்கள் திசு வளர்ப்பு முறையில் அதிகரிக்கப்பட்டன. தற்போது இறைச்சித் தேவையையும் பூர்த்தி செய்ய விஞ்ஞானிகள் விரும்புகின்றனர். விலங்கு செல்தான் இதற்கு மூல ஆதாரம் என்றாலும் ஆய்வுக்கூடங்களில் வளர்ந்த கறி விலங்கிலிருந்து எடுக்கப்படவில்லை என்பதால் அது சைவமா அசைவமா என்ற சர்ச்சை கூட எதிர்காலத்தில் எழும்.

## ஜீன்ஸின் கதை

**இன்று** புழக்கத்தில் உள்ள உடையான ஜீன்ஸின் கதை தெரியுமா உங்களுக்கு? 1873ஆம் ஆண்டுகளிலேயே ஜீன்ஸ் தைக்கும் துணி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அதனை லெவிஸ்டிராஸ் என்கின்ற ஜெர்மனியர் கண்டுபிடித்தார். கண்டு பிடித்த இடம் அமெரிக்கா. இந்த ஜீன்ஸ் துணி பிரான்ஸ் நாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பருத்தியை கொண்டு 'செர்க் டெனிம்' என்கின்ற முரட்டு துணி தயாரிக்கப்பட்டது. அதுவே ஜீன்ஸ் உடை தயாரிக்க பயன்படுத்தப்பட்டது. இன்று யாரை கேட்டாலும் ஜீன்ஸ் உடை டெனிம் என்கின்ற முரட்டு துணியை கொண்டு தயாரிக்கப்படுகிறது என்று சொல்வார்கள்.



இந்த டெனிம் என்கின்ற பெயர் செர்க் டெனிம் என்கின்ற பெயரின் பின் பகுதியிலிருந்து வந்ததுதான். ஆரம்பத்தில் அமெரிக்காவில் டெனிம் துணியில் தைக்கப்பட்ட உடையை காவலர்கள் மட்டுமே அணிந்து வந்தனர். 1940 வாக்கில்தான் உலகம் முழுதும் இவ்வுடையை உற்று நோக்க ஆரம்பித்தனர். பெரும் புகழ் அடைந்து எல்லோரும் அணிய ஆரம்பித்தது 1980களில்தான்.



## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## உடல் எண் - 9, உயிர் எண் - 3

9, 18, 27 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் இவர்கள் செவ்வாய், குரு ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

முத்துப் போன்ற பற்களையும் கம்பீரமான தோற்றத்தையும் கொண்ட இவர்கள் துடுக்காகவும், சிறந்த கருத்துக்களுடனும் பேசுவர். கேள்வி ஞானம் கொண்ட இவர்கள், பிறரைக் கேள்வி கேட்பதிலும் பலரை வேலை வாங்குவதிலும் எதிரியை மடக்கிப் பேசுவதிலும் திறமை வாய்ந்தவர்கள். உடல் வலிமையும், மன வலிமையும் பெற்றவர்கள். பொதுவாக பெயர் நன்றான அமைந்தவர்கள் எல்லா வசதிகளையும் பெற்று வாழ்வர்.

நாட்டைப் பாதுகாக்கும் இராணுவம், பொலிஸ் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாத இவர்கள், தனது உள்ளக் கருத்துக்களைப் பிறர் பயன்படும்படி தெளிவாக வெளியிடுவர். தொழில் செய்யும் சிலர், பலரை வேலை வாங்கும் தொழிற்சாலைகள், கட்டிட வேலைகள், காண்ட்ராக்ட் வேலைகள் போன்றவைகளைச் செய்து பிறருக்கும் வேலை வாய்ப்பளித்துத் தானும் உயர்வர். நேர்மை, நீதி, தனக்கென்று ஒரு கொள்கை போன்ற குறிக்கோளோடு எப்போதும் விழிப்புணர்ச்சியோடு செயல்படுவர். சில நேரங்களில் முன் கோபத்தால் கடுமையாக நடந்து கொள்ளுவர். பின் அதை நினைத்து வருந்துவர்.

நாட்டுப்பற்றும் மதப்பற்றும் கொண்ட இவர்கள் தன் நாட்டையும், தனது சமூகத்தையும், தனது சமயத்தையும், உயர்த்த எண்ணுவர். கடுமையான உழைப்பாளியாகிய இவர்கள், மன வேகம் உடையவர்கள். இவர்கள் சிந்தனை மிகத் தெளிவானது. எப்பொழுதாவது சிரிப்பர். அந்தச் சிரிப்பு முழுமையாக இருக்காது. கடுமையானவர்போல நடந்து கொள்வர். ஆனால் தன்னைச் சார்ந்தவர்களுக்குத் தக்க தருணத்தில் உதவ முன்வருவர். தனக்கு மூத்தவர்களுக்கும், அறிஞர்களுக்கும் மரியாதை கொடுப்பர். அதே நேரத்தில் தனக்கு மரியாதை கொடுக்கவில்லையென்றால் யாராக இருந்தாலும் தூக்கி எறிந்து பேசுவர்.

தனக்கு வரும் எதிர்ப்புக்களை அழிப்பதற்கு பல சூழ்ச்சிகளைச் செய்து தருணம் பார்த்துத் தகர்த்தெறிந்து விடுவார். இவர்கள் அதிகம் சிரித்தால் ஆபத்தானது. இந்த எண்ணிக்கையில் பெரிய விஞ்ஞானிகள், பெரிய தொழில் அதிபர்கள், பெரிய விஞ்ஞானிகள், பெரிய தொழில் அதிபர்கள், பெரிய வியாபாரிகள், பட்டதாரிகள், வக்கீல்கள், டாக்டர்கள், உயர் உத்தியோகஸ்தர்கள் போன்றவர்கள் அதிகம் காணப்படுகிறார்கள். பெயர் நன்றாக அமையாவிட்டால் எல்லாவிதமான திறமையிருந்தும் கல்வியில் தடை ஏற்பட்டும், தனது முன்னேற்றத்தில் இடையூறுகள் ஏற்பட்டும், குடும்ப வாழ்க்கையில் குழப்பங்கள் ஏற்பட்டும் வீண் விவகாரங்களில் தலையிட்டு சிக்கலில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றனர். இதனால் பெயரை நல்ல எண்களில் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம். இவர்கள் மனம் தொழிற்சாலைகளிலும் புதுமையான விஞ்ஞானக் கருவிகளையும், பழமையான சரித்திரங்களைப் படிப்பதாலும் அமைதி கொள்ளும்.

இளமையிலேயே பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகியிருந்தாலும், பெயர் நன்றாக அமையப் பெற்றவர்கள் படிப்படியாக உயர்ந்த நிலையை அடைந்து கொண்டே வருவர். தனது தகுதியை உயர்த்திக் கொள்ள எப்போதும் அரும்பாடுபடுவர். சிற்றின்ப விஷயங்களில் மிதமாக நடந்து கொள்வது அவசியம். தூரதேசப் பயணங்களை மேற்கொள்வதாலும் வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளுவதாலும் தனது அறிவையும் புதிய தொழில் முறைகளையும் வளர்த்துக் கொள்வர்.

இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விட்டால் நல்ல ஆரோக்கியம், நல்ல மனைவி, நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் ஆகியவற்றைப் பெற்று, கடைசிவரை பிறரை அதிகாரம் செய்து கொண்டே இருப்பர். அப்படிப் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் தனக்கு வரும் நல்ல வாய்ப்புக்களை நழுவ விட்டுவிட்டு திறமை இருந்தும் ஏதாவது ஒரு குறையுடன் மன வேதனையுடன் வாழ்வர். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்களில் மாற்றி அமைத்துக் கொண்டு சிறப்பாக வாழலாம்.

***தொழில்:*** காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், கட்டிடத் தொழில், மெட்டல் சம்பந்தமான தொழில், எழுதுதல், பேசுதல் போன்றவற்றால் இலாபம் பெறுதல், தொழிற்சாலைகள், எண்ணெய் வியாபாரம், பல பொருள் வியாபாரம், வாகனம் போன்றவற்றால் உயர்வடைவர்.

***நோய்:*** நரம்பு சம்பந்தமான வியாதிகள், வாயுக்கோளாறு, இடுப்பு வலி, சர்க்கரை வியாதி, உஷ்ண சம்பந்தமான வியாதிகள், வயிற்றுக்கோளாறு, அரிப்பு வியாதி, தோல் வியாதி போன்றவைகள் வந்து நீங்கலாம்.

***பெயர் அமைக்கும் முறை:*** செவ்வாய், குரு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு 27, 36, 45, 21, 39; 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் - 9, 3, 5
யோகமான திகதிகள் - 9, 18, 27; 5, 14, 23; 3, 12, 21, 30
யோகமான மோதிரக் கல் - பவளம், எமிதிஸ்டு, நவரத்தினம்
யோகமான நிறம் - சிவப்பு, கத்தரிப்பூக்கலர், ரோஸ், வெளிர் நீலம், மஞ்சள். ஆரஞ்சு.
ஆகாத திகதி - 2, 11, 20, 29; 7, 16, 25
ஆகாத நிறம் - பச்சை



ஈடு நினக்கோர் தெய்வமுண்டோ?
எனக்குனை யன்றிச் சரணுமுண்டோ?
வாடு நிலத்தைக் கண்டிரங்கா
மழையினைப் போல் உள்ள முண்டோ?

- சுப்பிரமணிய பாரதியார்

# பெண்ணரசி!

**பதின்மூன்றாம்** நூற்றாண்டில் ஒரு முஸ்லிம் பெண்மணி டில்லி அரியணையில் அமர்ந்து பேரரசியாகவும், ஒரு நல்ல ராணியாகவும் திகழ்ந்தார் என்றால் அது மிகவும் ஆச்சரியமான விஷயம் அல்லவா? இந்திய வரலாறு சொல்லும் முக்கியமான செய்திகளில் இதுவும் ஒன்று. சுல்தான் அல்டாமிஷ் தன் புதல்வியான ரஸ்ஸியாவின் திறமையையும் வீரத்தையும் நன்றாக அறிந்திருந்தான்.

"என் மைந்தர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள். எனவே, என் வாரிசு ரஸ்ஸியாதான். இந்த என் கட்டளையை முறைப்படி எழுதி மக்களுக்கு அறிவித்து விடுங்கள்," என்று தன் மந்திரிகளுக்கு உத்தரவிட்டான். இது மந்திரிகளுக்குப் பிடிக்கவில்லை. ஒரு பெண்ணா முஸ்லிம்களின் வீர அரியணையில் வீற்றிருப்பது என்றும் நிகழாத புதுமை இது! என்று முணுமுணுத்தனர்.

நான் குவாலியர் மீது படையெடுத்த போது என் புதல்வி பிரதிநிதியாக ஆட்சி செலுத்தினாளே, நன்றாக ஆளவில்லையா? என்றார்.

மந்திரிகளால் பதில் சொல்ல முடியவில்லை. அரசனின் விருப்பத்திற்குச் சம்மதம் தெரிவித்தனர். ஆனால், சுல்தான் இறந்தபின் தங்கள் விருப்பப்படியே நடந்து கொள்வோம் என்று தங்களுக்குள் தீர்மானித்தனர். அப்படியே, அல்டாமிஷ் காலமானதும், ரஸ்ஸியாவின் தாயாதிகளில் ஒருவனை




அரசனாக்கினர்.

அவனுக்கு உரிமையும் இல்லை; வலிமையும் இல்லை. இவன் தாய் துருக்கி அடிமைப் பெண்களில் ஒருத்தி; பேராசைக்காரி. தன் மகன் பெயரால் தானே எல்லாம் செய்தாள். ரஸ்ஸியாவையும் கொன்றுவிட்டால் தன் கவலை முற்றும் நீங்கிவிடும் என்று நம்பினாள். இவளது சூழ்ச்சி எண்ணத்தை அறிந்து கொண்ட ரஸ்ஸியா, வண்ணச் சேலை உடுத்தி ஒரு வெள்ளிக்கிழமையில் டில்லியின் முக்கிய மசூதிக்குப் போனாள். அங்கே தொழுகைக்கு வந்திருந்தவர் அனைவரும் வெண்ணிற உடை தரித்திருந்தனர். அக்கூட்டத்திற்கு வண்ணச் சேலை தரித்து வருவோர் ஏதோ ஒரு வகை மனக்குறை உடையவர் என்பதை அனைவரும் அறிவர். இது சுல்தான் அல்டாமிஷ் ஏற்படுத்திய ஒரு பழக்கம். பச்சை உடையில் ரஸ்ஸியா வந்திருந்ததால் அந்தப் புனித நிறம் அங்கு வந்திருந்த முஸ்லிம் மக்களின் கவனத்தைச் சிறப்பாக ஈர்த்தது.

முஸ்லிம் சகோதரர்களே! நான் உங்களிடம் செய்து கொள்ள வேண்டிய விண்ணப்பம் ஒன்று உண்டு என்று ரஸ்ஸியா தொடங்கினாள்; என் தந்தையார் நேர்மையுடனும் அன்புடனும் தன் நீண்ட ஆட்சிக் காலத்தில் மக்கள் குறைகளைத் தீர்த்து வந்தார். அவர் காலமான பின்னர் நான் எவரிடம் என் குறைகளை முறையிட்டுக் கொள்வேன் என்பது தெரியவில்லை என்று சொல்லிக் கொஞ்சம் நிறுத்தினாள்.

என் தந்தையார் எத்தனையோ தடவை உங்களுக்கு நீதி வழங்கியிருக்கிறாரே. அந்த மாதிரி

## பாப்பா முரசு சிறுகதை

நீதியை தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன் என்றாள்.

அம்மையே! உனக்கு நாங்கள் செய்யக்கூடிய உதவி என்ன என்பதை தயவு செய்து தெரிவிக்க வேண்டும் என்று பல குரல்கள் ஒரே நேரத்தில் ஒலித்தன. பின்னர் ரஸ்ஸியா தனக்குச் சகோதரன் முறையிலுள்ள தாயாதிக்காரன் இழைத்து வரும் அநீதிகளைக் குறிப்பிட்டு அவனுடைய தாய் தன்னைக் கொன்றுவிடத் திட்டமிட்டிருப்பதையும் தெரிவித்தாள்.

உடனே மக்கள் ஆவேசமுற்றனர்; ஆரவாரித்தனர். அவளுக்குத் தாங்கள் எத்தகைய உதவியும் செய்வோம் என்று வாக்களித்தனர். 'டில்லி அரசே' என்று விளித்தனர். இப்படி ஏறி அமர்ந்தாள் டில்லி அரியணையில் ரஸ்ஸியா. சிம்மாசனத்தில் ஏறிய முதலாவது முஸ்லிம் பெண்ணாக இவளைப் போற்றி மக்கள் இவளிடம் விசுவாசத்துடன் நடந்து கொண்டனர்.

இதற்கு முன் அரசப் பிரதிநிதிகளாக இருந்த முஸ்லிம் பெண்மணிகள் உண்டு. சுல்தான் பதவியில் பெண் ஒருத்தியும் அமர்ந்ததில்லை. இவளுக்குப் பின் தான் இங்கிலாந்தின் அரசியானார் விக்டோரியா.

அரசாங்கத்தை நடத்துவதென்றால் அந்த நாளில் ஒரு பெண்ணுக்கு எளிதான காரியமாகுமா? ஒரே முள்ளுக்காடாகக் கிடந்த ஆட்சிப் பாதையை ஒருவாறு செப்பனிட முயன்று, நீதியை இரக்கத்துடன் கலந்து மக்களுக்கு வழங்கியவள் சுல்தானா ரஸ்ஸியா என்பது வரலாற்றுப் பேராசிரியர்களின் கருத்து.

பெண்ணாய் பிறந்ததுதான் இவளது தீவினை. மற்றபடி ஒரு பேரரசனுக்குரிய இலக்கணங்கள் எல்லாம் இவளிடம் இருந்தது. அந்தக் குழப்பம் மிகுந்த காலத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இவளது ஆட்சிக்காலம் நீடித்துச் சென்றதே ஒரு புதுமை தான். இவள் முகத்திரையைக் களைந்து, நேர் கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும், எவர்க்கும் அஞ்சாத தோரணையும் உடையவளாகிப் போர்க்கோலம் பூண்டு காட்சி அளித்ததும் முஸ்லிம் தலைவர்களுக்கு அதிருப்தியையும் சீற்றத்தையும் உண்டாக்கின. வீரம் என்பது ஆண்மை தான், பெண்மைக்கு உரியதன்று என்ற கொள்கை தலை நிமிர்ந்த காலமது. அந்தப் பழக்கத்தைக் கைவிட்டு முகமலர்ந்து மக்களுக்கு காட்சி வழங்கிய ரஸ்ஸியாவின் ஒழுக்கத்தைக் குறித்தும் ஐயப்பாடுகள் தோன்றின.

கலகக்காரர்களில் ஒருவனும், ஒரு மாகாணத் தலைவனுமான அல்தூனியா என்பவனை ரஸ்ஸியா மணந்து கொண்டாள். அதனால் கலகம் அடங்கிவிடக் கூடுமென்று எதிர்பார்த்தாள். ஆனால், அதற்கு மாறாகக் கலகம் பரவலாயிற்று. முடிவில் ரஸ்ஸியாவும் அவள் கணவனும் பிடிபட்டு கொலையுண்டனர். இவள் சகோதரர்களில் ஒருவன் அரியணையில் அமர்ந்தான். ஒரு சமயம் பிடிபட்டுச் சிறைப்பட்டதும் இவள் சிறை காவலிலிருந்து தப்பிவிட்டாள்.

எனினும் அரியணையை மீட்டுக் கொள்ளும் முயற்சியில் தோல்வியுற்று ஒரு காட்டில் அடைக்கலம் புகுந்தாள். ஆணுடையில் மறைந்து இருந்த இவளது நகைகளுக்காக ஒரு குடியானவன் இவளைக் கொன்றுவிட்டான். இவளைப் புதைத்த இடத்தில் ஒரு சமாதிக் கோயில் இன்றும் இருக்கிறது. புதுடில்லியிலுள்ள இக்கோயிலுக்கு யாத்திரிகர்கள் போவதுண்டு.

# ஆத்திசூடி

## புகழ்ந்தாரைப் போற்றி வாழ்


நீ உலகம் போற்றிப் புகழும் அறிவுடைய பெரியோர்களை மதிக்க,
அவர்களின் அறிவுரைகளைக் கேட்டுத் தெளிந்து அதனை வாழ்வில் கடைப்பிடி.
-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.


# உலக அதிசயம்

## அமைதின்னா...அமைதி

மெக்ஸிக்கோ நாட்டில் துராங்கோ பாலை வனப் பகுதியில் அமைதி மண்டலம் என்றொரு பகுதி உள்ளது. அங்கே டி.வி., ரேடியோ சிக்னலைப் பெறுவது கடினம். இதனால் நிசப்த மான பகுதியாக இந்த இடம் திகழ்கிறது. இங்கே சில நேரங்களில் தீப்பந்து மழை பெய்வதாகவும் உள்ளூர் பகுதி மக்கள் கூறுகிறார்கள். மயான அமைதி நிலவும் பகுதி என்பதால் இங்கே மக்கள் நடமாட அஞ்சுகிறார்கள்.




## கண்விழித்த பிறகும்...



கண் விழித்த பிறகும் எத்தனைபேர் உடனடியாக எழுகிறார்கள், தெரியுமா?...94 சதவீதம் பேர் மட்டுமே இரவில் தூங்கி காலையில் எழுகிறபோது சட்டென்று எழுந்து விடுகிறார்கள். 6 சதவீதம் பேரால் உடனடியாக எழ முடிவதில்லை. இவர்களால் கை, கால்களை சிறிது நேரத்திற்கு அசைக்க முடிவதில்லை. பேச்சும் இயல்பாக வருவதில்லை. இதற்கு தூக்க வாதம் என்று பெயர்.

## அமெரிக்கக் குழந்தை

அமெரிக்காவில் ஆகஸ்ட் மாதத்தில்தான் அதிக அளவில் குழந்தைகள் பிறக்கின்றன. குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதிலும் அமெரிக்கர்களின் பாணி தனிதான். இவர்கள் தங்களின் உறவினர்களின் பெயர்களைத்தான் பெரும்பாலும் குழந்தைகளுக்குச் சூட்டுகிறார்கள்.



## பட்டாம் பூச்சி

வண்ணப் பூச்சி பறந்தது
வானில் வட்டம் போட்டது
பட்டு ரோஜா கண்டது
பறந்து கீழே வந்தது

சிறகை விரித்து வைத்தது
சிவந்த இதழில் அமர்ந்தது
பசியைப் போக்க பூச்சியும்
பருகி தேனை உண்டது

குட்டிப் பயல் சாம்சனின்
கண்ணில் பூச்சி பட்டது




வண்ண சிறகின் கோலம்
வனப்பு மனதை கவர்ந்தது

பூச்சி பிடிக்கும் வேகத்தில்
பூவில் முள்ளை மறந்தான்
போச்சு போச்சு கையுமே
பூச்சி பறந்து போனது

வண்ணப் பொடியை கையில்
விட்டுச் சென்றது பூச்சியும்
மின்னும் அழகை பார்த்து
மகிழ்ந்து துள்ளி குதித்தான்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 13.03.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 685**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 683

**பரிசுக்குரியவர்:**
**M.N.சஹிநாத்**
**இல 77, நெடுங்குளம் வீதி, புத்தளம்.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| K.H.M.பயாஸ்<br>தம்பவிட்ட வீதி, ஜினிஹப்பிட்டிய | K.ஹரினி<br>19, பன்சல வீதி, இராகலை. |
| சி.ரஞ்சிதா<br>மே/பா. பூமணி சிவனேசராசா<br>விபுலானந்தா வீதி, சித்தாண்டி - 01 | S.சகானா<br>மேபிள் வீதி, 582/1, கொழும்பு-13 |
| | ம.ஜனார்த்திகா<br>இல.31, ரொசிட்டா பசார், கொட்டகலை. |
| கா.பிரசாந்தி<br>89, 'பாபாபதி இல்லம்' ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. | எஸ்.ஏ.நஸிபா அகமட்<br>ஆர்.டி.எஸ். வீதி, அக்கரைச்சேனை, மூதூர் - 01 |
| திலுக்சிஜா சரவணபவன்<br>255/9D, லேன் 02 (12)T மன்னார் வீதி, புத்தளம். | மைத்ரேயி யாதவன்<br>இல.6, கூழாவடி பிரதான வீதி, மட்டக்களப்பு. |

# சில விடுகதைகள்

1. உழைப்பில் பெரியவன் உருவத்தில் சிறியவன் அவன் யார்?
2. உரித்துவிட்ட குருவி ஊருக்குப் போகிறது அது என்ன?
3. உச்சியிலே கிரீடம் வைத்தவனுக்கு உடம்பெல்லாம் கண் அவன் யார்?
4. உப்பை உண்டவன் உறங்காமல் அலைகிறான் அவன் யார்?
5. எடுக்க எடுக்க வளரும் எண்ணெய் கண்டால் படியும் அது என்ன?
6. ஊர் ஊராய் சுற்றினாலும் உரிய இடத்துக்கு வந்து விடுவான் அவன் யார்?
7. எத்தனை வேகமாக சுற்றினாலும் தலை சுற்றாது இவனுக்கு அவன் யார்?
8. ஊசி நுழையாத காட்டிலும் ஒருவன் நுழைந்து விடுவான் அவன் யார்?
9. அந்தரத்தில் தொங்குது அரக்கனில் தலை அவன் யார்?
10. அரையடிப் புல்லில் ஏறுவான் இறங்குவான் அவன் யார்?

**விடைகள்**
1. எறும்பு
2. புளி
3. அன்னாசிப்பழம்
4. கடல்
5. தலைமுடி
6. தபால்
7. மின்விசிறி
8. புகை
9. திருஷ்டிபூசணி
10. பேன்.





## சண்டைக்காரன்



**நமது** நாட்டில் காணப்படும் மான், மரைகளைப் போன்ற ஒரு மிருகம் கனடா மற்றும் அலாஸ்கா காடுகளில் காணப்படுகின்றன. கோடைக் காலங்களில் ஏரிகள், சதுப்பு நிலங்களைத் தேடிச் சென்று விடும் இம் மிருகங்கள், மாரி காலங்களில் காடுகளுக்கு இடம் பெயர்ந்து விடும். நீண்ட கால்கள், முதுகுப் புறத்தில் ஒரு சிறிய மேட்டுப் பகுதி, குறுகிய வால், நீண்டு தொங்கும் காதுகள், நீளமான மூக்கு, கீழே தொங்கிக் கொண்டிருக்கும் மேல் உதடு, நாடிக்குக் கீழ் தாடியைப் போன்ற மயிர்கள் என்பவற்றைக் கொண்ட இந்த மிருகம், பார்வைக்கு கோமாளித்தனமானதாக இருக்கும். வயது முதிர்ந்த இந்த மிருகத்தின் தோல் தடித்த மண்ணிறமாக இருக்கும். வளர்ச்சியடையாத மிருகங்கள் சிவப்பும் மண் நிறமும் கலந்ததாக இருக்கும். ஆண் மிருகங்கள் பெண் மிருகங்களை விட உயரத்திலும் எடையிலும் கூடியவையாக இருக்கும். எட்டில் இருந்து பத்தடி உயரம் வரைக்கும் இவை வளரக் கூடியவை. ஆண் மிருகங்களின் எடை 1200 இறாத்தல்களுக்கும் அதிகமாக இருக்கும். ஒவ்வொரு காலிலும் நான்கு நகங்கள் இருக்கும். இரு பெரிய நகங்களும் இரு சிறிய நகங்களும் இருக்கும். வளைந்த பெரிய நகங்கள் பனிக்கட்டிகளைத் தோண்டுவதற்கும் சண்டை பிடிப்பதற்கும் பயன்படுகின்றன. தாவரப் பச்சணியான இந்த மிருகம், கொம்புகளைப் பாவித்து எதிரிகளோடு சண்டை போடுகின்றன. ஆனால் பாவம் இவற்றிற்கு கண் பார்வை குறைவு. மனிதர்களும் ஓநாய்களும் இவற்றை வேட்டையாடிப் பிடிப்பதுண்டு.

## வேகமான ஆட்டம்




**கிரிக்கெட்** ஆட்டத்தில் மிக வேகமாக அரைச்சதம் அடித்தவர் என்ற சாதனையைத் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த யகுவஸ் கல்லிஸ் என்ற கிரிக்கெட் வீரர் படைத்துள்ளார். சிம்பாப்வேக்கு எதிரான தென்னாபிரிக்காவின் ஆட்டத்தின் போது 24 பந்துகளில் 50 ஓட்டங்களை அவர் பெற்றிருக்கின்றார். 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4,5ஆம் திகதிகளில் தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தின் போது இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

## நவீனம்





**பொக்கற்று**களுக்குள்ளோ பர்சுகளுக்குள்ளோ வைக்கக் கூடிய மிகச் சிறிய டிஜிட்டல் வீடியோ கெமராக்கள் சந்தைக்கு வந்து விட்டன. ஒரு பட்டினை அழுத்தி சிறு பிள்ளை கூட இதனைப் பயன்படுத்திப் படம் பிடிக்க முடியும். டிஜிட்டல் வீடியோ இறுவட்டுகளோ நாடாக்களோ இல்லாமல் 30 நிமிடங்களுக்கு படம் பிடிக்கக் கூடியவை இவை. இந்த வீடியோ கெமராக்களை இயங்க வைப்பதற்கு இரண்டு பற்றறிகள் போதுமானவை. மேற்கு நாடுகளில் மிக மலிவான விலைவில் பெறக் கூடியளவிற்கு இவை தற்போது சந்தைக்கு வந்திருக்கின்றன. இலங்கை ரூபா கணக்கில் 10,000 ரூபா மட்டும் தானென்றால் பாருங்களேன்.

## வேட்டையாடும் மகரந்தம்




**இராணித்** தேனீ, வசந்த காலங்களில் நாளாந்தம் இரண்டாயிரம் முட்டைகளை இடும். வசந்தம் தவறிப் போன ஏனைய காலங்களில் நாளொன்றுக்கு ஆயிரத்திலிருந்து ஆயிரத்து ஐநூறு முட்டைகளை இடும். அடேங்கப்பா! நாளொன்றுக்கு ஓர் இராணித் தேனீ இரண்டாயிரம் முட்டைகளை இடும் என்றால், 50 இராணித் தேனீகள் ஒரு நாளைக்கு இடும் முட்டைகள் பல இலட்சங்களைத் தாண்டி விடும். அப்படியென்றால் தேனீக்கள் வாழும் காடுகளிளெல்லாம் மனிதன் மலைத்துப் போகுமளவிற்கு தேனீக்களின் மலையாகக் காணப்படுமே அதுதான் இல்லை. தேனீக்களை கவர்ந்திருக்கும் சில பூக்கள் விரியும் போதே தேனீக்களை வேட்டையாடி விடுகின்றன. பூக்களுக்குள் மறைந்திருக்கும் பூச்சிகள், சிலந்திகள் ஆகியவை ஆயிரக் கணக்கில் தேனீக்களைக் கொன்று தின்று விடுகின்றன. சில பூக்கள் தேனீக்களில் நேரடியாகவே நஞ்சைச் செலுத்துகின்றன. இன்னும் சில தேனீக்களைக் கவரும் மகரந்தங்களை நஞ்சாக்கி விடுகின்றன. போதாக்குறைக்கு பறவைகளும் கூட தேனீக்களைப் பதம் பார்த்து விடுகின்றன. தேனீக்களின் அபரிதமான இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இயற்கையே செய்யும் சதி என்று இதனைக் கூறலாமல்லவா?

## மூடு பாலம்



**உலகிலேயே** மிக நீளமான மூடப்பட்ட பாலம் நியூ பிறன்ஸ்விக் என்ற இடத்தில் உள்ளது. ஆயிரத்தி இருநூற்றி எண்பத்திரெண்டு அடி நீளமான இந்தப் பாலத்தை கார்ட்ளாண்ட் பிரிட்ச் என்ற நிறுவனம் உருவாக்கியது. சென்ஜோன்ஸ் ஆற்றுக்கு இரு பக்கத்திலுமுள்ள மக்களால் இது அமைக்கப்பட்டது. 1901ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான்காம் திகதி இந்தப் பாலம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. 1906ஆம் ஆண்டு நியூ பிறன்ஸ்விக் அரசாங்கம் இந்தப் பாலத்தைக் கொள்வனவு செய்தது. 1920ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இந்தப் பாலம், 1922ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் திருத்தப்பட்டது.


அஜித் - த்ரிஷா
கிரீடம்

## ரஜினியுடன் நடித்தது மகிழ்ச்சியானது:- நடிகை ஸ்ரேயா

**நான்** 'சிவாஜி' படத்தில் தமிழ் பிராமணப் பெண்ணாக நடிக்கிறேன். ரஜினிகாந்த் ஒரு சிறந்த நடிகர், எளிமையான தோற்றம் உடையவர். அவர் சாமான்யரைப் போன்ற தோற்றம் உடையவர். ரஜினிகாந்துடன் நடிப்பதும் அவருடன் இருப்பதும் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

ரஜினிகாந்த் நடிக்கும் படமான சிவாஜியில் நடிக்கும் நடிகை ஸ்ரேயா தனது நடிப்பு குறித்து அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

பழகுவதற்கு ரஜினி எளியவர். நான் இங்கு நடிப்பதற்கு முன்பு ரஜினிகாந்த் நான் நடித்த தமிழ் மற்றும் தெலுங்கு படங்களைப் பார்த்துள்ளார். பெங்களூருக்குச் சென்று எனது படங்களைப் பார்த்துள்ளார்.

ஒரு படத்தை முழுமையாக பார்க்க வேண்டும் என்றால் தியேட்டருக்குதான் செல்லவேண்டும். தியேட்டர் செல்லும்போது சாதாரண மனிதரைப் போல் ரஜினிகாந்த் உடை அணிந்து கொள்வார்.

படப்பிடிப்பு நடைபெறும் தளத்திற்கு 15 நிமிடம் முன்னதாகவே ரஜினிகாந்த் வந்து விடுவார். படப்பிடிப்பு தளத்தில் அனைவருடனும் எளிமையாக பேசுவார். அவர் அரசியல், தொழில், நிர்வாகம், ஆன்மீகம் பற்றி நிறைய தெரிந்து வைத்து உள்ளார். அவருடன் எவ்வளவு வேண்டுமானாலும் இவை பற்றி பேசலாம்.

ரஜினியிடம் பேசவும் பழகவும் வாய்ப்பு கிடைப்பது அதிர்ஷ்டம். அவரிடம் நகைச்சுவை உணர்வு அதிகம். எதைப் பற்றி கேட்டாலும் ரஜினி இதைப்பற்றி எனக்கு தெரியவில்லையே என்பார். ஆனால் விரிவாக பேசுவார். அதனால் படப்பிடிப்பில் குழுவினர் அவரை வட்டமிட்டு உரையாடி மகிழ்வோம்.



# சி னி வி

## 'பில்லா 2007'

**கிரீடத்துக்குப்** பிறகு அஜீத் நடிக்கும் 'பில்லா 2007' பட வேலைகளை விறுவிறுப்பாக ஆரம்பித்துள்ளார் இயக்குநர் விஷ்ணுவர்த்தன். மற்ற நடிகர், நடிகையர் தேர்வு நடக்கிறது. படப்பிடிப்புக்கான லொகேஷன்களும் பார்க்கப் படுகின்றன.

## கோவில் கட்ட சபதம்

**குஷ்புவுக்கு** கோவில் கட்டியது போல், தனக்கும் ரசிகர்களை கோவில் கட்ட வைப்பேன் என்று நெருக்கமானவர்களிடம் சவால் விடுகிறாராம் குதிரை நடிகை. வித்தியாசமான வேடங்களில் நடித்து மக்கள் மனதில் இடம்பெறுவேன். குஷ்புவுக்கு அடுத்தபடியாக எனக்கு கோவில் கட்டும்படி நடிப்பதே என் லட்சியம் என்று பேசி வருகிறாராம்.

## வாழ்த்துக்கள்

**'தம்பி'** படத்துக்குப்பின் மாதவனை கதாநாயகனாக வைத்து 'வாழ்த்துக்கள்' என்ற பெயரில் சீமான் படம் இயக்குகிறார். இப்படத்துக்காக தனிரும் போட்டு கதை விவாதத்தை நடத்துகிறார.

## வெறுப்பான இயக்குநர்

**'பாடசாலை'** இயக்குநர் தனது படத்தில் எம்.ஜி.ஆர்.பட பாடலொன்றை ரீமிக்ஸ் செய்து மீன் பாட்டுக்காரரை பாட வைக்க விரும்பினார். விருத்தாசலத்தில் படப்பிடிப்புக்கு ஏற்பாடு செய்தார். ஆக்ஷன் என்றதும் எம்.ஜி.ஆர். ஸ்டைலில் ஆடாமல் விரலை மட்டும் மேலும் கீழும் அசைத்தாராம்.

பலமுறை ஸ்டைலை மாற்றும்படி டைரக்டர் கத்த பாடகர் பழக்க தோஷத்தில் மீண்டும் மீண்டும் விரலையே ஆட்ட கடுப்பான இயக்குனர் கானாக் காரரை பேக் செய்து விட்டாராம். அவருக்கு பதில் வேறொரு பாட்டுக்காரரை தேடுகிறார்கள்.


தனுஷ் - மீராஜஸ்மின்
பரட்டை

## 'ஒய்யாலே கவுத்துப்புட்டாளே' சிம்பு சிட்டிவேஷன் ஸோங்


**இதற்கு** முன்பும் பல பாடல்கள் பாடியிருக்கிறார் சிம்பு. ஆனால் இப்போது பாடியிருப்பது அசலான சிட்டிவேஷன் பாடல்.

பரதன் பிலிம்ஸ் தயாரிக்கும் படம் 'நீ நான் நிலா'. படத்தை சிவக்குமார் என்பவர் இயக்குகிறார். இரண்டு ஹீரோக்கள். இருவருமே புதுமுகங்கள். ஒருவர் பரதன், இன்னொருவர் ரவி.

இரண்டு 'ரோக்களுக்கும் சேர்த்து ஒரு 'ரோயின். தமிழ் நாட்டில் யாரும் அகப்படாமல் குஜராத் சென்று நாயகியை அழைத்து வந்திருக்கிறார்கள். இவர் ஒரு மாடல். பெயர் மேக்னா. தமிழுக்கு இவர் புதுசு.

இந்தப் படத்தில் கலகலப்பான பாடல் ஒன்று இடம் பெறுகிறது. இதனை சிம்பு பாடினால் நல்லாயிருக்குமே என இயக்குநருக்கு ஓர் எண்ணம். சிம்புவிடம் கேட்டதும் மறுக்காமல் ஒப்புக் கொண்டார்.

உயிருக்குயிராக காதலித்தேன்... ஆனால் கவிழ்த்து விட்டாள் என நயன்தாரா மீது சிம்பு புகார் படிக்கும் நேரத்தில் 'நீ நான் நிலா'வுக்காக இவர் பாடிய பாடலின் முதல் வரி இப்படி ஆரம்பிக்கிறது. ஒய்யாலே கவுத்துப்புட்டாளே...!



## ஏப்ரலில் புதுப்படங்கள் நிறுத்தம் : 'சிவாஜி' பட ரிலீஸால் தியேட்டர்கள் தட்டுப்பாடு

**பெரிய** எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள சிவாஜி படம் ஏப்ரல் மாதம் ரிலீஸாகிறது. அடுத்த மாதம் பாடல் கேசட் வெளியிடப்படுகிறது. சிவாஜி வரவால் மற்ற படங்களுக்கு தியேட்டர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

500 பிரிண்ட்களுக்கு மேல் போடப்படுகின்றன. விநியோகஸ்தர்கள் அவரவர் ஏரியாக்களில் எத்தனை தியேட்டர்களில் வேண்டுமானாலும் ரிலீஸ் செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சென்னையில் மட்டும் 12 தியேட்டர்களில் ரிலீஸாகும் என்று தெரிகிறது. மற்ற மாவட்டங்களில் உள்ள தியேட்டர் உரிமையாளர்களும் சிவாஜியை தங்கள் தியேட்டர்களில் வெளியிட ஆர்வமாக உள்ளனர். எனவே வேறு படங்களுக்கு தியேட்டர்கள் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சிவாஜியோடு போட்டியிடவும் மற்றப் படங்கள் தயாராக இல்லை.

எனவே புதுப்படங்கள் ரிலீஸ் தள்ளி வைக்கப்படுகின்றன. படத்துக்கு வித்தியாசமான முறையில் விளம்பரங்கள் செய்யவும் ஏற்பாடுகள் நடக்கிறது. எப்படியெல்லாம் விளம்பரப்படுத்தலாம் என ஒரு குழுவே ஆய்வு செய்கிறது.

சிவாஜி டிரைவர் மற்றும் ரிங்டோன்கள் செல்போன்களில் வெளியிடப்படுகின்றன. டெலிவிஷன்களிலும் டிரைலர் வெளியிடப்படுகிறது.

செல்போன்களில் ரிங்டோன், டிரைலர் வெளியிடுவதற்கான அனுமதி பெற முன்னணி நிறுவனங்கள் போட்டி போடுகின்றன.

டெலிவிஷன் திரைவிமர்சனங்களில் ரஜினிகாந்த், டைரக்டர் ஷங்கர் ஆகியோரின் பேட்டிகளையும் இடம் பெறச்செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன.

## தனிக்குடித்தனம்

சூர்ய வெளிச்ச நட்சத்திர தம்பதிகள் காதலிக்கும்போதே கனவு மாளிகை ஒன்றை கட்டினர். தற்போது சுற்றத்தாரோடு வசிக்கும் அவர்கள் விரைவில் இந்த மாளிகைக்கு தனிக்குடித்தனம் செல்ல இருக்கி றார்களாம்.

## வில்லனான ஆசிரியர்

**'போக்கிரி'**யில் பீடா என்ற ரவுடி பொலிஸ் பாத்திரத்தில் மிரட்டியவர் முகேஷ் திவாரி. வடக்கத்தியரான இவர் ஏற்கனவே 'தலைமகன்' படத்தில் நடித்துள்ளார்.

பி.ஏ.பட்டதாரி. டெல்லியில் நான்கு வருடங்கள் ஆசிரியராக வேலை பார்த்துள்ளார். இந்தியில் 22 படங்களில் நடித்துள்ளார். தெலுங்கில் சில படங்களில் நடித்துவிட்டு இப்போது தமிழுக்கு வந்துள்ளார்.


ஜீவன் - மாளவிகா
நான் அவன் இல்லை

## ஒரு பாட்டுக்கு ஆட ஐஸ்வர்யாராய்க்கு ரூபா 1 கோடி!

**பாலிவுட்** நடிகைகள் சர்வதேச புகழ் பெறுவதும் பிறகு சம்பளம் முதற்கொண்டு சகலமும் ஏகத்துக்கு உயர்வதும் சமீப காலங்களில் நிகழ்ந்து வருகிறது. ஐஸ்வர்யாராய், மல்லிகா ஷெராவத், ஷில்பா ஷெட்டி ஆகியோரை தொடர்ந்து பல முன்னணி பாலிவுட் நடிகைகள் சர்வதேச புகழை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று துடியாய் துடிக்கின்றனர்.


ஜாக்கிசானுடன் 'தி மித்' என்ற படத்தில் நடித்து சர்வதேச புகழை அடைந்த மல்லிகா ஷெராவத்துக்கு தற்போது தெலுங்கு படங்களில் ஒரு பாட்டுக்கு ஆட ரூ.40 லட்சம் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. இதுபடம் முழுவதும் வந்து போகும் கதாநாயகிகள் சம்பளத்தை விட பெரிய தொகையாகும். தமிழில் கமலுடன் தசாவதாரம் படத்தில் சிறு வேடத்தில் நடித்து வருகிறார். இதற்காக அவருக்கு பெருந்தொகைப்பணம் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சிவாஜியில் ரஜினியுடன் நடிக்க ஐஸ்வர்யாராயை ஒப்பந்தம் செய்ய முயற்சித்தனர். இருந்தாலும் ஏற்கனவே ஒப்பந்தமான படங்களால் அவரின் கால்ஷீட் கிடைக்காததால் ஸ்ரேயா ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

ஐஸ்வர்யாராயை தங்கள் படத்தில் கதாநாயகியாக நடிக்க வைக்கும் அளவுக்கு அவரிடமிருந்து கால்ஷீட் பெறுவது சிரமம் என்பதால் குறைந்த பட்சம் ஒரு பாட்டுக்காவது அவரை ஆட வைத்து விட வேண்டும் என்ற எண்ணம் தமிழ்,தெலுங்கு பட உலகில் நிலவுகிறது.

இதற்காக ரூ.1கோடி வரை சம்பளமாகக் கொடுக்க தயாராகயிருக்கின்றோம் என்று கூறி தமிழ், தெலுங்கு சினிமாவில் முக்கிய புள்ளிகள் அவருக்கு தூதுவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.


மல்லிகாஷெரவாத்




## ரஜினியின் அடுத்தப் படம்

'சிவாஜி' படம் வேலைகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதால் ரஜினி தன் அடுத்த படம் குறித்து இப்போதே ஆலோசிக்க தொடங்கி விட்டார். அவரது அடுத்த படத்தை முருகதாஸ் இயக்குவார் என்ற எதிர் பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் ரஜினி, டைரக்டர் முருகதாஸை அழைத்துக் கொண்டு மும்பை சென்றார். அங்கு அவர்கள் புதிய படம் தொடர்பாக நீண்ட ஆலோசனைகள் நடத்தியதாக தெரிகிறது.

தெலுங்கில் சமீபத்தில் டைரக்டர் முருகதாஸ் இயக்கிய ஸ்டாலின் சூப்பர் ஹிட் படமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதனால் கவரப்பட்ட ரஜினி, முருகதாஸை தன் படத்தை இயக்க வைக்க விரும்புவதாகத் தெரியவந்துள்ளது.

முருகதாஸ் இயக்க உள்ள இந்தப் படத்தை ஆர்.எம்.வீரப்பனின் ஸ்ரீசத்யா மூவிஸ் நிறுவனம் தயாரிக்கும் என்று கூறப்படுகிறது. 2008இல் இந்த படத்துக்கான சூட்டிங் தொடங்கும் என்று ஒரு தகவல் கிடைத்துள் ளது.

---

## விஜய் வேடத்தில் சல்மான்கான்

ஒரு பொலிஸ் அதிகாரி, சமூக விரோதிகளை களையெடுக்க போலி ரவுடியாக மாறுகிறார். இது ரவுடிகளுக்கு தெரிவதில்லை. இந்த சின்ன சைஸ் கதை ஆந்திராவில் புயலடித்து 'போக்கிரி'யாக தமிழகத்தை அதிரடித்து இதோ மும்பைக்குச் செல்கிறது.

இதில் விஜய் நடித்த பொலிஸ்கார அதே நேரம் போலி ரவுடி கேரக்டரில் சல்மான்கான் நடிக்கிறார். ஏற்கனவே இவர் தமிழ் 'சேது'வின் இந்தி ரீ-மேக்கான தேரே நாம் படத்தில் நடித்துள்ளார். பல்வேறு பிரச்சினைகளில் சிக்கி நடிக்கிற படமெல்லாம் தோல்வியை சந்தித்துக் கொண்டிருந்த இக்கட்டான நேரத்தில் தேரே நாம் வெளியாகி சல்மான்கானை காப்பாற்றியது. அதிலிருந்து தமிழ் படங்கள் மீதும் சீயான் மீதும் கானுக்கு ஒரு பாசம்.

இவர் நடிக்கயிருக்கும் இந்தி போக்கிரியை பிரபுதேவா இயக்குகிறார். தற்போது 'சங்கர் தாதா ஜிந்தாபாத்' படத்தில் பிஸியாக இருப்பவர் அது முடிந்ததும் இந்தி போக்கிரியை இயக்குகிறார்.

படத்தின் கதாநாயகி மட்டும் இன்னும் முடிவாகவில்லை.

---




## விக்ரம் நடிக்கும் 'கந்தசாமி'


கம்பியூட்டரில் விதவிதமான கெட்டப்புகள் வரைந்து கொண்டிருக்கிறார்கள். இயக்குநர் சுசிகணேசனுக்கு இதுவரை எதுவும் திருப்தியாகவில்லை.

'திருட்டு பயலே' வெற்றிக்குப் பிறகு விக்ரமை வைத்து இயக்குகிறார் சுசிகணேசன். படத்துக்கு கந்தசாமி என்ற சாதாரண பெயரை அசாதாரணமாக சூட்டியிருக்கிறார்கள்.

மினரல் வாட்டரில் சிலர் குழந்தைகளுக்கு கால் கழுவும்போது வேறு சிலர் குடிக்கக்கூட நீரின்றி அவதிப்படுகிறார்கள். இந்த முரண்பாட்டை பின்னணியாகக் கொண்டு தயாராகிறது கந்தசாமி.

பெரிய குளிர்பான மற்றும் மினரல் வாட்டர் நிறுவனங்களால் நமது நிலம் பாலைவனமாகும் அளவுக்கு நீர் உறிஞ்சப்படுவதை இந்தப் படத்தில் காத்திரமாக முன் வைக்க இருக்கிறார்

---




நடிகை பாவனாவிடம் சிம்புவுடன் ஜோடியாக நடிக்க கால்ஷீட் கேட்டார்கள். முதலில் ஒப்புக் கொண்டவர். சிம்பு - நயன் நெருக்கமாக இருக்கும் புகைப் படங்கள் நெட்டில் வந்ததும் அந்த முடிவை மாற்றிக் கொண்டார். வேறு படங்களில் பிஸியாக இருக்கிறேன் என்று சொல்லி விட்டாராம்.

---




தன் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார் சேரன். இந்த செய்தி பத்திரிகைகளில் வந்ததும் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு போன் செய்து சினந்து கொண்டாராம் சேரன். ஏன்? எல்லாம் இமேஜ் படுத்தும் பாடு!

---

அர்ஜுன் நடிக்கும் ஒரு படத்திற்கு வடிவேலுவின் கால்ஷீட் கேட்கப்பட்டது. அர்ஜுன் வாங்கிய சம்பளத்தை விட அதிகம் கேட்டாராம் வடிவேலு. படத்திற்கு நான் ஹீரோவா? அவர் ஹீரோவா? என்று கொதித்து போய்விட்டாராம் அர்ஜுன்.

---

## சந்தியா நடிக்கும் 'மஞ்சள் வெயில்'

'வெயில்' ஹிட்டான பிறகு வெயிலுக்கு மவுசு ஏறியிருக்கிறது. வெயிலை தொடர்ந்து மஞ்சள் வெயில் என்ற பெயரில் தயாராகிறது ஒரு படம்.

ஹாசினி சினிமாஸ் சார்பில் சையத் ஐ.தயாரிக்கிறார். படத்தை இயக்குகிறவர் ராஜா. ஜெயம் ரவியின் அண்ணன் ரீ-மேக் புகழ் ராஜா அல்ல இவர். இயக்குநர் அதியமானிடம் அசோஸியேட் இயக்குநராக இருந்தவர் இந்த ராஜா, 'மஞ்சள் வெயில்' இவருக்கு முதல் படம். படத்தின் கதை, திரைக்கதை மற்றும் வசனப் பொறுப்புகளும் இவரே!

சந்தியா இந்தப் படத்தின் நாயகி. நாயகன் பிரசன்னா. இவர்கள் இணைந்து நடிக்கும் முதல் படம் இது. இவர்களைத் தவிர காமெடிக்கு விவேக்கும் குணச்சித்திரத்துக்கு நாசர், நிழல்கள் ரவியும் இருக்கிறார்கள்.

பரத்வாஜ் இசை. டி.ஆனந்தகுமார் ஒளிப்பதிவு. முக்கிய காட்சிகள் ஊட்டியில் படமாகின்றன. சென்னையும் படத்தில் இடம் பெறுகிறது. இப்படத்தின் கதை என்ன?

இயக்குநரிடம் கேட்டோம். மாலை நேர மஞ்சள் வெயில் உடம்புக் நல்லது. இந்த வெயிலில் வைட்டமின் - சி அதிகம். குறைந்த நேரமே நீடிக்கும் மஞ்சள் வெயிலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கதையை கேட்டால் ஆறாம் வகுப்பு அறிவியல் பாடத்தை சொல்றீங்களே என திகைத்துப் போய் கேட்ட நம்மை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார் இயக்குநர் ராஜா. அதாவது படத்தோட கதையே இந்த கருத்து தானாம்.

உச்சி வெயில்ல நின்ன மாதிரி இருக்குதுங்க!

---

## கண்ணழகி வருத்தம்

சினிமாவில் இருந்து டி.வி. தொடருக்கு மாறிய கண்ணழகி நடிகை ஆரம்பத்தில் நிறைய பணம் பார்த்தார். இப்போது ஒழுங்காக சம்பளம் வருவதில்லையாம். பிச்சி பிச்சித்தான் கொடுக்கிறார்கள். இதனால் வருத்தத்தில் உள்ளார்.

---

## ஆஸ்கார் விருது ; கலைந்தது தீபாமேத்தாவின் கனவு!

79ஆவது ஆஸ்கார் விருது வழங்கும் விழா லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. இந்தியர்கள் இவ்விழாவை ஆவலோடு எதிர் நோக்கியிருந்தனர். கனடா சார்பில் விருது போட்டியில் கலந்து கொண்ட 'வாட்டர்' படத்தின் இயக்குநர் தீபாமேத்தா கனடா வாழ் இந்தியர். இதில் நடித்திருந்தவர்களும் ஜான் ஆபிரகாம், லிசாரே, சீமா பிஸ்வாஸ் என இந்தியர்களே. கதையும் வாரணாசி விதவைகளை பற்றியது.

சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கான பிரிவில் வாட்டர் போட்டியிட்டது. ஆனால் இறுதி ஜெயம் தி லைவ்ஸ் ஆப் அதர்ஸ் ஜெர்மன் படத்துக்கு.

சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக பாரெஸ்ட் விடேகர் தேர்வு செய்யப்பட்டார். 'தி லாஸ்ட் கிங் ஆப் ஸ்காட்லேண்ட் படத்துக்காக இவ்விருது விடேகருக்குக் கிடைத்தது. தி குயின்' திரைப்படத்தில் எலிசபெத் மகாராணியாக நடித்த ஹெலன் மிர்ரன் சிறந்த நடிகைக்கான விருதைத் தட்டிச்சென்றார்.

ஆஸ்கார் விருது விழாவில் தீபா மேத்தாவுடன் ஜான் ஆபிரஹாம், லிசாரே, சீமா பிஸ்வாஸ் கலந்து கொண்டனர். இதுவொரு சிறப்பான தருணம். விருது கிடைக்கவில்லை என்பதைத் தாண்டி இதில் கலந்து கொண்டதே மகிழ்ச்சியளிக்கிறது என்றார் தீபா மேத்தா!

---

## பயம்

விலாங்கு மீன் நடிகை சர்ச்சைகளின் மொத்த உருவமாய் இருப்பதாக கோடம்பாக்கத்தார் புலம்புகிறார்கள்.

சக நடிகர்கள் பட முதலாளிகள் என்ன 'செக்ஸ்' குண்டை தூக்கி வீசுவாரோ என்ற நடுக்கத்தில் உள்ளனர். படப்பிடிப்பில் எட்டி நின்றுதான் ஒவ்வொருத்தரும் பேசுகிறார்களாம்.

---

**முகப்பில்**

**ஜீவன் - மாளவிகா - சினேகா - நமீதா - ஜோதிர்மயி**




திகைப்பில் இருக்கின்றனர் திரையுலகினர். விபசார புரோக்கர் ஒருவரின் ஆல்பத்தில் ராய் நடிகையின் புகைப்படம் இருந்ததால் ஆளாளுக்கு அவரை தேள் மாதிரி கொட்டி வருகிறார்கள். புகைப்படத்திற்கே இப்படியா என்று தான் பயந்து போயுள்ளனர். இதில் அதிகம் ஆடிப் போயுள்ளவர் சங்கம நடிகையாம்.

---

'கஜா' என்ற கன்னடப் படத்தில் குளியல் காட்சியில் படுகவர்ச்சியாக நடித்திருக்கிறார் நவ்யா நாயர்.

---

தமிழில் காணாமல் போன மதுமிதா 'ஆணிவேர்' என்ற குறும்படத்தில் நடித்துள்ளார். இது ஈழத் தமிழர்களைப் பற்றியது.



# தேன் கிண்ணம்

## காலம் பதில் சொல்லும்! பல வடுக்களாக யுத்தம் பற்றி!!!

யுத்தம் யுத்தம்
பல வருடகாலமாக யுத்தம்
இலங்கை எனும் இந்த
புண்ணிய நாட்டிலே
யுத்தத்தின் கொடுமை சொல்லுந்தரமன்று!
பல்லின மக்கள் வாழும் நாடே - இவ்
உள்நாட்டு யுத்தத்திற்கு காரணமாம்
எல்லோரும் சொல்கிறார்கள்
மக்கள் எல்லோரும்
சமநீதி, சமஉரிமை, சமவாய்ப்புகள்
வழங்கப்பட்டிருந்தால் இந்நிலை வருமா?
இது அடி மனதில் எழும் பலரின் வினா
யுத்தத்தால் இழந்தவைகள் பல
உறவுகள், உடைமைகள், கல்வி
எனப்பலவற்றையும் இழந்துதவிப்பது - ஓர் இனம்
அது எதுவென்பது கேள்வி
சிறுபான்மை என்பது ஒருவகை - அது இலங்கை
பெரும்பான்மை என்பது ஒருவகை - அது
தென்னாபிரிக்கா
இவ்வாறாக மதம், மொழி, இனம் என
பல தரப்பட்ட தேவைப்பாடுகளால் யுத்தம்
இதனால் மன நோயாளிகளோ ஏராளம்
இல்லையென சொல்லிவிட முடியாது
இரு தரப்பும் ஒருவகையில் உடன்பாடு கண்டு
அரசியல் யாப்பு உட்பட சட்டங்களில்
உரிய முறையில் எழுதப்பட்டாலே - அன்றி
கால் இழந்து கை இழந்து இவ்வாறாக பல
அவயவங்களை இழந்து நாதியற்று
தன்னந்தனியே தனிமரமாக வாழும்
சமூகம் தோன்றாது என்பது
ஆட்சியாளர்களினதும், சமூகத்தினதும்
கைகளிலே என்பது உண்மையானது
இவற்றுக்கு யார் பதில் சொல்வது
காலம் தான் பதில் சொல்லும்!
பல வடுக்களாக
யுத்தம் பற்றி!!!

*- சண்முகலிங்கம் சிவரூபன்,*
*கொக்குவில்.*

## மலையகத்தில் பிறந்து சருகாகிப் போனவர்களின் சமகாலம்

இயற்கை எழில் கொஞ்சும் இடமாம் மலையகம்!
இயற்கையே எமனாக மாறும் இடமும்
மலையகம்!
மலையகத்தின் மாணிக்கமெல்லாம்...
மண்ணுக்குள்ளே புதையுண்டு போகின்றன.

நாட்டுக்கு வருமானம் தேடிக் கொடுப்பவர்களே
நாட இடமின்றி வாழ வழியின்றி தவிக்கின்றனர்.
வாடிய மல்லிகையின் மலரிதழ் போல...
வாடியே இவர்களின் வாழ்நாள் கழிகிறது!

ஊழியத்தை அளித்து விட்டு
ஊதியத்திற்காக ஏங்கியே...
பழுதிலா இவர்கள்
பகடைக் காயாய் மாறிவிட்டனர்!

உடலையும் உயிரையும் ஊட்டி இம் மண்ணை
உயிர்ப் பெறச் செய்தவர்களுக்கு - இங்கு
உள்ளம் கசிந்து உண்மையான அன்பை
வழங்குவார் எவருமில்லை!

முற்றும் கிரகணத்தின் மூழ்கும் தினகரன் போல...
குற்றமில்லா மலையக மைந்தர்கள்
சருகாகின்றனர்
விடிவு பிறக்கிறது! பிறக்கிறது! என்று
கூறிக்கொண்டே செல்கிறது இந்த சமகாலம்.

*-கு.அனிலா,*
*தலாத்து ஓயா.*

## காதலும் வாழ்க்கையும்

மூன்று எழுத்துக் கொண்ட காதலும்
நான்கு எழுத்துக் கொண்ட வாழ்க்கையும்
இணைந்தால் இனிமை தான்
பிரிந்தால் அதைவிட துன்பம் - உலகில்
ஒன்றும் இல்லை இங்கு.

காதல் கொண்டு வாழ்வதை விட
வாழ்வதை கொண்ட காதல் இனிமை
காதலும் வாழ்க்கையும் தூய்மை
இது இரண்டையும் அன்பு செய்தல் - எம்
வாழ்க்கையும் காதலும் இனிமை.

வாழ்க்கையை அன்புடன் காதலி
மனைவியை பிரியமுடன் காதலி
பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் வாழ்த்திடு
உறவினரை நல்வரவுடன் ஆதரி - அப்போது
வாழ்க்கை உன்னை காதலிக்கும்.

நகமும் சதையும் போல
இணை பிரியாத நண்பன் போல
ஒட்டிப் பிறந்த குழந்தைகள் போல
இலையும் கிளையும் போல - தான்
காதலும் வாழ்க்கையும்.

*- தேவதாஸ் லக்ஸ்மாலா,*
*மன்னார்.*

## சிறகொடிந்த சமாதானப் புறா

சமாதானப் புறாவே உனக்குச்
சாவு மணியடித்த சண்டாளர் யார்?
நம் நாட்டுக் கொழுந்துகளைக் காணாமல்
நாம் கண்ணீர் வடிக்க
எம்மை விட்டு எங்கே போனாய்
ஏனிந்தச் சோதனை வெண்புறாவே.

யுத்தம் எங்களைத் தினம் தினம்
வேரோடு அழித்துக் கொண்டிருக்கிறது
தாய், தந்தை பிள்ளைகளை இழந்து
அகதி வாழ்க்கை எங்களுக்கு
தெருவோடு தொடர்கின்றது
எங்கள் வாழ்க்கை வெண்புறாவே.

உணர்வுகளை உடைமைகளை இழந்து
வாய் மூடி ஊமைகளாய் அலைகின்றோம்
எம் சகோதரர்கள் கொலையாவதை
தவிர்ப்பது எப்போது வெண்புறாவே.

சமாதானக் குறியீடே உன் இறக்கைகளை
ஒடித்தவன் யார்?
மீண்டும் நீ எழுந்து வந்து
எம்மை அணைப்பது எப்போ?

சிறகடித்துப் பறந்து வந்து - எங்கள்
வாழ்வில் இன்ப ஒளியை ஏற்றுவாயா?

*- ஞானசேகரம் கிருஷ்ணவேணி,*
*களுவாஞ்சிகுடி.*

## காதலும் வாழ்க்கையும்

காதல்...
என் புன்னகைக்கு வர்ணம் பூசியது!
தூக்கத்தைத் தூரமாக்கி
வேடிக்கை பார்த்தது!
கால்களுக்குச் சக்கரம்பூட்டி
காற்றோடு விளையாட வைத்தது!
இசையை மட்டுமே ரசித்த என்னை
இரைச்சலிலும் ராகம் காண வைத்தது!
கண் விழித்தே கனவு காண
கற்றுத் தந்தது!
புரியா கவிதையினைத்
தெரியாத மொழிகளிலே
மொழிபெயர்த்துத் தந்தது
கடைசியில்...
கட்டிய கோட்டைகளைத்
தகர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டு
கைகொட்டிச் சிரித்தது!
எதிர்கால இருட்டில் என்னைத்
தடுமாற வைத்துவிட்டு
எக்களித்தது!
விடியாத இரவுகளையும்
விலகாத இருட்டுக்களையும்
வரமாய்த் தந்தே - என்
வாழ்க்கையைப் பறித்துக் கொண்டது!!

*-ஹலீடா மஹ்ரூப்,*
*திருகோணமலை.*

## சிறகொடிந்த சமாதானப் புறா

புதிய புரிந்துணர்வு பிறப்பித்தெனை
அனுப்பித்தது சின்னமாம் சமாதானத்திற்காய்
நலிந்தவுள்ளத்தை தேற்றத்தான் நான் - என்றேன்
இல்லையே! அதை ஏய்க்கத் தான் நீ - என்றாய்.

ஆள்வோர் எனைப் பறக்க விடுவதும்
எதிரி எனை எதிர்ப்பதும் - மீண்டும்
எதிரி ஆள்வோராகி பறக்க விடுவதும்
அதே நாடகம் அரங்கேறுகிறது -
அரசியல் மேடையில்.

இதுவோர் அரசியல் யுக்தியென
அறிந்தோர் பலர் அறியாதோன் மூடன்
இங்கு நானோர் பகடைக்காய்தான்
பாவம்! என் செய்வேன் நான்?

பல கனவுடன் சந்தோஷ வானில்
மனித மனங்களில் உயரப் பறந்தேன்
எங்கிருந்தோ வந்த யுத்த குண்டுகள்
இரையாக்கிச் சென்றது என் சிறகை!

சிறகுடைந்த நான் சிதறினேன் - கட்டாந் தரையில்
ஆதரவற்ற அநாதையாய் தவிக்கின்றேன்!
புதிதாய் பூத்த பூ போல் ரசித்தோர் - இன்று
துஷ்டனென விலகிச் செல்கின்றனர்.

அரைக் கம்பத்தில் தள்ளாடுகிறது - மனித நேயம்!
அநீதியால் கொலை செய்யப்பட்டது - நீதி!
சில மனிதனால் கடத்தப்பட்டது பல மனித உரிமை!
மனிதனின் கனவு கனவாகிப் போனதிங்கு.

*D.லெவனா,*
*மட்டக்களப்பு.*

## யுத்தம் ஏற்படுத்திய சமூகத் தாக்கம்

இரத்தம் சிந்திய யுத்தமிங்கு
இலங்கைத் தீவில் இன்று
கோரமாக நடைபெற்ற பொல்லாத
கொடுமைகளால் தமிழரினம்
பல தரப்பட்ட இடங்களிலுமின்றி
பராரிகளாய் அலைவதனை
தாராளமாக எவரும் காணலாம்!
தமிழினத்தின் அவல நிலையிங்கு
ஏராளம் உண்டு எழுதமுடியாது
போராட்டம் செய்த தாக்கங்களை!

வெள்ளையரை வெளியேற்ற, காந்திமகான்
விவேகமுடன் செயற்பட்டு வெற்றி பெற்றார்
எள்ளளவும் இரத்தம் சிந்தாப் புரட்சியது!
எறிகணைகள் ஏவப் படவில்லையங்கு
கொள்ளை, கொலை, ஆட்கடத்தல்
கொடுமைகள் இலங்கையைப் போல்
எல்லை தாண்டப்படவில்லை!
எந்தச் சந்தர்ப்பத்திலும்
மனித அவலமில்லை
அல்லல் சுமக்க வைத்த
யுத்தமில்லா யுத்தம்
அனைத்து சமூகத்துக்கும்
யுத்தமொரு தாக்கம்!

*- கவிக்குயிலன்,*
*சேனையூர் - 06.*

## சிறகொடிந்த சமாதானப் புறா!

நாளைய விடியலில் - நாமென எழு!
கடந்துவிட்ட காலங்களில் -
இழந்துவிட்ட இருப்பிடங்கள்
தொலைந்துவிட்ட -
உறவுகள் உடைமைகள்;
சுதந்திரம் என்னும் போர்வையில்
அடக்கப்பட்ட சமுதாயம்;
கால ஓட்டத்தின் நடுவே,
கரைபுரண்டோடும் -
வாழ்க்கை வட்டத்தின் நடுவே;
இயற்கை அழிவுகளை -
விஞ்சிவிட்ட பொழுதும்
தாயக போராட்டம் எனும் கோட்பாட்டில்
அழிக்கப்பட்டுவரும் மானிட
சமுதாயத்தின்
அவலக்குரலில் - குளிர்காயும்
அழிக்கப்பட வேண்டிய களைகள்
சட்டத்தின் எல்லைக்குள் உள்ளவரை;
நாளைய சமுதாயத்திற்காக -
குரல் கொடுக்க எத்தணிக்கும் -
உயிர்களை
வேட்டையாடும் கயவர்கள் உள்ளவரை;
விடியலின் தேடல் என்பது
கூண்டினுள் அடைக்கப்பட்ட
வெண்புறாவாக!

*-ஸ்ரீ,*
*காரைதீவு - 08.*

# கண்காட்சி




நிர்வாணத்தால் எதையுமே சாதிக்க முடியும் என மேலைத்தேயப் பெண்கள் நினைக்கிறார்கள் போல் தோன்றுகிறது.

மிருகவதையைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நிர்வாணமாக நடத்தப்படுகின்றன.

அதேபோல் அண்மையில் தாய்வானில் சுன்க்கோ நகரில் சுற்றுச் சூழல் தொடர்பில் பொதுமக்கள் தங்களது அவதானங்களைச் செலுத்த வேண்டும் எனக் கோரி ஒரு பாதி நிர்வாணத் கண்காட்சி நடாத்தப்பட்டது.

இதில் 19 நாடுகளைச் சேர்ந்த இளம் பெண்கள் கலந்து கொண்டனர்.

# சமையல்



சமையல் செய்வது எப்படி? என்பது பற்றி பிரபல பொலிவுட் நடிகை ஷில்பா செட்டி புத்தகம் ஒன்றை எழுதி வருகிறாராம். பிக் பிரதர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சமையல் பணிகளில் ஈடுபட்டதால் தான் ஷில்பாவுக்கு இந்த சிந்தனை ஏற்பட்டதாம்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜேட் குட் போன்ற நடிகைகள் தான் சமைத்த உணவுகளை உட்கொள்ள முடியாமல் தான் தன்னை கேலி செய்தனரோ தெரியாது என்கிறார் ஷில்பா!

# நாளை முதல்

பிரபல நடிகையான லின்ட்சே லொஹான் அண்மைக் காலமாக பல வாகன விபத்துக்களில் சிக்கிக் கொண்டுள்ளார். இதன் மூலம் பாரிய ஆபத்துக்கள் ஏற்படவில்லை என்றாலும், இதனால் அவரது பெயர் பெரிதும் கெட்டுப் போய் விட்டுள்ளது.

அதிக மது போதையில் இவர் வாகனத்தைச் செலுத்தியே இந்த விபத்துகளுக்கு முகங்கொடுத்துள்ளார்.

இதனை நன்றாக உணர்ந்து கொண்ட இவர், தற்போது மதுவை மறப்பதற்கான சிகிச்சைகளைப் பெற்று வருகின்றார்.


இதன் பின்னர் மது போதை கொண்ட லின்சேயைப் பார்க்க முடியாது என பெருமையுடன் கூறி வருகிறார் லின்சே லொஹான்.



# இரட்டைக் குழந்தைகள் நலம் காத்தல்

**தாயின்** கருவறையைப் பகிர்ந்து கொண்டது முதல் இரட்டைக் குழந்தைகள் தங்களுக்கான உலகத்தை சேர்ந்தே கண்டுபிடிக்கின்றன. இரட்டையர்கள் எப்போதும் இயற்கையால் ஒருங்கிணைந்த இரு தனிநபர்கள் என்பதை முதலில் புரிந்து கொள்வது நலம். ஒரு குழந்தையை வளர்ப்பது என்பதே ஒரு முழு நேர வேலை. இதில் ஒரே சமயத்தில் கடுமையான வேலைப்பளுவைச் சுமத்துவது. இரட்டையர்களின் உறவுகளை சிறு பராயத்தின் முதலே கடினமாக பேணி வளர்ப்பது அவசியம்.

இரட்டைக் குழந்தைகளைப் பெறுவது வாழ்வில் மகிழ்ச்சியான கணங்களில் ஒன்று. எனினும், அதிகம் உழைப்பைக் கோருவதும் இவர்களை பேணி



வளர்ப்பதுதான் இரட்டைக் குழந்தைகளைப் பெற்று மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வரும்போது தாய்மார்கள் தங்களை மனதளவில் கடுமையான உழைப்பிற்கு தயார்படுத்திக் கொள்ள வேண்டும். எதற்கு முன்னுரிமை கொடுப்பது என்பது பற்றி தாய்மார்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

முதல் ஒரு சில மாதங்களில் துணி மாற்றுவது முதல், தாய்ப்பால் கொடுப்பது வரை அவர்களைத் தூங்க வைப்பது போன்ற விஷயங்களில் இரட்டை சவாலை எதிர்கொள்ள வேண்டி வரும். பொதுவாகவே குழந்தை பிறந்த சில நாட்களுக்குப் பிறகு உதவி தேவை, இரட்டைக் குழந்தை எனும் போது பிறரின் உதவி என்பது கட்டாயத் தேவை. உங்கள் வாழ்க்கைத் துணைவரிடம் பேசுங்கள். அதாவது குழந்தை வளர்ப்பில் கடமைகளைப் பகிர்தல் பற்றி அவருக்கு விளக்குங்கள். குழந்தை வளர்ப்பில் தாய், தந்தை இருவரும் ஈடுபடுவது பெற்றோர்கள், குழந்தைகள் இருவருக்குமே நல்லது.


தாய்மார்கள் இரவுத் தூக்கத்தை இழக்க நேரிடுவதால், பகலில் கிடைக்கும் நேரத்தில் ஓய்வு எடுத்துக் கொள்வது சிறந்தது. தூக்கமின்மையால் களைப்பு மேலிட எதிர்மறை எண்ணங்கள் மனதில் தோன்றலாம். இரட்டைக் குழந்தைகளைப் பெற்றவர்களுக்கு எப்போதுமே குழந்தைகள் மேல் காட்டும் அக்கறையில் தாங்கள் பின்தங்கியிருக்கிறோம் என்ற உணர்வு அடிக்கடி ஏற்படும். இரட்டையர்களில் ஆளுக்கு ஒருவரை மாற்றி மாற்றி வைத்துக் கொள்ளவும். இரட்டையர்கள் என்பதை விட இருவரும் இரு தனி நபர்கள் என்பதை நினைவில் இருத்த வேண்டும். இரட்டைக் குழந்தைகளில் தாய்மார்களுக்கு ஒரு வசதி உண்டு. இருவருக்குமே - குழந்தைகளில் தாய்மார்களுக்கு ஒரு வசதி உண்டு. இருவருக்குமே தாய்ப்பால் கொடுக்கலாம். ஆனால், இருவருக்கும் தேவையான பால் சுரப்பது பற்றிய கவலை சூழ்ந்து கொள்ளத் தொடங்கும். ஆனால், பால் சுரக்க தேவையானவற்றை தாய்மார்கள் சாப்பிடத் தொடங்க வேண்டும். குழந்தைகளின் உடல் எடை சரியாக உள்ளது என்று மருத்துவர்கள் கூறும்வரை இது பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை.

இரட்டைக் குழந்தைகள் என்றவுடன் நாம் இருவருக்கும் ஒரே மாதிரி உடை அணிவித்து, ஒரு மாதிரி அனைத்தையும் செய்து, எது யார் என்பதை மறைத்து பிறரிடம் அடையாளம் கூறச் சொல்லி விளையாடுவது வழக்கம். ஆனால் இருவரும் தனித்தனியான



நபர் என்பதை பிறந்த அந்த நாள் முதல் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.அவங்க 'ட்வின்ஸ்' என்று கூறும் பழக்கத்தைத் தவிர்ப்பது நலம். இருவரின் பெயரையும் தனித்தனியாக அழைப்பது நலம். இரண்டு குழந்தைகளையும் தனித்தனியாக புகைப்படம் பிடித்து வைக்கவும். ஏனெனில் ஒருநாள் தன் புகைப்படத்தை அவர்கள் கேட்கக் கூடும்.

தனித்தன்மையை ஊக்குவிக்க



வேண்டும். இருவரும் வளர வளர வேறு வேறு பொம்மைகளை வாங்கிக் கொடுத்து, இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியத்தை ஊக்குவிக்க வேண்டும். இருவரிடமும் தனித்தனியாக வேறு வேறு முறையில் உறவு வைத்துக் கொள்ளவும். இரட்டையர்களிடையே ஒரு சிறப்பு பந்தம் உண்டு. இதை காயப்படுத்தாமல் தனித்துவத்தை வளர்த்தெடுக்கவும். வளர்ந்த பிறகும் கூட இருவருக்குமான தனித்தனியான நண்பர்கள் வட்டாரத்தை ஊக்குவிப்பது சிறந்தது.

இரட்டையர்கள் ஒரே வேகத்தில் வளர்ச்சியடைவார்கள், பல தருணத்தில் ஒரே பொருளை இருவருமே விரும்புவார்கள், இது பெற்றோர்களுக்கு கடினமான சூழ்நிலை. இருவரும் வேறு வேறு பொருட்களை விரும்பினாலும் கூட கடினமான சூழ்நிலைதான். இதைப் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பல சமயங்களில் இருவரும் ஒரே விதமான பழக்க வழக்கங்களைக் கைகொள்வார்கள். ஆகவே இருவரின் தனித்துவத்தையும் வலியுறுத்திக் கொண்டே வரவேண்டும்.

இரட்டையர்கள் குறித்த ஆய்வு ஒன்று கீழ் வருமாறு தெரிவிக்கிறது. இரட்டையர்கள், தனிப் பிறவிகளை விட வன்முறை உணர்வு குறைந்தவர்கள், இரட்டையர்கள் தங்களுக்கிடையே உணர்வு, சிந்தனை ஆகியவற்றில் உள்ளார்ந்த நெருக்கம் நாடுபவர்களை வளர்க்கும் வரை சிரமம் தான். ஆனால் கடினமான வளர்ப்புக்குப் பிறகு இரட்டைக் குழந்தைகள் பெற்றோர்களுக்குப் பெருமை சேர்ப்பவர்கள் என்பது உறுதி.




## கர்ப்பக் காலத்தில் வரும் காமாலை நோய்

**மஞ்சள்** காமாலை நோய் வைரஸ் கிருமியினால் ஏற்படுவது.

0.4வீதம் பிரசவத்தில் காமாலை நோய் காணப்படுவதாய் மகப்பேறு மருத்துவர்கள் கூறுகின்றனர்.

வைரஸினால் உண்டாகும் காமாலை நோய் பொதுவாக சுத்தமில்லாத குடிநீரினால் தான் பரவுகிறது.

சுத்தமான, கொதிக்க வைத்து ஆற



வைத்த குடி நீரை உபயோகப்படுத்துவது இந்த நோயினை தவிர்க்கும் வழியாகும்.

மேலும் வீட்டில் யாருக்காவது இந்தக் காமாலை வந்திருந்தால் அவர்களின் துணிமணி, சாப்பாட்டுத் தட்டு, முதலியனவற்றை தனியாகவும் சுத்தமாகவும் வைத்தல் வேண்டும். வாந்தி, மலம் மூலமாகவும் இந்நோய் பரவும்.

கர்ப்பமாகும் முன்னரே இந்த நோய்க்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுதல் நலம்.

காமாலை வந்து விட்டதே என கர்ப்பத்தைக் கலைக்கத் தேவை இல்லை என்கின்றனர் மருத்துவர்கள். ஏனெனில் அது ஆபத்தானதாம்.

காமாலையில் குறை உள்ள குழந்தையோ வேறு ஏதும் கோளாறு உள்ள குழந்தையோ பிறக்க வாய்ப்பு இல்லை. ஐந்தாம் மாதம் ஆன பிறகு வந்தால் அந்த பாதிப்பில் குறைப் பிரசவமாக நேரிடலாம் என சொல்கிறார்கள் மருத்துவர்கள்.

எண்ணெய், கொழுப்பு பதார்த்தங்களை நீக்கி விட்டு, கீழ்காய் நெல்லி போன்றவற்றை சாப்பிடலாம். இதனால் நோயின் பாதிப்பு குறையும்.

காமாலை நோய் பாதிப்பில் ரத்தம் உறையும் தன்மை குறைந்து போகும். பிரசவத்தின் போது அதிக உதிரப்போக்கு ஏற்படும். ஆகவே வீட்டில் பிரசவம் பார்க்கக்கூடாது. சரியானபடி வைத்தியம் செய்யாவிடில் தாயின் உயிருக்கே ஆபத்து நேரக்கூடும்.


கர்ப்பம் ஆனதினாலேயே லிவரில் சில கொழுப்பு மாறுதல்களினால் காமாலை வர வாய்ப்பு இருக்கிறது. காமாலை வந்து பிரசவம் ஆனவர்கள் பிறகு கருத்தடைமாத்திரைகள் எடுக்கக்கூடாது. காப்பர் டி பொருத்திக் கொள்ளலாம்.

## முருங்கையின் மருத்துவப் பயன்கள்

**இது** ஒரு சத்துள்ள உணவு. இது உடல் வலிமையைக் கொடுக்க வல்லது. தன் சுபாவம் சூடு. ஆதலால் சூட்டுடம்புக்கு ஆகாது. இதை உண்டால் சிறுநீரும் தாதுவும் பெருகும். கோழையை அகற்றும். முருங்கைக் காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும்.

இதை, நெய் சேர்த்து சமைப்பது நல்லது.

சாதாரணமாக எல்லா வீட்டுக் கொல்லைகளிலும் தென்படும் முருங்கை மரத்தை மருத்துவ பொக்கிஷம் என்றே கூற வேண்டும். எண்ணற்ற வியாதிகளுக்கு அநேகமாக எந்த வியாதிக்குமே, பலவகைகளில் மருந்தாகிறது.



முருங்கை மரத்தை விதையிலிருந்து அதன் கிளைகளை வெட்டி நட்டும் உற்பத்தி செய்யலாம்.

இதில் ஒட்டுச் செடிகூட உண்டு என்றால் உங்களுக்கு வியப்பாயிருக்கும். அந்த ஒட்டு வகையில் நல்ல சதைப்பற்றான சுவையான காய்கள் கிடைக்கும். நீண்டு காய்க்கக் கூடியதாகவும் அதிக பலனைத் தரக்கூடியதாகவும் வளரும்.

முருங்கை மரத்தில் பட்டை, கீரை, காய், விதை, பிசின் அனைத்துமே பயன்படுகின்றன.


முருங்கைப் பட்டையை நீர் விட்டு அரைத்து வீக்கங்களுக்கும் வாயு தாங்கிய இடங்களுக்கும் போடுவது வழக்கம்.

முருங்கை இலையை உருவிய பின் காம்புகளை நறுக்கிப் போட்டு மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் உண்ண, கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கி சிறுநீரைப் பெருக்கும்.

முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்பு சத்து இவை இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் பொரித்துச் சாப்பிட்டால், ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும். பல் கெட்டிப்படும். தோல் வியாதிகள் தீரும்.

முருங்கைப் பட்டை, உலோகச் சத்துக்கள் நிறைந்தது. உணவில் கலந்து விஷத்துக்கும் நரம்புக் கோளாறுக்கும் ஒரு நல்ல மருந்து.

கடுமையான ரத்த, சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் இந்த வியாதிகளுக்கெல்லாம் முருங்கைக் காய் கை கண்ட மருந்து. முருங்கைக் காயை வேகவைத்து கொஞ்சம் உப்பு சேர்த்துச் சாப்பிடலாம். இதை உண்டதும் ஒரு தம்ளர் எருமை மோர் சாப்பிடுவது ஜீரணத்துக்கு உதவி செய்கிறது.



முருங்கை மரத்தின் மருந்து சக்தியை அறிந்தோ அறியாமலோ நாம் அடிக்கடி முருங்கைக்காயை உணவாகக் கொள்கிறோம். முருங்கைக்காய் சாம்பார் பலருக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாயிற்றே!

முருங்கைக் காய்ச் சாம்பார் சுவையாக இருப்பதோடு அல்லாமல், மலச்சிக்கல், வயிற்றுப்புண், கண்நோய் இவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

63

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே.அ. அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 13.03.2007

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -63**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 61 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

ரா.கமலாதேவி
E- 4/3, U.N.H.C.R. அலஸ்தோட்ட முகாம்,
திருகோணமலை.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

### ஷாங்காய் ஆப்பிள்

***தேவையான பொருட்கள் :-***

*ஆப்பிள் - 4*

*முட்டை - 1*

*கோதுமை மா - 3 மேசைக்கரண்டி*

*தண்ணீர் - 1/4 லீட்டர்*

*சீனி - 6 மேசைக்கரண்டி*

*எள் - 1 மேசைக்கரண்டி*

*எண்ணெய் - தேவையான அளவு*

*செய்முறை :-*

* தோலையும், விதைகளையும் நீக்கிவிட்டு, ஆப்பிள்களை பெரிய சதுரங்களாக வெட்டவும்.
* ஒரு பாத்திரத்தில் முட்டையையும், கோதுமை மாவையும் கலந்து வைத்துக் கொள்ளவும். இந்த கலவையில் ஆப்பிள் துண்டுகளை தோய்த்து சூடான எண்ணெயில் பொன்னிரமாகும் வரை வறுக்கவும்.
* 1 மேசைக்கரண்டி எண்ணெயை சூடாக்கி, அதில் சீனியைச் சேர்க்கவும். 5 நிமிடம் சமைக்கவும். அதில் வறுத்த ஆப்பிள் துண்டு களையும், எள்ளையும் சேர்க்கவும்.
* பிறகு தண்ணீரில் விட்டு குளிர வைக்கவும்.




**பாதை** ஓரமாக உட்கார்ந்து கொண்டோம். நான் ஷூக்களைக் கழற்றினேன். என் பாதங்கள் ஒரே இரத்தக் களரியாக இருந்தன. அண்டோனியோவும் அந்தக் குதிரைக்காரனும் ஏதோ வேகமாகப் பேசிக் கொண்டார்கள். கோவாஜிராவுக்குப் போவதென்ற என் திட்டம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அது தெளிவாய்த் தெரிந்தது. என்னைக் குதிரை மீது ஏற்றிக் கொள்ளும்படி அண்டோனியோ சாடை காட்டினான். ஷூக்களைத் தோளில் தொங்கப் போட்டுக் கொண்டு, காலைத் திறந்தாற் போல் வைத்துக் கொண்டால் என் கால் புண் உலர்ந்து போகுமாம். இவ்வளவையும் சைகைகள் மூலமாகவே எனக்குப் புரிய வைத்தான்.

குதிரைக்காரனும் ஏறிக் கொண்டான். அண்டோனியோ என் கைகளைக் குலுக்கினான்.

அவ்வளவுதான், கண்ணிமைக்கும் நேரம்கூட இல்லை. அண்டோனியோவின் நண்பனுக்குப் பின்னால் நான் அமர்ந்திருக்க, குதிரை பறந்தது.

அன்று பகல் பூரா, அன்று இரவு பூரா நாங்கள் குதிரைச் சவாரியில் சென்றோம். நடுநடுவே சிறிது நிற்போம். அவன் ஒரு புட்டி சாராயம் எனக்குக் கொடுப்பான். கொஞ்சம் குடிப்பேன்.

மறுநாள் விடிகாலையில்அவன் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான். வெயில் ஏறிற்று. கல்லைப் போலிருந்த ஒரு பாலாடைக் கட்டியும், இரண்டு பிஸ்கெட்டுகளும் கொடுத்தான். ஆறு கொக்கோ இலைகளும்,அவற்றை வைத்துக்கொள்வதற்காக பெல்ட்டில் கட்டக்கூடிய வாட்டர் புரூ·.ப் பையொன்றும் பரிசாக அளித்தான். என்னைக் கைகளால் அணைத்துக் கொண்டு அண்டோனியோவிடம் செய்தது போலவே என் தோளைப் பெருவிரலால் தட்டினான். பின்பு குதிரையில் ஏறிக்கொண்டு முழு வேகத்தில் பறந்துவிட்டான்.

பிற்பகல் ஒரு மணிவரையில் நடந்து போய்க் கொண்டிருந்தேன். புதர்ப் பகுதி எதுவும் அதற்கப்புறம் இருக்கவில்லை. தொடுவானம் வரையில் ஒரே ஒரு மரம்கூடத் தென்படவில்லை. கொளுத்தும் வெயிலில் பளபளத்தது நேர்த்தியான கடல். என் ஷூக்களை என் இடது தோள் மீது போட்டவாறே வெறும் காலுடன் நடந்தேன். சரி,கொஞ்ச நேரம் படுத்திருக்க வேண்டியதுதான் என்று நான் முடிவெடுத்த அதே சமயம், தொலைவில் கடற்கரைக்கு மிகவும் தள்ளினாற்போல் ஐந்தாறு மரங்கள் இருப்பது போல் தோன்றியது. ஒரு வேளை பாறைகளோ என்னவோ.

எவ்வளவு தூரம் இருக்கும் என்று கணக்கெடுக்க முயன்றேன். அநேகமாய் ஆறு மைல் இருக்கக்கூடும். கொக்கோ இலையொன்றை எடுத்து அதில் பாதியை மென்று கொண்டே புறப்பட்டேன்.

ஒரு மணி நேரத்துக்குப் பின்னர்,தூரத்தில் தெரிந்தவை என்னவென்று சந்தேகமில்லாமல் காண முடிந்தது. குடிசைகள் அவை. வைக்கோல் அல்லது வெளிர் பழுப்பான தழையைக் கொண்டு அவற்றிற்கு கூரை வேய்ந்திருந்தார்கள். ஒரு குடிசையிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது. பிறகு சில சிவப்பிந்தியர்களைக் கண்டேன். எல்லோரும் குடிசைகளுக்கு முன்னே கூடி என்னைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.அந்த ஆண்களும்,பெண்களும் முக்கால் நிர்வாணமாக இருப்பதும் எனக்கு நன்கு தெரிந்தது. உடம்பின் அந்தரங்கமான பாகங்களை மட்டும் சிறிது துணி மறைத்துக் கொண்டிருந்தது. அவர்களை நோக்கி மெதுவாக நடந்தேன்.

மூன்று பேர் ஆண்கள் - தங்கள் வில்லின் மேல் சாய்ந்தாற் போல் நின்றிருந்தார்கள். கைகளில் அம்பு வைத்திருந்தார்கள். நட்பு முறையிலோ அல்லது பகைமை முறையிலோ அவர்கள் துளியும் அசையக் காணோம். குரைத்துக் கொண்டே ஒரு நாய் வெறியுடன் என்மீது பாய்ந்து வந்து, என்



முழங்காலுக்குக் கீழே கடித்தது. என் டிரௌசரில் ஒரு துண்டைப் பிய்த்து விட்டது. என்னை மறுபடியும் தாக்குவதற்காகப் பாய்ந்தபோது, ஒரு சிறிய அம்பு அதன் வால் பக்கத்தில் தாக்கியது.

நாய் ஊளையிட்டுக் கொண்டு பறந்தது. ஏதோ ஒரு வீட்டுக்குள் புகுந்து கொண்டது என்று தோன்றியது.

நான் அவர்களை மேலும் நெருங்கினேன். நொண்டிக்கொண்டே நாய் ரொம்ப மோசமாகத்தான் கடித்து விட்டது.

ஒருவர்கூட இன்னும் அசையவில்லை, பேசவுமில்லை. குழந்தைகள் தங்கள் தாய்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தனர். பெண்களின் மார்பகங்கள் உயர்ந்தும், உறுதியாயும் துருத்திக் கொண்டும் இருந்தன. காம்புகள் மிகப் பெரியவை. ஒரே ஒருத்திக்கு மட்டும் கனத்து, தொய்வாக இருந்தது.

ஆண்களில் ஒருவனுடைய தோற்றம் ரொம்பப் பெரிய மனிதத் தன்மையாக இருந்தது. செதுக்கி எடுத்தாற் போன்ற உடலமைப்பு. அவன் அங்கே நாட்டாண்மைக்காரன் போன்றவன் என்று பார்த்தவுடனேயே தெரிந்ததால் நேரே அவனை நோக்கிச் சென்றேன். அவனிடம் வில்லும் இல்லை, அம்புமில்லை. என்னளவு உயரமே அவனும் இருந்தான். தலைமயிர் ஒரு கொத்து புருவங்களுக்கு ஒட்டிவருகிறமாதிரி கவனமாக முடி வெட்டிக்கொண்டிருந்தான். அவன் காதுகளைத் தலைமயிர் மூடி மறைத்துக் கொண்டிருந்தது. நல்ல தார்க் கறுப்பான முடி. இரும்புப் பழுப்பான கண்கள். மார்பிலோ, கையிலோ ரோமம் இருக்கவில்லை. வலுவான தசைநார்கள் புடைக்கும் தொடை. உருண்டையாய், மென்மையாய், செப்பு நிறமான கால்கள். வெறும் காலுடன் இருந்தான்.

அவனுக்கு மூன்று கெஜ தூரத்தில் நான் நின்றேன். அவன் இரண்டடி முன்னே வந்து, என் முகத்தை நேருக்கு நேராய்ப் பார்த்தான். இந்தப் பரிசோதனை இரண்டு நிமிடம் நடைபெற்றது. அவன் உடம்பில் அசைவே இல்லை. பாதாம் விழிகள் வைத்த செப்புச் சிலை போலிருந்தான்.

பிறகு அவன் புன்னகை புரிந்தான். என் தோளைத் தொட்டான். உடனே எல்லோரும் வந்து என்னைத் தொட்டார்கள். இளமையான சிவப்பிந்தியப் பெண்ணொருத்தி வந்து என் கையைப் பிடித்து, குடிசை நிழலுக்கு அழைத்துச் சென்றாள். அங்கு என் டிரௌசர் கால்களை மேல் புறமாகச் சுருட்டி விட்டாள். எங்களைச் சுற்றி வட்டமாக அனைவரும் உட்கார்ந்தார்கள். ஒருவன் கொளுத்திய சுருட்டிடொன்றைக் கொடுத்தான். வாங்கிப் புகை பிடிக்கத் தொடங்கினேன். நான் சுருட்டுப் பிடித்த முறையைக் கண்டதும் குபீரென்று அவர்கள் சிரித்தார்கள். ஏனெனில், அவர்களெல்லோரும் - ஆண்களும் சரி, பெண்களும் சரி - எரியும் நுனியை வாய்க்குள் வைத்துக் கொண்டு சுருட்டுப் பிடிப்பது வழக்கம்.

நாய் கடித்த இடத்தில் இரத்தம் வருவது நின்று இருந்தது. ஆனால், ஐந்து பிராங்க் நாணயத்தில் பாதியளவுக்குச் சதை பிய்ந்து போய்விட்டது. அந்த இளம் பெண், காயத்தைச் சுற்றி வளர்ந்திருந்த ரோமங்களைக் கிள்ளி எறிந்தாள். காயம் பட்ட இடம் சுத்தமாக்கப் பட்டதும், ஒரு சிவப்பிந்தியச் சிறுமி எடுத்து வந்த கடல் நீரைக் கொண்டு காயத்தைக் கழுவினாள். அதே சமயம், நன்றாய்ப் பிதுக்கி இரத்தம் வரும்படி செய்தாள். அவளுக்குத் திருப்தி தரும் வகையில் பலன் ஏற்படவில்லை போலும். கூர் தீட்டிய இரும்புத் தகடு கொண்டு வந்து, காயத்தின் இரண்டு இடுக்குகளைச் சுரண்டி அகலப்படுத்தினாள். எல்லோரும் கவனித்துக் கொண்டிருந்ததால், முகம் சிணுங்காமலிருக்க எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயன்றேன். இன்னொரு பெண்ணும் உதவ விரும்பினாள். ஆனால் இவள் அவளை முரட்டுத்தனமாக அப்பால் தள்ளி விட்டாள். அதைக்

**எழுதியது: ஹென்றி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

கண்டு அனைவரும் சிரித்தார்கள். நான் அவளுக்கு மட்டுமே உரிய உடைமையென்பதை மற்றவருக்குக் காட்ட விரும்புகிறாளென்று நான் புரிந்து கொண்டேன். அதுதான் அவர்களுக்கெல்லாம் வேடிக்கையாயிருந்தது. பிறகு என் டிரௌசரை முழங்காலுக்குச் சற்று மேலாக இருக்கும்படி வெட்டி விட்டாள். யாரோ அவளிடம் கடல் பூண்டுகளைக் கொண்டு வந்து தந்தார்கள். கல்லில் வைத்து அரைத்து, காயத்தின் மீது அப்பினாள். என் டிரௌசரிலிருந்தே நாடா கிழித்துக் கட்டுப் போட்டாள்.

தன் வேலையைக் குறித்துத் தானே திருப்தி அடைந்தவளாக, என்னை எழுந்திருக்குமாறு சைகை காட்டினாள்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**இவர்கள்** பக்தியுணர்வினால் அடியார்களாகாமல், வீட்டடிமைகளாக பணிபுரிந்தோர் உரிமையாளர்களின் செயலினால் இந்நிலைக்குத்தள்ளப்பட்டார்.

பெண் ஒடுக்கு முறையும் மனுஸ்மிருதியும்

இந்துக்களின் முக்கியமான மனுஸ்மிருதியிலிலேயே, பெண்களின், அடக்கு ஒடுக்கு முறைகள், இரண்டாம் தரத்தையுடையவர்கள், அடிமைதனத்துடன் வாழுதல் போன்றவற்றை காணலாம்.ஒரு பெண் குழந்தை பருவத்தில் - தந்தை,இளமையில் - கணவன், முதுமையில் - மகன் என்ற உறவின் பாதிப்பில் வாழவேண்டுமென இந்நூல் கூறுகிறது. கல்வியை விட பெண்களின் கற்பை பாதுகாத்து கணவனிடம் ஒப்புவிக்கவேண்டுமெனவும் கூறுகிறது. மேலும் ஆண் குழந்தை பிறந்தால் மட்டுமே புத் எனும் நகரத்திற்கு போகாதபடி காக்கப்படும். பெண் பிறந்தால் அது வம்சத்திற்கு சிரார்த்தம் செய்யவேண்டுமென மதம் கூறி இரண்டாம் தரமாக பெண்களை தள்ளுகிறது. அத்துடன் கணவனுக்கு பணிவிடை செய்வதே இறைவனுடைய தொண்டு எனவும்,எதிர்ச்சொல் பேசாமல் அவனுக்கு கீழ்படியவேண்டுமெனவும்,வருங்கால கணவன் வீட்டாருக்கு பணிவான



வேலைகாரி போலவும் செயற்படவேண்டுமென பெண்களுக்கு இந்நூல் கூறுகின்றது.இதில் பெண் அடக்கு முறை தெளிவாயுள்ளது.

புத்திரன் பிறந்தால் சொர்கமும்
பேரன் பிறந்தால் சொர்க்கத்தின் நிலைப்பேறும்
புத்திரனுக்கு பேரன் பிறந்தால்
பேரனால் ஒருவன் சூர்யலோகம்
பெறுகிறான்

இவ்விதப்பெண்களை இரண்டாத்தரமாக காட்டுகின்றனர். பெண் குழந்தைகளுக்கு, இனிமை, அழகு, தெளிவு,மங்களம் நிறைந்த கவர்ச்சியான பெயர்கள் வைக்கவேண்டுமென இநநூல், கூறுகின்றது. இதன் மூலம் ஆண் எப்படிப்பட்ட அந்தஸ்தில் இருந்தாலும் தாக்கம் ஏற்படாது. ஆணுக்கு அழகு, கவர்ச்சி, இனிமையூட்டுபவளாக பெண் காணப்படுவதோடு பெயரிலும் காணப்படவேண்டும். இவ்விதமாக மனுஸ்மிருதி, மானிடர்க்கு மனோரீதியான படத்தைக் கொடுக்கின்றது. மேலும் குரல், பற்கள்,கூந்தல், உடல், அன்னநடை அனைத்தும் மென்மையானதாக இருக்கவேண்டும். ஆடைகளினால் தன்னை அழகுபடுத்தாத மாதுவினால்

கணவனுக்கு மகிழ்ச்சியும் நன்மகவும் கிடைக்காதெனவும் கூறுகிறது. இப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக மதமே பெண்களை இரண்டாம் பட்சமாக தனது சமயக் கொள்கை மூலம் தள்ளுகின்றது.

தேவிகள் பெயரில் தேவதாசிகள்

பல்லவர் காலத்தில், சைவ சமய வளச்சியின் அருட்பணியில்,காரைக்கால் அம்மையார், திலவதி, மங்கைகரசி போன்ற சில விதிவிலக்கான பெண்களை காணலாம். இவர்கள் தெய்வத்தை தாயாக பார்த்தனர். தெய்வங்களை பெண்ணாக பார்க்கும் தன்மை அதிகமானதுடன் இஷ்டதேவதை வணங்கமும் அதிகரித்தது. இவையனைத்தும் ஆண்களினால் வரலாற்றில் எழுதப்பட்டன. உலகில் எந்தப்பகுதியிலும் காணப்படாத பெண் தெய்வங்களை உருவாக்கி, மிகைப்படுத்தி மயிர்கூச்செறியும் வகையில் வெளிக்காட்டினர். இவையனைத்தும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்பட்டது போன்றதாகும். சிவனையும் சக்தியை பாதிபாதியாக வைத்து "அர்தனாதிஸ்வரா" என குறித்தனர். சிவனுக்குள்ளிருந்து வெளிவரும் சக்தியானது பெண்ணாகும் . அதுவே உலகைப் படைத்ததினால் "ஆதிபாராசக்தி " எனக் கூறினர். அறிவு, ஆக்கம், அழிவு ஆகிய முப்பெரும் சக்திகளாகிய சரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கை மூவரையுமே உலகின் முக்கிய மூன்று காரியத்திற்கும் தலைவிகளாக்கினர். இதை சமுதாயத்தில் காணலாம்.

மதகுருமாரின் ஆசியுடன் விதவையான பெண்களை தீக்குளிக்கவைத்தனர். கணவனின் ஆன்மா சாந்தியடையவும் சொர்கத்தில் பதவி பெறுவான் என்ற மூடநம்பிக்கையின் கட்டுக்கதையையும் நம்பி,உயிருடன் அப்பாவி பெண்களை எரித்தனர். புரோகிதர்களும் மிகவும் இழிவாக நடத்தினர். விதவைகளுக்கான சமய சட்டங்குகளையும் நடைமுறைபடுத்தி இருந்தனர். ஒருவேளையே எளிய உணவு உட்கொள்ளல், வெறுந்தரையில் மட்டுமே படுத்தல் மலர்க்கூடாது, வர்ணஆடை, அணிகலன் அணியாதிருத்தல், வாசனைப் பொருட்களை உபயோகிதிருத்தல் போன்ற ,சமய நிபந்தனைகளை விதித்தனர். மறுப்பிறவியில் கணவனுடன் சேர கடுந்தவம் புரியவேண்டும், இல்லையெனில் மறுப்பிறவியில் கஷ்டம் நேருவதும் கணவனுடைய ஆன்மாவிற்கு கேடு செய்தவள் ஆவாள் எனக் கூறினர்.சமயம் என்ற போர்வையில் பிராமணர்கள், விதவைகளை மறுமணம் செய்யவிடாது வாட்டி வதைத்தனர். திருக்குறளிலும் ஆண்· சிந்தனைப் போக்கை காணலாம்.

**தெய்வந் தொழ அள் கொழுநின் தொழுவான்**
**பெய்யெனப் பெய்யும் மழை – குறள்.**

இதில் கணவனைத் தவிர வேறு தெய்வங்களை வணங்காது,தன் கணவனை வணங்கும் பெண், மழைப்பெய்ய வேண்டுமென்றால் மழைப்பெய்யும் என வள்ளுவர் கூறுகின்றார். இதில் பெண்ணுக்கு கணவன் தான் தெய்வம் என கூறுகிறார். "வாழ்க்கைத்

**ஸ்ரீ முகன்**

துணைநலம் " என்றப் பகுதியில் பெண் எப்படி இருக்க வேண்டுமென கூறுகிறார்.

ஆண்கள் எப்படி இருக்க வேண்டுமென கூறவில்லை.

**"அடிச்சிக்கிளியசளே அன்புடைய மாதே**
**புடி சொற் தவறாத பாவாய் அடிவருடி**
**பின் தூங்கி முன்னெழுந்த பேதையே**
**போதியோ**
**ஏன் தூங்கும் என் கண்ணீரா"**
- வள்ளுவர்-

இதில் அடியவனுக்கு இனிய அன்புடைய மாது எனக் கூறுகின்றார். மேலும் சொல் தவறாமல் இருப்பாய். என் பாதத்தை தடவி, தூங்க வைத்து, அதன் பிறகே நீ தூங்கினாலும் நான் விழித்தெழுந்து விடுவாய் என்று பெண்ணை குறிப்பிடுகிறார்.

*(துளிர்க்கும்)*

# “வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்”



**அமெரிக்க** அரசாங்கத்திற்கு, ஏன் - அமெரிக்கர்களுக்கே கம்யூனிஸ்ட் என்றால் பிடிக்காது. அவர்களை ஒழித்துக் கட்ட அமெரிக்கர்கள் பின்வாங்கியதே இல்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு ஹொலிவுட்டில் அப்பேர்ப்பட்ட சிவப்புக் கொடி எண்ணங்கள் உடையவர்களை நிர்மூலம் ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அமெரிக்க அரசாங்கம் ஒரு இயக்கத்தையே நடத்தியது. இதனால் பல எழுத்தாளர்கள், நடிகர்கள், இயக்குநர்கள் ஹொலிவுட்டில் வேலை வாய்ப்புக்களை இழந்தார்கள். உயிர் வாழ வெளிநாடுகளுக்கு ஓடினார்கள். வேலை கிடைத்த பலர் புனை பெயரில் தொழிலை நடத்தினார்கள். அந்த இயக்கப் பெயர் ‘மெக்கார்திஸம்’ (Macarthyism), ‘செனட்டர் மெகார்த்தி’ (Senator Macarthy) என்ற அமெரிக்க அரசியல்வாதி இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார். பின்னாளில் சாப்ளினின் வாழ்க்கையில் இந்த இயக்கத்தின் பிரதிபலிப்பு இல்லாமல் இல்லை.

அரசியல் காரணங்கள் மட்டுமல்லாமல் சாப்ளினின் பெயருக்கும் புகழுக்கும் அமெரிக்காவில் பெரிய ஓட்டை விழும் அளவில் நடந்தது மற்றொரு நிகழ்ச்சி. அது அமெரிக்காவை மட்டுமல்லாமல் உலகின் பல நாடுகளையும் கிடுகிடுக்க வைத்தது.



சுருக்கமாகச் சொன்னால் அவர் ஒரு பெண்ணுடன் வைத்துக் கொண்ட தொடர்பின் எதிரொலி அது.

அணுகுண்டு போல வெடித்த சாப்ளினின் இந்த அந்தரங்க வாழ்க்கைப் படலத்திற்கு முன்பு, அவருக்கு ஏறத்தாழ ஹொலிவுட்டில் அந்நாளில் கொடிகட்டிப்பறந்த, கொடிகட்டிப் பறக்க முயன்றுகொண்டிருக்கும் நடிகைகளுடன் தொடர்புகள் இருக்கத்தான் செய்தது. இதில் ஒரு விஷேசம் என்னவென்றால், அவர் தன்னுடைய லீலைகளை மறைமுகமாகவோ திரைக்குப் பின்னாலோ நடத்தியதில்லை. அவருடைய லீலா வினோதங்களை மக்களுக்குக் களிப்பூட்டுவதற்கென்றே சில பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள் இரவும் பகலுமாகத் தங்கள் செய்திப் பசிக்கு இரை தேடிக்கொண்டிருந்தார்கள். அதைக் கொடுக்க சாப்ளினும் தவறியதேயில்லை.

லொஸ் ஏஞ்சல்ஸிற்கு அருகில் பசிபிக் மகா சமுத்திரத்தின் நடுவில் காட்டலீனா (Catalina) என்று ஒரு தீவு. இங்கு சைக்கிள், குதிரை வண்டிகளைத் தவிர மோட்டார் கார்களோ ஸ்கூட்டர்களோ போன்ற வண்டிகளுக்கு அனுமதி இல்லை. விடுமுறை நாட்களில் இங்கு வசதி உள்ளவர்கள் ஜோடியாக வருவது வழக்கம். தனியாக வருபவர்களுக்கு அங்கு ஜோடியும் கிடைக்கும்! சாப்ளின் இந்தத் தீவிற்கு அடிக்கடி தன் காதலியுடன் விடுமுறை இல்லாத நாட்களில் செல்வார். அப்படிப்பட்ட நாட்களில் கூட்டம் அதிகமாக இருக்காது. ஆகவே அந்நாட்களில் சாப்பிளின் தன் காதலியுடன் அந்தத் தீவில் நிர்வாணமாக நடமாடுவார் என்ற வதந்திகளும் உலாவின. எப்படியாவது அந்தக் காட்சியை ஒரு படமாவது எடுக்க முடியுமாக என்ற எதிர்பார்ப்போடு பல புகைப்படக்காரர்கள் வீணாக அலைந்தது உண்டு.

அந்த வகையில் அவருடன் அதிகமாகப் பாடி ஆடித் திரிந்தவள் அன்றைய பிரபல அழகி நடிகை பெக்கி ஹாம்கின்ஸ் ஜாய்ஸ் (Peggy Hopkins Jayce). இவள் நடனக் காட்சிகளில் நடிக்கும் ஒரு சாதாரண நடிகை. ஆனால் இவளுடைய அழகும், அங்க அமைப்பும் அவள் அவைகளை மற்றவர்களுக்குத் தாராளமாகக் கொடுக்கும் முறைகளும் அவளை பெரிய கோடீஸ்வரியாக்கியது. ஐந்து முறைகள் திருமணம் செய்து கொண்டாள். ஒவ்வொரு விவாகரத்தின் பொழுதும் பல கோடி டாலர்கள் அவளுக்கு இலாபம். அவள் சாப்ளினுக்கு மிகவும் நெருங்கியவளானாள். அவள் சாப்ளினிடம் விரும்பியது அவர் பணத்தை அல்ல. அவளுக்கு அவரிடம் தேவையானது சாப்ளினின் ஆண்மை.



அந்நாளில் ஹாலிவுட்டில் ஆண் அழகர்கள், காதல் மன்னர்கள் போன்றவர்களை விட சாப்ளினிடம் அதிக ஆண்மை இருந்தது என்று பகிரங்கமாகவே பேசப்பட்டது!

தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி அவள் உறங்குவதற்கு முன்பு, சாப்ளினிடம் விரிவாகவே காதில் ஓதுவாள். ஆண்மையைப் போலவே கற்பனை வளமும் அதிகமாக இருந்த சாப்ளின், அவள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைத் தன் படங்களில் புகுத்தினார். அவைகளை மையமாக வைத்து அவர் உருவாக்கிய படம் “தி வுமன் ஆ.்.ப் பாரிஸ்” (The Woman of Paris).

***தி வுமன் ஆ.்.ப் பாரிஸ் - படம், கதை***

இந்தப் படத்தில் தன்னுடைய ஆரம்ப கால காதலியும் நடிகையுமான எட்னா பர்வேயன்ஸ் தான் கதாநாயகி. தன்னுடன் பல வகைகளில் ஒத்துழைத்த எட்னாவை சந்தோஷப்படுத்துவதற்காகவே இந்தப் படத்தை எடுத்தார் என்று சொல்பவர்களும் உண்டு. இந்தப் படத்திற்குப் பிறகு அவள் சாப்ளினுடன் நடிக்கவில்லை.

“தி வுமன் ஆ.்.ப் பாரிஸ்” எதிர்பார்த்தபடி நகைச்சுவை நிறைந்த படமல்ல. அதில் சாப்ளின் நடிக்கவும் இல்லை. எழுதி இயக்க மட்டும் தான் செய்தார். இதில் பலவகையான மனித உணர்ச்சிகளை நடமாட விட்டார் சாப்ளின். திரைமீது கதை சொல்லும் முறையிலும் அவர் பல புதுமைகளை இப் படத்தில் செய்தார்.

*(தொடரும்)*

## உங்களை நீங்களே காதலிப்பது எப்படி?

காதலிப்பதும் காதலிக்கப்படுவதும் இரண்டுமே இனிமையான உணர்வுகள் தான். ஆனால் கொஞ்சம் வித்தியாசமாக நம்மை நாமே காதலிப்பது எப்படி? என்பதைப் பற்றி பார்க்கலாமா? நம்மை நாமே காதலிக்கத் தொடங்கும் போது அடுத்தவர்களுடைய உணர்வுகளை நம்மால் விரைவில் உணர முடியும். ஆனால் நம்மை நாமே காதலிக்க நாம் செய்ய வேண்டியது என்ன என்று பார்ப்போம்.

* உங்களுக்கு விருப்பமானவர்களிடம் சென்று உங்களிடம் அவர்களுக்குப் பிடித்தமான விஷயங்கள் என்னென்ன என்று கேட்டுக் கொள்ளுங்கள்.

* அடுத்து உங்களிடம் உங்களுக்கே பிடித்தமான விஷயங்கள் என்னென்ன என்பதைப் பற்றியும் பட்டியல் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

*உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நடக்கக்கூடிய உங்களைச் சார்ந்த சில விஷயங்கள் அல்லது உங்களிடமே நீங்கள் விரும்பக் கூடிய புதுமையான விஷயத்தைக் கண்டு பிடித்து அதை நினைக்கப் பழகுங்கள்.


* உங்களையே ஒரு நல்ல நண்பனாக நினைத்துக் கொண்டு விரும்ப ஆரம்பியுங்கள். இது போன்ற ஆத்மார்த்தமான அன்புணர்வு உங்களுக்குள் ஏற்படும் போது அது உங்களின் மனதை இலகுவாக்கும்.

* சில தருணங்களில் உங்களுக்குத் தெரிந்த சில பேர் உங்களைப் பற்றி நல்ல விஷயங்களைக் கூறினால் அதையும் குறிப்பெடுத்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களைப் பற்றி எப்போதும் உயர்வாக நினைக்கப் பழகுங்கள்.

* உங்களின் ஆழ்மனதில் இருந்து உருவாகும் அன்பை அடிக்கடி உணர முற்படுங்கள்.

* உங்கள் மனதில் எழும் எதிர்மறையான சிந்தனைகள், குழப்பமான எண்ணங்கள் இவற்றையும் பட்டியல் போட்டுக் கொள்ளுங்கள்.

இவற்றை எல்லாம் முறையாக செயல்படுத்திய பிறகு, உங்களுடைய தேவை என்ன? அதை எவ்வாறு செய்ய வேண்டும் - என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். அதற்கு ஏற்ற தெளிவான விடை உங்களுக்குக் கிடைக்கும்.






## “பெண் சிவாஜி” கின்னஸ் சாதனை!

“**சின்னக்கவுண்டர்**” படத்தில் விஜயகாந்தின் தாயாராகவும், “கிழக்குவாசல்” படத்தில் கார்த்திக்கின் தாயாராகவும், “அண்ணாமலை”யில் ரஜினியின் தாயாராகவும், “அபூர்வ சகோதரர்கள்” படத்தில் கமலின் தாயாராகவும் சிறப்பாக நடித்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றார்.

மனோரமா நிறைய படங்களில் நடித்திருக்கிறார் என்றாலும், தனக்குப் பிடிக்காத கதாபாத்திரத்தில் நடிப்பதில்லை.

‘ஆசை மனைவி’ என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆன பிறகு, தனது கேரக்டர் பிடிக்காததால் “நடிக்க முடியாது” என்று கூறிவிட்டார்.



“கொஞ்சும் குமரி”யில் கதாநாயகியாக மனோரமா நடித்தார். உடன் இருப்பவர் மனோகர்.

***அதுபற்றி மனோரமா கூறியதாவது:-***

“ஒரு குடும்பத் தலைவியே தனது மகளை வைத்து விபசாரத் தொழில் நடத்துவது போலக் கதையை அமைத்திருந்தார்கள். இதில் ஏதாவது மாற்றம் செய்ய முடியுமா? என்று கேட்டேன். “முடியாது” என்றார்கள்.

“அப்படியானால் என்னை விட்டு விடுங்கள். நான் விபசார விடுதி தலைவியாகவும், விபசாரியாகவும் நடித்து இருக்கிறேன். ஆனால் தன் மகளை விபசாரம் செய்ய வைக்கும் குடும்பத் தலைவியாக நடித்ததில்லை. குடும்பத் தலைவி, மானத்தைக் காக்க வேண்டியவள். விபசாரம் செய்வதுபோல நடிக்க மாட்டேன். தப்பாக நினைக்காதீர்கள்” என்று சொல்லிவிட்டு, உடனடியாக முற்பணத்தையும் கம்பெனி உடைகளையும் திருப்பி அனுப்பி விட்டேன் இவ்வாறு மனோரமா கூறினார்.

5 முதல் - அமைச்சர்களுடன் இணைந்து நடித்தார். சொந்தக் குரலில் 100 பாடல்களைப் பாடினார்.

உலகிலேயே அதிகப் படங்களில் நடித்தவர் என்ற சாதனையோடு ஐந்து முதல் - அமைச்சர்களுடன் சேர்ந்து நடித்தவர், சொந்தக் குரலில் 100 பாடல்களுக்கு மேல் பாடியவர் என்ற பெருமையும் பெற்றவர் நடிகை மனோரமா.

### முதல் அமைச்சர்கள்

ஆரம்ப காலத்தில் “சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்” நாடகத்தில், அண்ணாவுடனும், “உதயசூரியன்” நாடகத்தில் தி.மு.கழகத் தலைவர் கருணாநிதியுடனும் இணைந்து நடித்தார்.

பிறகு “அன்னமிட்டகை” உட்பட பல படங்களில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோருடனும், “லவகுசா” படத்தில் என்.டி.ராமராவுடனும் மனோரமா நடித்தார்.

இந்த ஐந்து பேரும் முதல் - அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்கள்.

***இதுபற்றி மனோரமா கூறியதாவது:-***

ஐந்து முதல் - அமைச்சர்களுடன் நடித்தது எனக்குக் கிடைத்த புகழ் மகுடம் ஆகும். இந்த பாக்கியம் யாருக்கும் கிடைத்தது இல்லை. அது மட்டுமில்லாமல், எம்.ஜி.ஆர்., சிவாஜி தொடங்கி தற்பொழுது சிம்பு வரை பல தலைமுறை நடிகர்களுடன் நடித்து உள்ளேன். இதுவும் யாருக்குமே கிடைக்காத பேறு.

அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால், மீண்டும் என் தாயார் வயிற்றில் பிறக்க வேண்டும், சினிமாவில் இதே மனோரமாவாகவே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

சினிமாவில் பல நல்ல விஷயங்கள் உள்ளன. எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம், என்னை யாரும் விகல்பமாக நினைப்பது இல்லை. அக்கா, தங்கை போல நினைக்கிறார்கள். அந்த சந்தோஷத்தில் வாழ்கிறேன்.

இவ்வாறு மனோரமா கூறினார்.

### சொந்தக் குரலில் பாட்டு

“மகளே உன் சமத்து” படத்தில் மனோரமா தனது சொந்தக் குரலில் “தாத்தா தாத்தா பொடி கொடு” என்ற பாடலைப் பாடி இருக்கிறார். அதன் பின்னர் பொம்மலாட்டம் படத்தில் “வா வாத்தியாரே ஊட்டாண்ட” என்ற பாடலையும், “பாட்டி சொல்லைத் தட்டாதே” படத்தில் “டில்லிக்கு ராஜா ஆனாலும் பாட்டி சொல்லைத் தட்டாதே” என்ற பாடலையும் பாடினார். “மே மாதம்” படத்தில் “மெட்ராஸை சுத்திப் பார்க்கப் போறேன்” என்ற பாடலையும் பாடினார்.



“குன்வாரா பாப்” இந்திப்படத்தில் மனோரமா கதாநாயகியாக நடித்தார். உடன் இருப்பவர் அப்படத்தின் கதாநாயகன் முகமூத்.

இதுவரை சுமார் 100 பாடல்களை சொந்தக் குரலில் பாடியுள்ளார்.

கதாநாயகி, நகைச்சுவை நடிகை, அக்கா, அண்ணி, தாயார், பாட்டி என பல பரிமாணங்களில் தனது நடிப்பை வெளிப்படுத்தி, தொடர்ந்து வெற்றி நடைபோட்டு வரும் மனோரமாவின் மகன் பூபதியும் நடிகர்தான்.

*(தொடர்ச்சி அடுத்த வாரம்)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## சிதைந்த நிலையில் ராஜீவினதும் தற்கொலைக் குண்டுதாரியினதும் சடலங்கள்


**ராஜீவ்** காந்தியின் சடலம் கிடந்த இடத்தில் இருந்த செங்கம்பள விரிப்பின் ஒரு பகுதியில் தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது. பொலிஸ் அதிகாரி ராகவன் அந்தத் தீயை அணைத்தார். இந்தக் குண்டு வெடிப்பில் சிறு காயங்களுடன் தப்பியவர்களையும் தடயங்களையும் தேடும் பணியில் பொலிஸ் அதிகாரி ராகவனும் அவரது குழுவினரும் ஈடுபட்டனர். சிறு தடயம் கூட விசாரணைக்கு பெரும் உதவியாக அமையும் என்பது பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரியும். ராஜீவ் காந்தியின் சடலம் பொலிஸ் வாகனம் ஒன்றில், பிரேத பரிசோதனைக்காக சென்னை பொது மருத்துவமனைக்குக்




கொண்டு செல்லப்பட்டது. வீடியோ படப்பிடிப்பாளர் ஹரிபாபு பயன்படுத்திய கமராவை பொலிஸார் எடுத்துக் கொண்டனர். ஏனைய சடலங்களையும் காயமடைந்தவர்களையும் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிய பின்னரும், பொலிஸ் அதிகாரி ராகவனும் அவரது குழுவினரும் அப்பகுதியிலேயே நின்று தடயங்களைத் தேடிக் கொண்டிருந்தனர்.

சென்னை பொது மருத்துவமனையில் ராஜீவ் காந்தியின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதாவது மே மாதம் 22ஆம் திகதி, நள்ளிரவிலிருந்து அதிகாலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. புதுடில்லியில் இருந்து இந்திய விமானப் படையின் விசேட விமானம் மூலம் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியும், மகள் பிரியங்காவும் சென்னை பழைய மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்து இறங்கினர். தகவல் தெரிந்ததும் அவர்கள் அழுது குளறினார்கள். பிரியங்காவைச் சமாளிக்க முடியவில்லை. ராஜிவ் காந்தியின் மீது அளவற்ற பாசம் கொண்டிருந்தவர் பிரியங்கா சோனியாவும் பிரியங்காவும் விமானப் படை விமானத்தில் புதுடில்லி திரும்பினர்.

செய்தி அறிந்ததும் தமிழ் நாடு மட்டுமல்ல, முழு இந்தியாவுமே அதிர்ச்சியால் குலுங்கியது. தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து இருந்ததால் தி.மு.க. தலைமையிலான அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்னர்தான் மத்திய அரசாங்கத்தினால் கலைக்கப் பட்டிருந்தது. ராஜீவ் காந்தியின் படுகொலை தமிழ் நாட்டில் நிகழ்ந்த போது, ஜனாதிபதி ஆட்சி அங்கு பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அப்போது தமிழக மாநில அரசாங்க ஆளுநராக பீஸ்ம நரேய்ன் சிங் இருந்தார்.



*தற்கொலைக் குண்டுதாரியின் மேலாடையோடு பொருத்தப்பட்டு குண்டு வைக்கப்பட்டிருந்த பகுதி.*

இந்தியாவின் முக்கிய புலனாய்வு நிறுவனமான, மத்திய புலனாய்வுப் பிரிவே ராஜீவ் காந்தியின் கொலை விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று ஆளுநர் பீஸ்ம நரேய்ன் சிங் கேட்டுக் கொண்டவர்

சென்னை பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் சடலம் மீதான பிரேதப் பரிசோதனையை டாக்டர் சிசிலியா சிறில்

**(அரசியல் தொடர்)**

மேற்கொண்டார். அவரின் உடலில் 22 காயங்கள் காணப்பட்டன. மண்டையோடு பிளந்து காணப்பட்டது. மூளை சிதைந்து போய் இருந்தது. மண்டையோட்டுக்குள் எலும்புகள் நொருங்கிப் போயிருந்தன. உதடுகள், மூக்கு, கண்கள், யாவும் சிதைந்திருந்தன. முகத்தில் சதைகளும் சிதைந்து போய் காணப்பட்டன. தாடையின் கீழ்ப் பகுதி சிதைவுற்றிருந்தது. மேல் பகுதியைக் காணவில்லை. வலது பக்க மார்புப் பகுதியில் பல்வேறு அளவிலான குண்டுகள் துளைத்த காயங்கள் காணப்பட்டன. வயிற்றுப் பகுதியின் இடது புறத்தில் ஆங்காங்கே உடல் கிழிந்து காணப்பட்டது. குடல், ஈரல் ஆகியவை வெளியே தெரிந்தன. இடது பக்க நுரையீரல் காணப்படவில்லை. வலது பக்கப் பெருவிரலும் சுட்டுவிரலும் சிதைந்து போயிருந்தன. உடல் பூராவுமே குண்டுகள் துளைத்துக் காணப்பட்டன. பெரும்பாலான எலும்புகள் முறிந்திருந்ததை எக்ஸ்றே படங்கள் எடுத்துக் காட்டின.

இதற்கிடையில், அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள், இரகசியப் பொலிஸ் பிரிவினர், வெடிமருந்துப் பொருள் நிபுணர்கள் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதோடு, தடயங்களையும் சேகரித்துக் கொண்டனர். தமிழ்நாட்டு சட்ட விஞ்ஞான ஆய்வு கூடப் பணிப்பாளர் பேராசிரியர் பி.சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் படுகொலைக்குப் பாவிக்கப்பட்ட வெடிமருந்து தொடர்பான தடயத்தை முதன் முதலாகப் பெற்றுக் கொண்டனர்.

மின்வயர்கள் இணைக்கப்பட்டிருந்த, சிதைந்து கிழிந்து போன நீலநிற டெனிம் துணித் துண்டுகளை அவர்கள் கண்டெடுத்தனர். அதை ஆராய்ந்து பார்த்தபோது, அந்தத் துணிகளில் மூன்று படிமங்கள் காணப்பட்டன. மத்தியில் காணப்பட்ட துணியில், வெள்ளை நிற நூல் தைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. ஏனைய இரண்டும் நீல நிற டெனிம் வகையைச் சேர்ந்தவை. மேலாடைக்குள் பெல்டுகளின் வடிவிலான பகுதியும் காணப்பட்டன. துணியிலான இந்த பெல்ட்டைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் சிப்பும் அதில் காணப்பட்டன. அந்த டெனிம் துணியில் மின்வயர்களை வைக்கக்கூடிய, விசேடமாகத் தைக்கப்பட்ட சிறிய குழாய் வடிவிலான பகுதிகளும் காணப்பட்டன. பச்சை மற்றும் ஒரேஞ் நிறத்திலான துணித் துண்டுகளும் மார்புக் கச்சையின்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

ஒரு பகுதியும் பெல்ட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்கக் காணப்பட்டன. வெடிமருந்தின் வெப்பம் காரணமாகவே இவை பெல்ட்ரோடு ஒட்டிக் கொண்டிருக்கக் காணப்பட்டன. குண்டு வெடிப்பு நடந்த இடத்திலேயே, இந்த டெனிம் துண்டுகளை மேலோட்டமாக ஒட்டிப் பார்த்தபோது அது இடுப்பு பெல்ட்டுடன் கூடிய ஜக்கட்டின் உள்ளாடை போல் காணப்பட்டது.

குண்டுவெடிப்பு நடந்த இடத்திலேயே கொல்லப்பட்ட 15 பேரின் சடலச் சிதைவுகள் சேகரிக்கப்பட்டன. முழு முண்டமும் வலதுபுறக் கையும் சிதைந்த நிலையில், ஒரு பெண்ணின் சடலம் காணப்பட்டது. அந்தச் சிதைந்த சடலத்தில் குண்டுகள் துளைத்த காயங்களும் எரி காயங்களும் காணப்பட்டன. அந்தப் பெண்ணின் சடலச் சிதைவுகளோடு பச்சை மற்றும் ஒரேஞ் நிறத்திலான துணித் துண்டுகளும் ஒட்டிக் கொண்டிருக்கக் காணப்பட்டன. தமிழ்நாட்டு சட்ட வைத்திய ஆய்வு கூட விஞ்ஞானிகளுடன் இணைந்து, புதுடில்லியிலிருந்து வருகை தந்திருந்த மத்திய சட்ட வைத்திய விஞ்ஞான ஆய்வு கூட விஞ்ஞானிகளும் இணைந்தே தடயங்களைச் சேகரித்துக் கொண்டனர்.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான சிறு உலோகக் குண்டுகள், 9 வோல்ட் சக்தி வாய்ந்த பற்றரியின் பகுதிகள், குண்டு வெடிக்கப் பயன்படுத்தப்படும் வெள்ளை நிறத்திலான வயர்கள், இரு சுவிட்சுகள் ஆகியவையும் கண்டுபிடிக்கப்பட்டன. இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் உடல்களிலிருந்து பல நூற்றுக் கணக்கான உலோகத்திலான சிறு குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. சம்பவ இடத்தில் பெறப்பட்ட சிதைவுகள், உலோகக் குண்டுகள் ஆகியவற்றின் மீதான பரிசோதனையும், சடலங்களின் மீது சட்ட வைத்திய விஞ்ஞானிகள் நடத்திய பரிசோதனையும் ஆர்.டி.எக்ஸ். ரக வெடிமருந்து பயன்படுத்தப்பட்டமையை ஊர்ஜிதம் செய்தது.

இந்தக் கண்டு பிடிப்புகளை வைத்து வெடிமருந்து நிபுணர்கள் ஆரம்பப் பரிசோதனைகளை நடத்தி, அரைக் கிலோ எடை உள்ள ஆர்.டி.எக்ஸ். என்ற வெடி மருந்துக் கட்டி பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்தனர். இந்த வெடிமருந்து இடுப்புப் பட்டிக்குள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் கூறினர். அத்துடன் 0.2 மில்லி மீற்றர் விட்டமுடைய சுமார் 10 ஆயிரம் உலோகக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் அவை கூட, அரைக் கிலோ எடையைக் கொண்டதாக இருந்திருக்கலாம் என்றும் தெரிவித்தனர். இந்தக் குண்டுகள் ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்துக் கட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் நிபுணர்கள் தெரிவித்தனர். வெடிமருந்து கட்டியோடு அதனை வெடிக்க வைக்கும் மின் கருவி இணைக்கப்பட்டு 9 வோல்ட் சக்தி வாய்ந்த பற்றரியுடன், இரு சுவிட்சுகளைக் கொண்டு இணைக்கப்பட்டிருந்தது. ஒரு சுவிச், தற்செயலாக ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து வெடிப்பதைத் தடுப்பதற்காக இணைக்கப்பட்டிருந்தது. அழுத்தப்பட்டதும் வெடிக்கக் கூடிய மற்றைய சுவிச்சும் பொருத்தப்பட்டிருந்தது.

(தொடர்ந்து வடியும்....)




**"என்னய்யா இது.** விசயம் இவ்வளவு மோசமா இருக்கு" திகைப்படைந்து சோழிகளைப் பார்த்தான். ராசிப் பலகையில் வைத்திருந்த சோழிகள் ஒன்றுக்குப் பின் மற்றொன்றாக வரிசையாக ஊர்வலம் மாதிரி அணிதிரண்டது. பிறகு தேவஸ்தானத்தில் வைத்திருந்த சோழிகளோடு கலந்த, கொஞ்ச நேரத்திற்குள் அது ஒரு பாம்பு வடிவத்திற்கு வந்தது. பாஸ்கரன் முதன் முதலாக வைத்த சோழி பாம்பின் படமாக உயர்ந்து ஆடியது.

"கடவுளே....!" திகைத்த பாஸ்கரன் சட்டென்று பின்புறமாக நகர்ந்தான்.

விஷயம் அத்துடன் முடியவில்லை.

அதன் உருவம் மாறியது....

சோழிகள் இடம்மாறி ஒன்று சேர்ந்து பாம்பு வடிவமாக மாறியது. கண்மூடித் திறப்பதற்குள் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

மந்திர தந்திரங்களில் தேர்ந்தவனான பாஸ்கரனுக்கு நேராகப் படம் உயர்த்தியபடி சீறிக் கொண்டு அவனைக் கொத்தவும் அது சாய்ந்தது.

திடுக்கிட்ட பாஸ்கரன் பின் புறமாக நகர்ந்து சட்டென்று ஒதுங்கினான்.

"என்ன பாஸ்கரா, என்ன ஆச்சு?" சைமன் பாஸ்கரனிடம் கேட்டான்.

பாஸ்கரனைத் தவிர வேறு யாருக்கும் அந்தக் காட்சி கண்ணுக்குப் புலப்படவில்லை. ராசிப் பலகையின் மீது வைக்கப்பட்டிருந்த சோழிகள் எல்லாம் வைத்தபடியே இருந்தன.

"பெரிசா ஒண்ணுமில்லை. யாரோ எதிரிகள் விளையாட ஆரம்பிச்சிருக்காங்க. என்னோட சந்தேகம் என்னன்னா, நீலகண்டனோட ஆவிதான் இதையெல்லாம் செய்யறதோ அப்படிங்கறதுதான்"

அப்பொழுதுதான் பாஸ்கரனுக்கு சட்டென்று ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் மந்திரப் பிரயோகங்களில் தேர்ந்தவர்கள். ஆனால், அந்த வீட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டவர்கள் அப்படியல்ல.

"உனக்கு அப்படியொரு சந்தேகம் இருந்தா, நீலகண்டனை ஆணியடிச்சு நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்து." இதற்கு முன்பு இதே போல் ஏற்கனவே நடந்த சம்பவங்களின் அனுபவ பின்னணியில் சைமன் ஆலோசனை கூறினான்.

**புஷ்பாநாத்**
**தமிழில்**
**சிவன்**

"அப்படீன்னா திரும்பவும் ஹோமம் நடத்தணும். ஆள் அகப்பட்ட பிறகு இதே காம்பவுண்டில இருக்கிற எட்டி மரத்தில ஆணி அடிச்சுக் கட்டிட வேண்டியதுதான்" பாஸ்கரன் திட்டத்தைச் சொன்னான்.

எட்வர்டு, உடனே பக்கத்திலிருந்த ராமசாமியிடம் ஹோமத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னான். ஹோமம் எட்வர்டுக்குப் பழக்கப்பட்டதாகையால், அதைப் பற்றி அவனுக்கு எல்லாம் தெரியும்.

எட்வர்டைப் பொறுத்தவரை பெயர் மட்டும்தான் அவன் ஒரு கிறிஸ்தவன் என்று அடையாளம் காட்டியது. அவனைப் பொறுத்தவரை அவனுக்கு மதத்திலெல்லாம் பெரிய நம்பிக்கை இல்லை. ஏராளமா குடிக்கணும். அதுக்கு வேண்டிய பணத்தை சைமன் என்றைக்கும் மறுத்ததில்லை.

யாரையாவது தீர்த்துக் கட்ட வேண்டுமென்றால் எட்வர்டிடம் சொன்னால் போதும். அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் நிச்சயம் விஷயம் முடிந்துவிடும். அனந்தராமனின் கணக்கைத் தீர்த்துவிட்டால் நல்லது என்று சைமன் நினைத்தான். ஆனால், அனந்தராமன் அந்த வீட்டில் வசிப்பது அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எல்லோருக்கும் தெரியும். அதனால் இப்பொழுது அப்படி ஏதாவது நடந்தால் எல்லோருக்கும் நம்மீது சந்தேகம் வருவது சகஜம். பொறுத்திருக்கலாம்.

அந்த பங்களாவின் நடுவிலிருந்த திறந்த வெளித்தாழ்வாரத்திலேயே ஹோம குண்டம் வைத்துப் பாஸ்கரன் ஹோமத்தைத் தொடங்கினான். நீலகண்டனை வரவழைப்பதுதான் இந்த ஹோமத்தின் முக்கிய நோக்கம்.

"ஓம் இரத்த சாமுண்டீஸ்வரி நம..." பாஸ்கரன் மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினான்.



நீலகண்டன் இங்கு வந்து சேரவேண்டும். இல்லாவிட்டால் ஹோமத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற என்னுடைய வலது கையை வெட்டி ஹோம குண்டத்தில் போட்டு விடுவேன். சொல்லியபடியே பாஸ்கரன் வலது கையால் நீண்டவாளை எடுத்தான்.

காரணம் இது ஒரு சுயமரியாதைப் பிரச்சினை.

இதுவரை இதுமாதிரி எங்கும் தடை ஏற்பட்டதில்லை. இலட்சக்கணக்கான ரூபாய் இந்த வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கிறது. ஒவ்வொரு தூணும், மரச்சட்டமும் தேக்கினால் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் சித்திர வேலைப்பாடு, கடவுள்களின் உருவம், அப்ஸரஸுகள், தேவதைகள்....

ஒவ்வொன்றையும் பிரித்து விற்றால் தலா பத்தாயிரத்திற்குக் குறையாமல் விலை போகும்.

பாஸ்கரனின் கழுத்திலிருந்த தங்கத்தில் பதிக்கப்பட்ட ருத்ராட்சங்கள், ஹோம வெளிச்சத்தில் நாகப்பாம்பு மாதிரி நெளிந்தது.

"ஓம் இரத்த சாமுண்டீஸ்வரி நம..." சொல்லியபடியே வாளை மேற்புறமாக ஓங்கித் தனது கையை நோக்கி இறக்கினான்.

சட்டென்று ஹோமகுண்டத்தின் நெருப்பிலிருந்து தீ ஜுவாலையொன்று வளைத்து அந்த வாள் முனையைத் தடுத்து நிறுத்திப் பிடித்தது.

சிவந்த பட்டுத் துணியில் சுற்றி குடத்தில் சொருகப் பட்டிருந்த கமுக மரத்தின் பூக்குலை விறைத்தது.


(பயங்கரம் தொடரும்)

மனதுக்கு நிம்மதி

# ஆபீஸிலே பழியாகக் கிடக்கிறீர்களா?


"**நான்** கடினமான உழைப்பாளி. தினமும் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்கிறேன். காலையில் இருந்து இரவு தூங்கப்போகும்வரை சதாசர்வ காலமும் ஆபீஸ் பற்றித்தான் என் நினைப்பு. என் அளவுக்கு சக ஊழியர்கள் யாரும் வேலை செய்வதில்லை. சாயந்திரம் எப்போதடா ஐந்து மணி அடிக்கும் என்று காத்திருந்து சிட்டாகப் பறந்துவிடுகிறார்கள்" என்று என்னிடம் சமீபத்தில் ஒருவர் குறைபட்டுக்கொண்டார்.

இப்படிப் பேசும் பலரை நீங்களும் பார்த்திருக்கக்கூடும். இன்.:.போஸிஸ் நாராயணமூர்த்தி ஒரு கூட்டத்தில் சொன்ன கருத்துக்களை இங்கே



உங்களிடம் பகிர்ந்து கொள் ஆசைப்படுகிறேன்.

கடுமையான வேலை செய்வது என்பதோ, ஒரு நாளைக்கு பன்னிரண்டு மணிநேரம் வேலை



செய்வது என்பதோ எப்போதாவது சில சமயம் தவிர்க்க முடியாமல் நடக்கலாம். ஆபீஸில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு ப்ராஜெக்ட்டை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். உங்களுக்குப் பழக்கமில்லாத ஒரு புதிய ஏரியாவில் உங்களை மாற்றியிருக்கிறார்கள். இப்படிச் சில சந்தர்ப்பங்களில் சிலர் சிலநாள்தான் அதிகப்படியான மணிநேரம் வேலை செய்வார்கள்.

'நாளைக்குள் இந்த டெண்டரை அனுப்பியாக வேண்டும்.' என்பது மாதிரியான சில நெருக்கடியான நேரங்களில் சிலர் இரவு முழுவதும் ஆபீஸில் தங்கி வேலை பார்ப்பார்கள். இதெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவை.

ஆனால், பொதுவாகப் பார்த்தால் எட்டு அல்லது ஒன்பது மணி நேரத்துக்கு மேல் ஆபீஸில் வேலை செய்வது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே அல்ல. அது தேவையும் இல்லை. இந்த மாதிரி வேலையை இழுத்துப் போட்டுக் கொள்ளும் பேர்வழிகள்தான் 'மற்றவர்கள் சரியில்லை' என்று புலம்புகிறார்கள். ஆபீஸில் நிலவும் சுமுகமான 'மூடை'க் கெடுக்கிறார்கள்.

இதுபோன்ற 'கடின(!) உழைப்பாளி' களுக்கு நாராயணமூர்த்தி சொல்லும் யோசனை இதுதான்.

1. காலையில் எழுந்ததும் சுத்தமாகக் குளித்துவிட்டு வயிறாறச் சாப்பிடுங்கள்.

2. ஆபீஸுக்குச் சென்று வழக்கமான ஈடுபாட்டுடன் எட்டு மணிநேரம் வேலை பாருங்கள்.

3. மாலையில் வீட்டுக்கு வந்து ஆபீஸ் நினைப்பு சிறிதுமின்றி குழந்தைகளுடன் ஜாலியாக விளையாடுங்கள். மனைவியிடம் அன்பாகப் பேசி மகிழுங்கள். சந்தோஷமாக டி.வி. பாருங்கள். காலாற வாக்கிங் போங்கள்.

4. இரவு நன்றாகத் தூங்குங்கள்.

வேலையே இல்லா விட்டாலுங்கூட பல பேர் ஆபீஸே கதி என்று கிடப்பதற்கு இன்னொரு காரணம் இருக்கிறது.

உங்கள் வீட்டுக்கு யாராவது விருந்தினர் வந்தால் அவர்கள் கிளம்பிப் போகும்வரை, என்னதான் தூக்கம் சொக்கிக் கொண்டு வந்தாலும் உங்கள் குழந்தைகள் தூங்காமல் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதற்குக் காரணம் என்ன? வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கும்போது முக்கியமான ஏதாவது நடந்து அது தனக்குத் தெரியாமல் போய் விடுமோ என்ற சந்தேகந்தான்!

ஆபீஸே பழியாக கிடப்பவர்களுக்கும் இதே போன்ற மனநிலைதான்! தான் இல்லாத சமயத்தில் ஆபீஸில் முக்கியமாக ஏதாவது நடந்து அதை நாம் மிஸ் பண்ணிவிடுவோமோ என்ற பயத்தில்தான் பலர் ஆபீஸிலேயே பழியாகக் கிடக்கிறார்கள்.

இது போன்றவர்களுக் கெல்லாம் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது இதுதான். உலகம் இருபத்திநாலு



மணிநேரமும் இயங்கிக்கொண்டுதான் இருக்கிறது. அதற்காக, 'அடடா... எனக்குத் தெரியாமல் ஏதாவது நடந்துவிடுமோ! என்ற அச்சத்தில் நீங்கள் ராத்திரியில் தூங்காமலே இருந்துவிடுவீர்களா, என்ன? அலுவலகமும் அது மாதிரித்தான். நீங்கள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அது பாட்டுக்கு இயங்கிக்கொண்டுதான் இருக்கும். அதற்காக நீங்கள் ஆபீஸிலேயே பழியாகக் கிடக்க முடியாது.

நீங்கள் எந்த ஆபீஸில் வேலை செய்பவர்களாக இருந்தாலும் சரி... நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள் என்பதை வைத்துத்தான் அங்கு உங்களுக்கு மரியாதையே தவிர, எத்தனை நேரம் அலுவலகத்துக்குள் இருந்தீர்கள் என்பதை வைத்து உங்களை யாரும் எடை போட மாட்டார்கள்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 210

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | 18 |
| | 20 | | 22 | 23 | |
| 25 | | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. புதல்வன் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
07.விவசாயம் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
11.அழகான மிருகமொன்று. (திரும்பியுள்ளது)
13. சத்துக்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
22.இரண்டு என்று பொருள். (திரும்பியுள்ளது)
28.கடிதம் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
31. மகாபாரதத்தின் முக்கிய பாத்திரமொன்று. (குழம்பியுள்ளது)
35.எல்லை அல்லது முடிவிடம். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. பரம்பரை அல்லது பழமை என்று கூறலாம். (குழம்பியுள்ளது)
2.மரக்கறி பயிரொன்று. (குழம்பியுள்ளது)
3.இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக முதலாவது பேச்சுவார்த்தை நடைபெற்ற இடம்.
5.மீராஜஸ்மின் நடித்த திரைப்படமொன்று.
12.உலகத்தோற்றம் பொய்யெனக் கூறும் சொல்.
16.நஞ்சு. (குழம்பியுள்ளது)
23.தமிழ்நாட்டிலுள்ள இடமொன்று. (குழம்பியுள்ளது)
25.இராமாயணத்தின் பாத்திரமொன்று.
30.திண்மப் பொருளொன்று . (தலைகீழ்)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 13.03.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-210
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோர் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.208க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ப.சிவசூரியர், 17/2, பிரதான வீதி, சங்கானை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எம். சி. கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை - 05
2. செல்வன் முகமது சப்றாஸ், 547, பெண்கள் பாடசாலை வீதி, ஏறாவூர் - 03
3. திருமதி. சந்திரா ரவீந்திரன், 'திருவேரகம்' 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.
4. திருமதி. T.பரமேஸ்வரன், 5E ரசிகா ரவர் 32, மாதங்ஹாவத்தை லேன், கொழும்பு -6
5. சி. மிதுஷான், சர்மிலன் வீதி, பாண்டிருப்பு - 02 கல்முனை.
6. திருமதி. M.சுந்தரேசன், 49, பார்க் றோட் ஹட்டன்.
7. D. S. இந்திரகலா, 24ஆம் கட்டை லுணுகலை.
8. R.நிரஞ்சலா, 55A, சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா.
9. நா.டிலாஜினி, 209, மார்க்கண்டு வீதி, பாண்டிருப்பு -01 கல்முனை.
10. திருமதி. பைசல் அமீனா ஜலீல், 61/1A/1, மகாபுத்தகமுவ முல்லேரியாவ.

## குறுக்கெழுத்துப் போட்டி 208- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா 1 | லை 2 | தீ 3 | வு 4 | | த 6 |
| ரு 7 | ரு 8 | | சா 10 | த 11 | ம் 12 |
| தி 13 | | தா 15 | | க 17 | ளி 18 |
| | | ம் 21 | வ 22 | ன 23 | யு 24 |
| | க 26 | க 27 | ட 28 | ம் 29 | |
| வா 31 | டை 32 | | ம் 34 | | மா 36 |

# வர்ணங்கள் கூறும் வாழ்க்கை இரகசியங்கள்!

**உகந்த** நிறமென்பது அவரவர் மனதை பொறுத்தது அல்லவா? குயிலுக்கு நிறமுண்டு, அதன் குரலுக்கு நிறமுண்டா எனக் கவிஞர்கள் கேட்பார்கள். மனிதரில் இத்தனை நிறங்களா? என்று எழுத்தாளர்கள் கேட்பார்கள். மனிதர்க்கு மட்டும் மனசுக்கும் நிறமுண்டாம். அந்த நிறத்திற்கும் குணம் உள்ளது.

தனக்கு வேண்டிய உணவு, உடை, வீடு எல்லாவற்றிலும் தான் விரும்பும் நிறங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ள மனிதனை அவன் விரும்பும் வர்ணங்களை வைத்து அவன் குணத்தைக் கூறி விடலாம்.

**பச்சை நிறம் :–** இதை விரும்புபவர்கள் அறிவாளிகள்; பல விஷயங்கள் தெரிந்தவர்கள்; எதிலும் நிலையான கொள்கை உடையவர்களாக இருப்பார்கள். மிகுந்த கருணையுள்ள இவர்கள், மாறுதலையும் எதிர்பாராத விஷயங்களையும் விரும்ப மாட்டார்கள்.

**வயலட் :–** இந்த நிறத்தை விரும்புகிறவர்கள், தீர்க்க தரிசனம் மற்றும் உள்ளுணர்வு மிக்கவர். ஆன்மீகத்தில் ஆர்வமுடையவர். அமானுஷ்ய சக்தியும் மனோவசீகரமும் காணப்படும். எல்லா உயிர்களிடத்திலும் அன்பு கொண்டிருப்பவர்.

**சிவப்பு :–** சுறுசுறுப்பானவர்கள்; பரந்த மனப்பான்மை கொண்டவர். நல்ல பண்புகள் கொண்டவர்கள். தனக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதை எப்பவும் அடைந்து வெற்றியுடன் வாழ்பவர்கள்.

**மஞ்சள் :–** இந்த நிறம் விரும்புகிறவர்கள் எப்போதும் பிரகாசமாகவும், மற்றவர்களுடன் கலந்து பழகும் தன்மையுடனும் விளங்குவார்கள். இவரிடமிருந்து மற்றவர்களுக்கு அன்பும், அரவணைப்பும் எப்போதும் கிடைக்கும்.



இவர் வாயாடியாக இருந்தாலும் இவருடைய பேச்சு எல்லோராலும் விரும்பி வரவேற்கப்படும். வாழ்க்கையின் எல்லா அம்சத்திலும் மிகுந்த ரசனை கொண்டிருப்பார்கள்.

**நீலம் :–** மிகுந்த கலை நுணுக்கம் மற்றும் ஓவியத்திறன் பெற்றிருப்பார். கற்பனை சக்தி நிறைந்து தனது எண்ணங்களை வெளிப்படையாகத் தெரிவிக்கும் மனது கொண்டவர். தான் காணும் கனவுகளுக்கு உயிர் கொடுத்து அதனை சாதிக்கும் திறன் பெற்றவர்.

**பிரவுண் :–** இந்த நிறம் விரும்புகிறவர் வாழ்க்கையில் நிலையான பாதுகாப்பான சூழ்நிலையைத் தனக்காக உருவாக்குவதுடன் தனது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் மிகுந்த நன்றியும் விசுவாசமும் காட்டுவார். தன் மீது தனது துணைவி அல்லது துணைகள் காட்டும் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் மிகவும் ஏங்குவார். நினைத்ததை நினைத்தபடி பேசி விடுவார்.

**சாம்பல் :–** இந்த நிறம் பிடித்தவர்கள் சுயமரியாதை சிந்தனை உள்ளவர்கள். தற்சார்பு மிக்கவர். தன்னைத் தானே குற்றம் சாட்டிக்கொள்ளவும் தயங்கமாட்டார். எந்த ஒரு குழுவிலும் முழுமையாக இடம்பெறவோ ஈடுபடவோ மாட்டார்கள். மற்றவர்களுடன் உறவையோ நட்பையோ ஏற்படுத்திக் கொள்ள மிகவும் பயப்படுவார்கள்.

**கறுப்பு :–** இந்த நிறம் விரும்புகிறவர்களிடம் பிடிவாதம் நிறைந்திருக்கும். ஆனால் மனதில் சூட்சுமமும் எதிலும் ஒரு கவர்ச்சியும் இருக்கும். மனமுதிர்ச்சி, வாழ்வினை நன்கு புரிந்து கொள்ளும் தன்மை, அதே நேரத்தில் மற்றவர்களை ஊக்குவித்து அவர்களை சரியான பாதையில் செலுத்தி அவர்கள் ஆற்றலை வெளிப்பட உதவும் பண்பு கொண்டவர்கள்.

# கரைசேரா ஓடங்கள்

**அமெரிக்காவில்** இருந்து புறப்பட்ட பயணிகள் விமானம், சரியாக அதிகாலை ஐந்து மணிக்கு இலங்கையில் தரை இறங்கியது. பல்வேறு எண்ணங்களுடன் பல்வேறு மனிதர்கள் தரை இறங்கினார்கள். அவர்களுள் ஒருவனாக சந்துருவும் தரை இறங்கினான். 15 வருடங்கள் கழித்து தாய் நாட்டு மண்ணை இன்று தான் மிதிக்கின்றான். அவன் பாதங்கள் மண்ணில் பட்ட போது சொல்லொண்ணா கோடி மின்சாரம் அவன் உடலில் பாய்ந்தது, அவன் நடை தள்ளாடியது, அன் விழிகளோரம் கண்ணீர்த் துளிகள் உருண்டோடியது. அவன் இதயத்தின் குளிர்ச்சி தாய் மண்ணை முத்தமிட வேண்டும் என்று குறுகுறுத்தது. ஆனாலும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான். தன்னுள் குதியாட்டம் போடும் உணர்வுகளை அருகில் உள்ளவர்கள் அறியா வண்ணம் ஒரு மர்ம முகமூடியை அணிந்து கொண்டான்.

15 வருடங்களுக்கு முன்பு 13 வயது சிறுவனாக அம்மா, அப்பா, தங்கை நிஷா, உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் பிரிகின்றேனே எதற்காக? புரிந்தது பாதி புரியாதது மீதியாக எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாத வயதில் கண்ணீருடன் அமெரிக்கா சென்றவன், இன்று 28 வயது வாலிபனாக அதுவும் சிறந்த மருத்துவராக தாய்நாடு திரும்பியுள்ளான். ஆனாலும் அவன் தனது சொந்தக் கிராமத்தை இன்னும் அடையவில்லை. அவன் பதவிக்குக் கிடைத்த பாராட்டு விழாக்களுக்காக கொழும்பில் இரு நாட்கள் தங்க வேண்டிய கட்டாயம். ஆனால் அவன் மனமோ அவன் பிறந்த கிராமத்தையே சுற்றி வட்டமிட்டது.

அபிவிருத்தியடையாத ஒரு கிராமம், அப்பாவித்தனமான மக்கள், மருத்துவம் பெறக்கூட பல மைல்கள் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம், யுத்தத்தினால் ஏற்பட்ட சீரழிவுகளின் அடையாளச் சின்னம். இன்றும் கூட அந்தக் கிராமம் அப்படியே தான் இருந்தது. இடை இடையே சின்னச் சின்னதாய் சில மாறுதல்கள் அவ்வளவு தான். ஆனால், அந்த கிராமத்தில் பிறந்த சந்துரு இன்று ஒரு பிரபல புற்றுநோய் அறுவைச் சிகிச்சை மருத்துவர் மட்டுமின்றி, சிறந்த உளவையியல் மருத்துவரும் கூட. அதிலும் அமெரிக்காவில் படித்து பட்டம் பெற்ற மருத்துவர். சந்துரு இந்நிலையை அடைவதற்கு பட்ட கஷ்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல சொல்லிலடங்காதவை.

சந்துருவின் தாயார் இந்திரா 'போன்' பண்ணும் போது அடிக்கடி சொல்வது இதுதான், இங்க பாரப்பா சந்துரு...நீ வந்ததும் இந்த ஊர்ல ஒரு ஆஸ்பத்திரி கட்டி மக்கள் எல்லாருக்கும் சேவை செய்யோணும், அதப் பார்த்து நானும் உன்ர அப்பாவும் பூரிச்சுப் போகணும். சந்துருவின் இலட்சியமும் அதுதான். இது நாள் வரை நான் உழைத்தவற்றை வைத்து ஒரு மருத்துவமனை கட்டவேண்டும், பணக்காரர்களிடம் பணம் வேண்டுவதில் தப்பில்லை. ஆனால் ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்க வேண்டும். ஏழைகளை பொருத்தவரை புற்றுநோய் என்பது மாற்றமுடியாத நோய்.' ஆனால் பணக்காரனுக்கு அப்படியல்ல. இந்நிலை மாறவேண்டும். என்னைத்தேடி பல இடங்களில் இருந்து மக்கள் வருவார்கள். அதனால் என் ஊர் முன்னேற்றமடையும் அத்தோடு பெருமையடையும். மக்களிடையில் நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வருங்காலத்தில் நோயற்ற ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கப் பாடுபட வேண்டும். என்னைப் போல் கஷ்டப்பட்ட குடும்பத்திலிருந்து பல்வேறு மருத்துவர்கள் உருவாக நான் என்னாலான உதவிகளை செய்யோணும். என்னால் என் சமூகம் உலகறியும் அளவிற்கு உயர வேண்டும்." இப்படியாக பல்வேறு சமயங்களில் தன்னுள் எண்ணி மகிழ்ந்து கொள்வான். அவனது இந்தக் கனவு நிறைவேறும் காலம் வெகு தொலைவில் இல்லை. இன்னும் சில நாட்களில் அவை நிஜமாகும். அதற்கான சந்தர்ப்பமும் அமைந்து விட்டது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு...தனது ஊருக்குப் போகும் பேருந்தில் அமர்ந்து பயணித்தபடி சிந்திக்கலானான் சந்துரு. வீட்டில் யாருக்கும் தகவலேதும் சொல்லாமல் இப்படி தனிய வந்தது



எஸ்.சத்தியவாணி, மன்னார்.

தப்போ...? வீட்டில் உள்ளவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க வேண்டும் என்கின்ற எனது ஆசை தவறானதோ...? அவன் மனம் ஏனோ பதறியது. அப்பா பேச்சு வாக்கில் சொல்லியிருக்கிறார், இலங்கை வந்தால் தனி வாகனம் பிடித்து வருவதைக் காட்டிலும், பொதுவான 'வஸ்' பிடித்து மக்களோடு மக்களாய் வருவதில் அவ்வளவாக ஆபத்தில்லை என்று. அப்படித்தானே போகின்றேன். இதில் பயப்பட என்ன இருக்கின்றது? என தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான். என்னதான் சமாதானம் அடைந்ததாய் வெளிமனம் நடித்தாலும் ஆழ்மனம் எதுவோ அசம்பாவிதம் நடக்கப்போவதாய் நொடிக்கொரு தரம் அறிவித்துக் கொண்டிருந்தது. சந்துருவுக்கு ஏனோ வேர்த்துக் கொட்டியது. அவனது ஆழ் மனதின் அலறல் கேட்காமல் இருக்க கையடக்கத் தொலைபேசியை எடுத்து தனக்குப் பிடித்தமான எவ்.எம்.மில் பாடல் கேட்க ஆரம்பித்தான். பேரூந்தின் ஜன்னல் ஓரத் தென்றல் இதமாய் அவனை வருடிச் செல்ல அதற்கேற்றவாறு ஒரு காதல் பாட்டும் ஒலிக்க அவன் வாலிப வயது விரிந்து கட்டிக் கொண்டு அவன் அன்புக் காதலி வித்யாவிடம் சென்றது.

வித்யா, சந்துருவின் பால்ய சினேகிதி. சந்துரு வெளிநாடு செல்வதற்காக அவளிடம் விடைபெற்ற போது வேப்பமரத்தைக் கட்டிக் கொண்டு விசும்பி விசும்பி அழுததும், பின் அவன் கன்னத்தை கண்ணீராலும், எச்சிலாலும் ஈரப்படுத்தி விடை தந்ததும் அவனால் ஒரு போதும் மறக்க முடிந்ததில்லை. அவளின் சின்ன வயது நட்பு நாளடைவில் அவனுள் காதலாகப் பரிணமித்தது. அவன் தன் விருப்பத்தை அவளிடம் கூறியபோது முதலில் மறுத்தாலும் பின்பு ஏற்றுக் கொண்டாள். கடந்த ஐந்து ஆண்டுகளாக நண்பர்கள் என்ற பெயர் திரிந்து காதலர்களாகி விட்டனர். "வித்யா...இப்போது என்ன செய்வாள்...? என்னைக் கண்டால் வெட்கம் தடவிய புன்னகையுடன் வேப்ப மரத்தைக் கட்டிக் கொள்வாளா...? இல்ல... ஹாய் சொல்லி என்னைக் கட்டிக் கொள்வாளா?" என்னும் போதே அவன் உடல் சிலிர்த்துக் கொண்டது. அவள் பேசும் போதெல்லாம் எப்போது வருவீங்க சந்துரு? என்ற கேள்வி தான் முதலில் வரும். இப்போது அப்படிக் கேட்டால் 'ஹாய்...செல்லம்' என்று முன்னால் போய் நிற்க வேணும். அவள் விழிகள் எனைக்கண்டு விரிவதைப் பார்க்க வேணும். அவளின் சந்தோஷ வெப்பக் காற்றை சுவாசிக்க வேணும். அவளருகில் சென்று மிக நெருக்கமாய்...இதற்கு மேல் ஒரு காதலன் எப்படி கனவு காண்பான் என்பதை சொல்வது அநாகரீகம். 'காதல்' உண்மையில் ஒரு சுகமான அவஸ்தை. அவஸ்தை தான் ஆனால் அதை அனுபவிக்காவிடின் வாழ்க்கை விவஸ்தையின்றிப் போய்விடும். காதலின் பிடியில் சிக்காதவர் யாருமில்லை என்னும் அதில் இந்த இளம் 'டொக்டர்' சந்துரு சிக்கியது ஒன்றும் அதிசயமில்லை.

அப்பாவின் அருகாமை, அம்மாவின் அரவணைப்பு, தங்கையின் குறும்பு, காதலியின் தீண்டல், ஊர் மக்களின் உபசாரம், இவற்றிற்கும் மேலாக தாய் மண்ணில் கிடைக்கும் நிம்மதி இனி அத்தனைக்கும் சொந்தக்காரன் இந்தச் சந்துரு. இத்தனை சுகங்களுக்கும் அவனே அதிபதி.

"ஊருக்குப் போனதும் முதல் காரியமாய் என் சுட்டித் தங்கை நிஷாவுக்கு கல்யாணம் செய்து வைக்க வேணும். கொஞ்சக் காலம் வித்தியை லவ் பண்ணிட்டு, அதுக்குப் பிறகு கல்யாணம் செய்து அப்புறம் என் பிள்ளைகளையும், தங்கச்சி பிள்ளைகளையும் நன்றாகப் படிக்க வைக்க வேணும். என்ர சமூகத்தை படித்த, ஆரோக்கியமான சமூகமாய் மாற்றியமைக்க வேணும். அவன் மனதிற்குள் எதிர்காலக் கனவுகள் முண்டியடித்து இன்பம் கொடுத்தது. வித்யா சாயலில் ஒரு சிறுவனும், சந்துரு சாயலில் ஒரு சிறுமியும் அவன் வீட்டு முற்றத்தில் ஓடி விளையாடுவது போன்ற ஒரு காட்சி அவன் கண் முன் கற்பனையில் தோன்றியது. அவன் உதடுகளில் சின்னதாய் ஒரு புன்னகை அவனை அறியாமலே வெளிவந்தது.

"என்ன தம்பி பகல் கனவா...?" எனக் கேட்டு சந்துருவின் கற்பனைக்கு முற்றுப் புள்ளி வைத்தார் பேருந்தில் அவன் அருகில் இருந்த பெரியவர். தம்பி கொழும்பில இருந்து சொந்த ஊருக்குப் போறீங்க போல. மீண்டும் அவரே கேட்டார்.

ஓ...என்றான் புன்னகையுடன். ஊருக்குப் போய் பல மாசமாச்சு போல இருக்கு. ஏதோ தான் பெரிய இரகசியத்தைக் கண்டு பிடித்தவர் போல் பெருமித புன்னகையுடன் கேட்டார். பல மாதமல்ல...பல வருடங்களாச்சு. பதினைந்து வருசம்...என்று கூறி பெரியவரைப் பார்த்தான். பெரியவர் முகத்தில் ஆச்சரியம் அச்சடித்தாற்போல் வெளிப்பட்டது. பதினைந்து வருசமா...தம்பி என்ன சொல்லுரியல் என்னால் நம்ப முடியல... என்ற பெயரிவருக்கு தன்னைப் பற்றி பேசி காலமோட்டிய சந்துருவுக்கு அந்த பெரியவரின் தாய் மொழி விசாரிப்பு சொல்ல முடியாத சுகத்தைக் கொடுத்தது. தம்பி...இத்தனை வருடம் கழித்து வந்த நீங்க, இப்படித் தனிமையில் பயணம் செய்வது அவ்வளவு நல்லதல்ல. உயிர்களுக்கு மதிப்பில்லாமல் போன இந்தக் கால கட்டத்தில் பொது வாகனத்தில் போனால் என்ன...? தனி வாகனம் பிடித்துப் போனாலென்ன? சந்துரு அமைதியானான். அவன் மனதில் அலையடித்தது. என்ன தம்பி மௌனமாயிட்டியல்...பயப்படாதீங்க எதுவும் நடக்காது...நான் வேற ஒரு விவஸ்தை கெட்டவன். இத்தனை வருடங்கள் கழித்து வந்திருக்கும் உங்களை சந்தோசப் படுத்தாமல் இதுகளைச் சொல்லி சங்கடப்படுத்தி விட்டேன்...என்று கூறி வருந்தியவரிடம் எதையோ கூற வாயெடுத்த சந்துரு, பேசுவதற்கு முன் திடீரென அவன் பயணித்த பேரூந்துக்குள் ஏதோ சல சலப்பு. என்ன ஏதுவென்று சந்துரு புரிந்து கொள்ளும் முன் அவன் பயணித்த அந்தப் பேருந்து சுக்கு நூறாய் வெடித்துச் சிதறியது.

வெளிநாட்டில் பல வைத்தியசாலைகள் சந்துருவுக்காகக் காத்திருக்க, எதுவும் வேண்டாம் தாய் நாட்டுக்கு சேவை செய்யப்போகிறேன் என வந்த இளம் மருத்துவருக்கு தாய் நாடே எமன் ஆகியது இந்த நாட்டின் சாபக்கேடு.

தன் பேச்சால் ஒருவரை நோகடித்து விட்டோமே என மனம் வருந்திய அந்தப் பெரியவரும் பல உயிர்களை கொன்றாவது கொள்கையை நிலைநாட்டுவோம் என்ற யுத்தகாரர்களும் இந்த நாட்டின் மனிதம் தான்.

ஊரில் - ஒரு குடும்பத்தையே வெட்டி துண்டங்களாக்கிய கோரக் காட்சியை கண்ணுற்ற சந்துருவின் தங்கை நிஷா, கடந்த ஆறு மாதங்களாக பைத்தியமாய் அறைக்குள் சிறையுண்ட சோகக் கதையும், தன் செல்ல மகளின் நிலை கண்டு துடித்துப் போய் மதுவுக்கு அடிமையாய் ஈரல் கருகி புற்றுநோயின் இறுதி நிலையில் இருக்கும் அவன் தந்தை "நான் உயிர்கொடுத்த என் பிள்ளை எனக்குயிர் தரவேண்டும், அவன் வரும் வரை நான் காத்திருப்பேன்" எனப் பிடிவாதத்துடன் முறையான வைத்தியம் கூட எடுக்காமல் காத்திருக்கும் அவலக் கதையையும், தன் மகன் இவையெல்லாம் அறிந்து அந்நிய தேசத்தில் அணைப்பாறின்றித் தவிப்பானே என்பதற்காக உண்மை கூறாது ஊமையான தாயின் தியாகத்தையும் கடைசி வரை சந்துரு அறிந்திருக்கவேயில்லை. நடுக்கடலில் தத்தளிக்கும் தன் குடும்பத்தை மீட்க செல்லமகன் வருவான் என்கின்ற அந்த தாயின் எதிர்பார்ப்பு கடைசிவரை ஏமாற்றம் கலந்த ஏக்கங்களுடனேயே...

சித்தங் கலங்கி யுத்த சகதியில் அமிழ்ந்திருக்கும் நம் நாடு எப்போது அதிலிருந்து மீளுமோ அப்போது சந்துரு கனவு கண்ட அந்த நல்ல சமூகம் உருவாகும். அதுவரை யாவும் கனவுதான்.

*(யாவும் கற்பனை)*

# உண்மைக் காதல்

**கல்முனை** பஸ் நிலையத்துக்கு கரீம் காலை 8.30 மணிக்கே வந்துவிட்டான். அங்கு அவன் யாரையோ எதிர்பார்ப்பதுபோல அங்குமிங்கும் தன் கண்களை ஓடவிட்டான். அந்த பஸ் நிலையத்துக்கு வரும் பஸ்களில் எல்லாம் அவன் ஏறி இறங்கினான் ம்ஹூம் அலுத்துப் போய் அவன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

இந் நேரத்தில் அவனது காதோரத்தில் கரீம் என்றொரு குரல் கேட்டதும் திரும்பிப்பார்த்தான். தான் படிக்கும் கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்கும் அந்த மாணவிதான். அவன் இவ்வளவு நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய இல்லை அவனுக்கு சொந்தமாகப் போகின்ற காமிலாதான் அவள். என்ன காமிலா எவ்வளவு நேரமாக நான் உங்களை காத்துக் கொண்டிருந்தேன். குறித்த நேரத்துக்கு வந்திருக்கக்கூடாதா? அவள் அதற்கு இப்போதுதானே 9.00 மணி ஆகிறது. 10 மணிக்குத்தானே பஸ் புறப்படும் என்று அப்போது சொன்னீங்க. இல்ல காமிலா நாம் இருவரும் தனியாக கதைக்க வேண்டிய கதைகள். எவ்வளவோ இருக்கிறது என்று கூறிவிட்டு கரீம் மௌனமானான்.

என்ன கரீம் திடீரென மௌனமாகிவிட்டீர்கள். இல்ல காமிலா உங்களை எப்படி பிரிந்திருக்கப் போகிறேன் என்பதைப் பற்றி சற்றுச் சிந்தித்தேன் அவ்வளவுதான். பிரிந்திருக்க வேண்டிய நேரத்தில் பிரிந்துதானே இருக்க வேண்டும் கரீம். ஓ! ஒன்றை மறந்து போயிட்டேன் என்றவாறு தனது ஹேண்ட் பேக்கில் கையை விட்டு அதனுள்ளிருந்த பேனாவை எடுத்து கரீமின் சேர்ட்பொக்கெட்டில் வைத்தாள் காமிலா.

இது ஹீரோ பேனா. நம்ம இருவரிலும் நீங்கள்தான் ஹீரோ அதை உங்களுக்கு ஞாபக மூட்டத்தான் இந்த ஹீரோ பேனா பரிசு. சரியாகச் சொன்னீங்க காமிலா. இதயம் இருக்கும் இடது பக்கத்திலேயே பொக்கெட் இருக்கிறது. இதனுள் உங்கள் அன்புப் பரிசு ஹீரோ பேனா எனது இதயத்துக்குள்ளே நீங்கள், அதனை ஆமோதிக்கும் பாணியில் காமிலாவும் சிரித்துக் கொண்டாள்.

அப்போது இன்னாங்க நான் உங்களுக்கு கொண்டுவந்த பரிசு என்றவாறு ஒரு சொக்லேட்டை கரீம் காமிலாவிடம் நீட்டினான். காமிலாவும் அதனை வாங்கி அதில் ஒரு துண்டை உடைத்து கரீமிடம் கொடுத்தாள். அவன் ம்ஹூம் என தலையையாட்டினான். ஏன் வேண்டாமா? அதற்கு அவன் சைகை மூலம் சொக்லேட் துண்டை தனது வாய்க்குள் வைத்துவிடும்படி கூறினான். காமிலா வெக்கத்தோடு இவ்வளவு ஆட்களுக்குள் என்றாள். பரவாயில்லை வையுங்களேன் என்றான் கரீம். தனது கையில் இருந்த சொக்லேட் துண்டை அவன் வாய்க்குள் திணித்தாள். அவன் சொக்லேட் துண்டுடன் சேர்த்து அவளின் கைவிரலையும் கடித்து விட்டான். 'ஆ' என்று அலற கரீம் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான் பகல் 12 மணியாகிவிட்டிருந்தது. இருவரும் இப்போது பஸ்ஸில் ஏறி அருகருகே ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர். அவர்களுக்கு அருகில் எவருமே இல்லாததால்



- எம்.சி.கலீல், கல்முனை - 05.

இருவரும் என்னவென்னமெல்லாம் கதைத்துக் கொண்டனர். தங்களை மறந்த நிலையில் அவர்கள் கைகளும் வெட்கப்படும்படி அசைந்து கொண்டிருந்தன. இந் நேரத்தில் யாரோ ஒருவர் பஸ்ஸைவிட்டு இறங்குவதற்காக மணியை அடித்ததும் இருவரும் சுய நினைவுக்கு வந்தனர்.

கரீமும் காமிலாவும் கல்லூரி விடுமுறை நாட்களில் தத்தமது சொந்த ஊருக்கு சென்று வருவது வழக்கம். ஆனால் இப்போதெல்லாம் இந்த விடுமுறை நாட்கள் ஏன்தான் வருகிறதோ என்றொரு ஏக்கம் இருவருக்கும். காரணம் விடுமுறை தினங்களில் ஒருவரை ஒருவர் பிரிந்திருக்க முடியாத நிலை அதனால்தான். அப்படி ஒரு ஏக்கம். இப்படி இருந்த கரீமும், காமிலாவும் பிரியும் காலமும் நெருங்கிவிட்டது. அவர்கள் இருவரும் உயர்தர பரீட்சையும் எழுதிவிட்டார்கள். இப்போது பரீட்சை முடிவு வெளிவந்துவிட்டது. என்ன செய்வது அவரவர் சொந்த ஊருக்குப் போக வேண்டுமே? இருவரையும் பிரிவுத் துயர் வாட்டியது. பிரிந்து சென்றார்கள்.

அதன் பிறகு காமிலாவோடு கதைப்பதற்கு அவளுடைய கையடக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் அவனால் முடியவில்லை. இருந்தும் இருவரும் அஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு வந்தனர். இந்த வேளையில்தான் கரீமுக்கு அரச உத்தியோகம் ஒன்று கிடைத்தது. இந்த மகிழ்ச்சியான செய்தியை காதலி காமிலாவிடம் சென்று கூறி மகிழ வேண்டுமே என்று உடனே பஸ் ஏறி புறப்பட்டான் கரீம். ஆனால் கண்டியில் இருக்கும் காமிலாவின் வீடு எங்கிருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. கண்டியில் ஓர் இடத்தில் பஸ்ஸைவிட்டு இறங்கினான். எத்திசையில் செல்வதென்றே தோனாத கரீம் அவ்வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவரிடம் நானா, மனேச்சர் மகள் காமிலாவின் வீட்டுக்கு எதால போக வேண்டும் என்று கேட்டான்.

தம்பி அதோ தெரிகிறது கடை அதற்குப் பக்கத்திலதான் காமிலாவின் வீடு. இன்று மனேச்சரின் மகள் காமிலாவுக்கு கல்யாணம், அதற்காகவா வந்தீர்கள். இந்த வார்த்தையைக் கேட்டதும் கரீம் நிலை குலைந்துவிட்டான். என்ன காமிலாவுக்குக் கல்யாணமா? தலை சுற்ற ஆரம்பித்தது. வீதி ஓரத்தில் அவன் குந்திவிட்டான். நோ, நோ, நோ காமிலாவுக்கு கல்யாணம் இல்லை. கல்யாணம் நடக்காது. நடக்கவே கூடாது இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. காமிலா எனக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது இதை நீ கேட்டா எவ்வளவு சந்தோஷப்படுவாய் என்று ஓடோடி வந்தேன். ஆனா உனக்கு கல்யாணமாமே என்று தனக்குள்ளேயே புலம்பிக் கொண்டிருந்தான்.

பிறகு தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு நீ யாரையாவது திருமணம் செய். அது உன் உரிமை காமிலா. நீ யாரை திருமணம் செய்தாலும் நன்றாக இரு என்று வாயார வாழ்த்தியவனாக காமிலாவை திருமணம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்காவிட்டாலும், அவளை அடையப்போகின்ற அந்தப் பாக்கியசாலியின் முகத்தை ஒரே ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் காமிலாவின் வீட்டை அடைந்தான் கரீம். அங்கே கல்யாண வேலைகள் தடல் புடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அக் கல்யாண வீட்டில் ஓரமாகப் போடப்பட்டிருந்த ஓர் கதிரையில் கரீம் அமர்ந்து கொண்டான். கல்யாண வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காமிலா கரீமைக் கண்டு கொண்டாள். உடனே ஓடோடி வந்தாள். என்ன கரீம் இங்கே இருக்கின்றீர்கள்.

உள்ள வாருங்கள் என்று அவனை அவள் அழைத்தபோது வெறித்துப் பார்த்தான். வாங்க கரீம் வாங்க எழும்புங்கள் என்ற போது இனிமேலும் இருக்க முடியாமல் எழுந்து அவளை பின் தொடர்ந்தான்.

இப்படி இருங்க கரீம் என்று அவள் ஓர் கதிரையை காட்டிய போது என்ன இது மணப்பெண் அதுவும் கழுத்தில் தாலி ஏறும் நேரம் என்று தனக்குள் நினைத்துக் கொண்டு, அவன் அவள் காட்டிய அந்தக் கதிரையில் இருக்காமல் என்ன காமிலா இன்று உனக்கு கல்யாணம் என்று சொன்னாங்க. நீ இப்படி எனக்குப் பக்கத்தில் நிற்கின்றாய் என்றான். இதைக் கேட்ட காமிலா கலகலவென்று சிரித்துவிட்டு, எப்படி சொன்னாங்க காமிலாவுக்கு இன்றைக்கு கல்யாணம் என்று சொன்னாங்களா? நீங்கள் இதை நம்பி விட்டீர்களா? என்ன காமிலா எனக்கு ஒன்றுமே புரியவில்லை கொஞ்சம் விபரமாக சொல்லுங்களேன்.

அப்படியா என் பெயர் சபினா. காமிலா எனது சகோதரியின் பெயர் சரினா காமிலா. சரினா காமிலாவுக்குத்தான் இன்று கல்யாணம். சுருக்கமாக காமிலாவுக்கு கல்யாணம் இன்று என்று உங்களிடம் சொல்லி இருப்பாங்க. என்ன கரீம் இப்போது குழப்பம் எல்லாம் தீர்ந்து போச்சா. ஆம் காமிலா ஆம் என்றவாறு அவளை அப்படியே கட்டி அணைத்து ஆனந்தத்தில் மூழ்கி, இதுதான் உண்மையான காதல் என்றான் கரீம்.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**சமத்துவம்**, சமதர்மம் என்றெல்லாம் கொள்கை விளக்கங்களைப் பரவலாக வெளியிட்டுக் கொண்டிருப்பவர்கள், அடிப்படைக் கொள்கைகள் ஏதுமில்லாது எழுந்தமானமாக மனதில் பட்டதையெல்லாம் இன்று எழுதுவதற்கு வாய்ப்புக் கிடைத்துவிட்ட காரணத்தால், என்ன எழுதுகிறோம் என்று அறிய முடியாதவர்கள் கூடத் தத்துவம் பேச முனைவது இன்றைய சமதர்மத்தின் ஒரு அங்கமாகிவிட்டது ஜீரணிக்க முடியாததொன்றுதான். இருந்தபோதிலும் ஆய்வு ரீதியாக அறிஞர்கள் சொல்லிவைத்த உண்மைகளுக்கொப்ப, சிலரின் செயற்பாடுகள் இருப்பது போற்றத்தக்க தொன்றே.

இதுவரையும் அத்தகையதொரு நல்ல செயற்பாட்டை கடைப்பிடிக்க நினைப்பவர்களுக்கேனும் இது பயன்படுமாயின், அதுவே வள்ளுவப் பெருந்தகைக்கு மனித வர்க்கம் செய்யும் நன்றிக் கடனாகும். அவர் கூறிவைத்திருப்பதைக் கவனிப்போமா?

***"குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்***
***நாணுடையான் கட்டே தெளிவு"***

*குறள் - 502*

நற்குடியிலே பிறந்தும், தானும் எவ்விதக் குற்றமும் இல்லாதும், அஞ்சும் மானமுள்ளவனாகவும் இருப்பவனையே, பொறுப்புள்ள ஓர் பணிக்கு அமர்த்துக. பழிக்கு அஞ்சாதவன் பொருத்தமற்றவன் என்பது போலும்.

## இலக்கிய நயம்

# இனிது ஏது பிரிவுத்துயர்!

**நீர்த்தடாகத்துள்** குதித்த மரகதவல்லி தத்தளிப்பாளோ? என்று நினைத்த விக்கிரமனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைவிட மரகதவல்லி அந்த அகண்ட, ஆழமான நீர்ப்பரப்பில் கெண்டைபோல் நீந்தி வந்து பின்புறமாக அவன் இரு தோள்களையும் பற்றிக் கொண்டதுதான் மேலும் அதிர்ச்சியைத் தந்தது. அவன் தன்னைச் சுதாகரித்துக் கொள்ளுமுன் விக்கிரமனையும் முன்னால் தள்ளிக் கொண்டு அவன் முதுகிலேயே ஒட்டியவாறு தடாகத்துள் அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகளை அடைந்தாள் மரகதவல்லி.

ஒரு வழியாகப் படிக்கட்டை அடைந்தபோது, கால்களை ஊன்றி எழுந்து நின்ற விக்கிரமனைப் பின்புறமிருந்து கொடி சுற்றுவதுபோல் சுற்றியபடியே முன்னால் வந்து நின்றாள் அவள் பட்டுடலின் மென்மையும், குளிர்ந்த நீரின் சிலுசிலுப்பும் அவன் உடலைத் தழுவிய போது இனந் தெரியாததொரு கதகதப்பு அவனுக்குத் தேவையானதை கேட்டுக் கொண்டிருந்தது. மெதுவாக அவளை அணைத்தான் அவன். மரகதவல்லி அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் ஏதோவொரு காந்த சக்தி அவன் உடலெல்லாம் பரவியது. அதே வேளை அவள் இதழ்கள் அசைந்தன. "ஏன் பயந்து விட்டீர்களா?" "எதைக் கேட்கிறாய்" "நான் தண்ணீரில் மூழ்கி விடுவேனென்று" "நான் எதிர்பார்க்கவேயில்லை" "எதைச் சொல்கிறீர்கள்?" "உன் வரவைத்தான்" "எதிர்பார்த்திருந்தால்?" "வெளியேறியிருப்பேன்" "ஏன்?" "அதை எப்படிச் சொல்வது?" "நீங்கள் ஒரு ஆண்மகன்தானே?" "அதில் கூடச் சந்தேகமா" "சந்தேகம்தான்" "எப்படி வந்தது?" "நான் இதுவரை தனியாகத்தானே இருக்கிறேன். தழுவிக் கொள்ளலாமே?" "யாரை?" "என்னை விட வேறு யாராவது இருக்கிறார்களா?" "அப்படியா விடயம்?" "அப்படித்தான்" "நான் அவரைப் பார்க்க வேண்டும்" "என் காதலரையா?" "என் கண்ணைப் பாருங்கள்" என்று மரகதவல்லி கூறியதும், அவள் கண்ணை உற்று நோக்கினான் விக்கிரமன். அதில் தன் உருவம் தெரிவதைக் கண்டு, "இவர்தான் உன் மனங்கவர்ந்த காதலரா? அவர் உன்னைத் தழுவ வந்தால் என்ன செய்வாய்?" "தந்து விடுவேன்" "எதை?" "என்னை. இப்போதே" "பார்த்துவிடுவார்களே!" "இங்கு யாரும் இல்லையே" "ஏன் இல்லை?" "காட்டு பார்க்கலாம் பாப்பவர்களை" "அதோ பாருங்கள் அவளை" என்று பிறை நிலவைக் காட்டினாள் மரகதவல்லி. "அவளும் ரசிக்கட்டுமே என்றான் விக்கிரமன். "தடாகம் புனிதமானதல்லவா?" என்றாள் அவள். "உன்னை விடவா" என்றான் விக்கிரமன். மனம் ஒப்பவில்லை என்றாள் மரகதவல்லி. "என்னையா என்றான்" அவன்' "உங்கள் செயலை". "திருடி செய்வதையும் செய்து விட்டுபழியை என் மீது போடுகிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்"

என்றவன், அவளைத் தன் இரண்டு கைகளாலும் ஏற்தியவண்ணம் சயன அறையை நோக்கி நடந்தான் விக்கிரமன். பளிங்குச் சிலையொன்று தன் கைகளில் துவண்டு கிடப்பதும், உயிர் கொண்ட அந்தச் சிலையாளின் நாசித்துவாரத்தின் வழியாக வெளிவரும் அனற்காற்று அவன் முகத்தில் படும்போது அவனை அறியாமலேயே ஏதோ வான்பரப்பில் நடப்பதுபோன்றதோர் உணர்வலைகளில்



மிதந்து கொண்டிருந்த விக்கிரமனின் உடலெங்கும் முறுக்கேறிக் கொண்டிருந்தது.

மரகதவல்லியைப் பஞ்சணையில் பரப்பியபோது அவன் கழுத்தைத் தாவிப்பிடித்துக் கொண்டாள் மரகதவல்லி. வான் மழை காணாது வரண்டிருந்த பூமியெங்கும் புயல் மழை தாண்டவமாடியது என்னவோ உண்மைதான். அதனால் ஏற்பட்ட அழிவுகளும் இருக்கத்தானே செய்யும்.

மழைக்கும் மண்ணுக்கும் ஏற்பட்ட மோதலில் மண்ணுக்குத்தானே வளம் கிடைத்தது. "நீங்கள் மிகவுந்தான் குறும்பு. உடலெல்லாம் வலிக்கிறது" "ஒத்தடம் போடட்டுமா?" "ஆசையைப் பார். அசடு வழிகிறது" "முகத்திலா அல்லது....." "போங்கள் எனக்கு வெட்கமாக இருக்கிறது" "விடிந்த பின்னல்லவா அது இருக்க வேண்டும். இப்போதே வந்து விட்டால்...." என்றவாறு அவள் கன்னத்தைக் கடித்தான் அவன். "வலிக்கிறது சும்மா இருங்களேன்" என்று அவன் முகத்தைத் தன் தளிர்க் கரங்களால் தடுத்தாள் அவள். சும்மா இருந்து விட்டால் சுகம் கிடைத்து விடுமா? என்றான் அவன். கேள்விகளும் பதில்களும் கெஞ்சல்களும், கொஞ்சல்களும் மாறி மாறி நடந்தேறியது. காதல் நாடகம். நேரம் நடுநிசியைத் தாண்டி விட்ட வேளை உறங்காது விழித்திருந்த கண்கள்

உறக்கத்தைத் தழுவிக் கொண்டன.

நான்காம் சாமத்தை அண்மித்துக் கொண்டிருந்தது. அந்த நள்ளிரவு வேளை கண்விழித்துக் கொண்ட மரகதவல்லி, தன் உடலை ஒரு முறை பார்த்துக் கொண்டதும் அவளால் அவள் கண்களையே நம்ப முடியவில்லை. அவள் அருகில் ஆஜானுபாகுவாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த விக்கிரமனைக் கண்டதும், அவளை அறியாமலேயே வெட்கம் அவளைக் கவ்விக் கொண்டது. அருகில் கசங்கிப் போய்க் கிடந்த பட்டுக் கம்பளத்தை எடுத்து அவனைப் போர்த்தி விட்டுக் குளியல் அறையை நோக்கி நடந்தாள் மரகதவல்லி.

சர்வ அலங்காரங்களுடனும் விக்கிரமன் படுத்திருந்த மஞ்சத்தின் விளிம்பில் பாற் கிண்ணத்துடன் அமர்ந்திருந்த மரகதவல்லி, அருகிலிருந்த குளிர்நீர்ப் பாத்திரத்தில் இருந்த நீரை எடுத்து விக்கிரமனின் முகத்தில் தெளித்தாள். திடுக்கிட்டுக் கண்களைத் திறந்த விக்கிரமன், தன் எதிரில் அமர்ந்திருந்த மரகதவல்லியின் தோற்றத்தைக் கண்டதும் என்றுமே இல்லாதவாறு பிரமித்துப் போனான். தன்னருகில் வீற்றிருப்பது கலைமகளோ, அலைமகளோ என்ற ஐயம் தெளிய நெடுநேரம் ஆயிற்று.

**தருவது கற்பகன்**

***"ஊடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும் கூடலில் காணப் படும்."***

*குறள் : 1327*

## சிந்தியா பதில்கள்

✍✉ **சிந்தியா, மணலாற்றைப் படையினர் கைப்பற்ற முயன்றால் போர் மூளும் என்று புலிகள் எச்சரித்துள்ளனரே. கிழக்கிலும் இப்படித்தானே கூறினார்கள்?**

*- என்.கேதீஸ்வரன்,*
*உவர்மலை.*

படையினரின் பார்வை மணலாற்றில் விழுந்துள்ளது என்பதை புலிகள் ஒரு எச்சரிக்கையோடு சிந்தித்துக் கொண்டிருப்பதை தமிழ்ச் செல்வன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

✍✉ **ஆட்கடத்தல்களும், படுகொலைகளும் தொடர்கதையாகத் தொடர்கிறது. இதனைக் கட்டுப்படுத்த வழியுண்டா?**

*- எஸ்.பகீரதன்,*
*வெள்ளவத்தை.*

சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதும் - உரியவர்களைக் கைது செய்வதும் பொலிஸாரின் கடமை என்று மக்கள் ஒதுங்கி இருக்கும்வரை வழி பிறக்காது. மக்களின் பங்களிப்பும் அவசியமாகிறது. அதற்காக சட்டத்தை ஒவ்வொருவரும் கையில் எடுத்துக் கொள்ளவும் முடியாது.

✍✉ **ஆயுதக் கடத்தலுக்கும் - புலிகளுக்கும் தொடர்பில்லை என்று சென்னையில் கூட்டமைப்பு எம்.பீக்கள் கூறியிருப்பது பற்றி...?**

*- எம்.சதாசிவம்,*
*மன்னார்.*

வேலிக்கு ஓணான் சாட்சி சொல்லுவது போல் கூட்டமைப்பினர் கூறும் பொய்கள் நாளைக்கு அவர்களின் உண்மைகளையும் பொய்யானதாக மாற்றிவிடும் என்பதை உணராமல் உளறிக்கொண்டிருக்கிறார்கள். விட்டுவிடுங்கள் பாவம்...

✍✉ **சிந்தியா, நோர்வேத் தரப்பினர்களிடம் எஞ்சியிருக்கும் எதிர்பார்ப்பு எதுவாக இருக்கும்?**

*- கே.நிரோஷினி,*
*வத்தளை.*

சர்வதேச சமூகம் புலிகளை அணுக முடியாத இடைவெளியில் சில சட்ட - ஒழுங்குகளை மீறி புலிகளுடன் சந்திப்புக்களைச் செய்து, அவர்களின் நிலைப்பாட்டை வன்னியில் இருந்து வெளியில் கொண்டுவரும் பணிசெய்யும் குறைந்தபட்ச எதிர்பார்ப்புத்தான் இப்போது அவர்கள் மேல் இருக்கிறது. ஆப்பிழுத்த நம் முன்னோர் கதையாகி விட்டது நோர்வேயின் கதை.

✍✉ **இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் சென்று அகப்பட்டவர்கள், உண்மையிலேயே பொதுமக்களா? அல்லது பயங்கரவாதிகளா?**

*- வி.தர்மினி,*
*கண்டி.*

பிரதமர் சொல்கிறார் அவர்களைப் புலிகள்தான் திட்டமிட்டு அனுப்பியுள்ளார்கள் என்று. விநாயகமூர்த்தி சொல்கிறார், அவர்கள் அப்பாவிகள் அடைக்கலம் கொடுங்கள் என்று. புலிகளின் விசுவாசிகள் சிலரிடம் கேட்ட போது, புலிகள் சிலரை நீண்டகாலத் திட்டத்தோடு அனுப்பி வைத்திருக்கலாம் என்கிறார்கள். பிடிபட்டவர்கள் சொல்கிறார்கள், இந்தியாவுக்குப் போக முடியாமல் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பி வந்ததாக. இது எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் உங்களுக்கு என்ன புரிகிறது?

✍✉ **மகிந்த - பிரபா ஒப்பந்தமென்று ஒரு புரளி உலாவுகிறதே. அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*- ஆர். பாரதி,*
*வவுனியா.*

"புரளி" என்று நீங்களே கூறி விட்டு என்ன நினைக்கிறீர்கள் என்று என்னைக் கேட்பது வேடிக்கையாக இருக்கிறது. பதவியில் இருக்கும்போது இப்போது தவறுகள் என்று சொல்வதையெல்லாம் பங்கு போட்டுச் செய்வார்களாம். பதவி பறிக்கப்பட்டு வெளியில் போட்டு விட்டால், பத்திரிகை மாநாடு நடத்தி அம்பலப்படுத்தப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு பூச்சாண்டி காட்டுவார்களாம். என்னவென்று சொல்வது.

✍✉ **சிந்தியா, இம்முறை கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளில் முன்னணி வகிக்கக் கூடிய மூன்று அணிகளை வரிசைப்படி பட்டியலிடுங்கள் பார்க்கலாம்.**

*- ப.ரொஷான்,*
*மட்டக்களப்பு.*

முதலாவது - அவுஸ்திரேலியா, இரண்டாவது - தென் ஆபிரிக்கா, மூன்றாவது - இலங்கை, இந்தியா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள். ரொஷான் மூன்றாவது இடத்தில் இந்த நான்கு அணிகளும் தோற்றக்கூடிய நிலையில் இருக்கின்றன. எனக்காக நான்கில் ஒன்றை தெரிவு செய்யுங்கள். இலங்கை என்பது என் தெரிவு.

✍✉ **தற்போது ஒரு தரப்பினர் குற்றம் புரிந்து விட்டு இன்னொரு தரப்பினர் மீது பழியைப் போட்டு விட்டு தப்பிக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

*- எம். சுபாஷ்,*
*திருக்கோவில்.*

"ஆம்" அது நடக்கிறது.

கொள்ளை, கொலையையே கொள்கையாகக் கொண்டவர்கள், அதற்கு எதிரான தரப்பு மீது பழிபோடுவதிலும், அந்தப் பழியை பக்குவமாகப் பிரசாரப்படுத்துவதிலும் ஈடுபட்டும் வருகின்றனர். பிள்ளை பெயரைச் சொல்லி எந்தப் பூதம் தம்மிடம் பறித்துச் சாப்பிடுகிறது என்று மக்களுக்குத் தெரியும். நமக்கு ஏன் வம்பு.

✍✉ **சிந்தியா, இப்போதைய பாடல்களில் மனதைத் தொடக்கூடிய மெல்லிசைப் பாடல்கள் அருகி வருகிறதே. கவனித்தீரா?**

*- எம். பிரியா,*
*நல்லூர்.*

அந்த விடயத்தில் இளையராஜாவின் இடம் இன்னும் காலியாகவே இருக்கிறது. இனிமையான பாடல்கள் கேட்க வேண்டுமாக இருந்தால், இடைக்காலத்திற்கே போக வேண்டியிருக்கிறது. போனவாரம் "முதல் மரியாதை" படம் பார்த்து அந்த இனிமை கொஞ்சம் சுவைத்தேன்.

✍✉ **சிந்தியா, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனைகள் இந்த வருடத்துக்குள்ளாவது முன் வைக்கப்படுமா?**

*- மா. கஜேந்திரன்,*
*மாத்தளை.*



முனி - லோரன்ஸ் - வத்திகா

ஏமாற்றமும் - இயலாமையும் உங்கள் கேள்வியிலும் தெரிகிறது. அநேகப் பேரின் நிலையும் இதுவாகத்தான் இருக்கிறது. காத்திருப்போம்.

✍✉ **படையினர் மீது கடல் வழியாகத்தாம் தாக்குதல் நடத்தப்போவதாக புலிகள் கூறியிருப்பது எதைக் காட்டுகிறது.**

*- எஸ். அன்பு,*
*மன்னார்.*

இது முதல் தடவையான எச்சரிக்கை இல்லை. படையினர் இவர்கள் மீதும், இவர்கள் படையினர் மீதும் கடலில் தாக்குவது அன்றாடச் செயற்பாடுதான். தற்போது விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்து கப்பலில் வடக்குக்குப் பயணம் செய்யும் மக்களைக் குறிவைத்து விடுக்கப்பட்டதாகவே இருக்கிறது. மக்களுடன் வரும் கப்பலைத் தாக்க மாட்டோம் என்று சொல்லாதவரை புலிகளின் எச்சரிக்கை மக்களுக்குத்தான். யாழிலிருந்து திருகோணமலைக்கு வருகிறவர்களும் சரி, திருகோணமலையிலிருந்து வடக்குக்குப் போகிறவர்களும் சரி கடல் பயணம் முடிந்து மண்ணில் இறங்கும் போது தான் மீண்டும் உயிர் பெற்றுக் கொள்வது போல் நினைத்துக் கொண்டு பயணிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டால் சரி.

✍✉ **சிந்தியா, அதென்ன "முனி" பார்த்தீர்களா?**

*- வி.கவிதா,*
*கந்தானை.*

நடன இயக்குநர் லாரன்ஸ் "முனி"யை இயக்கியிருக்கிறார். இயக்குநர் சரண் தயாரித்திருக்கிறார். இயக்குநரும் நடிகருமான ராஜ்கிரண் கௌரவ நடிப்பில் அசத்தியிருக்கிறார். "முனி", லாரன்ஸின் நம்பிக்கைச் சாமி....

✍✉ **சிந்தியா இந்தியாவுக்குச் சென்றிருக்கும் சிவாஜிலிங்கம் எம்.பி. கலைஞர் கருணாநிதியைச் சந்திக்கமுடியாமல் இருப்பதாகச் சொன்னீர்களே இந்தவாரம் நிலைமை எப்படி?**

*வை.வாகீசன்*
*மொரட்டவை.*

இன்னும் சந்திக்கவில்லை. இனியும் சந்திப்பார் என்று நம்பக்கூடிய நிலைகளும் இல்லை. கலைஞர் புலிகள் என்றாலே மிகுந்த கவனத்தோடு பேசுகின்ற நிலை தோன்றியுள்ளது. எதிர்க்கட்சிகள் கருணாநிதியின் ஆட்சிக்காலத்திலேயே தமிழ் நாட்டில் புலிகளின்நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது என்றும் சமகாலத்தில் ஆயுதக்கடத்தல்களில் பிடிபட்ட புலிகள் கூறியிருக்கும் தகவல்களின்படி ஆளும் தி.மு.க.வின் கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அரசியல்வாதிகளுக்கும் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பதாக குற்றம் சாட்டி வருகின்றன. எதிர்க்கட்சிகள் கிளப்பும் பிரச்சினைகள் ராஜிவ்காந்தியின் படுகொலைவரை நீட்டி முழக்கப்படுவதால் இந்த நேரத்தில் கலைஞர் தமிழ்க்கூட்டமைப்பையோ, புலிசார்பு கொண்ட எவரையுமோ சந்திப்பது சரியானதாக இருக்காது.

# முல்லைத்தீவில் உடனடியாக தாக்குதல் நகர்வு சாத்தியமில்லை

அரசாங்கப் படைகள் வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மணலாறுப் பகுதியை நோக்கி நகர்வதாகவும் அதனை முறியடிக்க புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்றும் அண்மையில் தமிழ் செல்வன் தெரிவித்த கருத்து வெறும் வாய்ச்சவாடல் என்று இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார். கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்ட்கார் கடந்த ஐந்தாம் திகதி கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியுள்ளார். அப்போதே மேற்கண்ட எச்சரிக்கையை தமிழ்ச்செல்வன் விடுத்திருந்தார். சர்வதேச சமூகத்தின் மீதும் தமிழ்ச்செல்வன் குற்றம் சாட்டி யிருந்தார். இலங்கை அரசின் நடவடிக் கைகள் குறித்து சர்வதேச சமூகம் நடவ டிக்கை எடுக்கவில்லை என்பதே தமிழ்ச் செல்வனின் குற்றச்சாட்டாகும்.

"கிழக்கில் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கும் புலிகள், பாரிய படை நகர்வையோ அல்லது அதிரடித் தாக்குதலையோ நடத்துவார்கள் என்று நாம் உடனடியாக எதிர்பார்க்கவில்லை. அப்படித் தாக்குதல் நடத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டால், புலி நிலைகள் மீது பதில் தாக்குதல் நடாத்தப்படும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். இருந்தாலும் நாம் எப்பொழுதுமே விழிப்புடன் இருக்கின்றோம். எந்தத் தாக்குதலையும் சமாளிக்கக் கூடியளவிற்கு பந்தோபஸ்து நடவடிக்கைகளைப் பலப்படுத்தியிருக்கின்றோம் என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

தமிழ்ச்செல்வனின் கருத்துத் தொடர்பாக நோர்வேத் தூதுவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அது குறித்துப் பதிலளிக்க மறுத்து விட்டார். "தமிழ்ச்செல்வன் கூறியது போன்று வடக்கில் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றினை நடத்துவார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா என்று கேட்ட போது, "அது புலிகள் இயக்கத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய விடயம்" என்று பதிலளித்தார்.

வன்னியில் புலிகளின் உயர் மட்டத்தைச் சேர்ந்த சிலர் அண்மையில் சந்தித்துப் பேசியதாக நம்பத் தகுந்த வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. சூசை, பொட்டம்மான் உட்பட இரண்டாம் மட்டத்தலைவர்களும் இச்சந்திப்பில் பங்கு பற்றியதாகவும் தெரிய வருகின்றது. எனினும் தாக்குதல் நடவடிக்கைகள் குறித்தோ அடுத்த கட்ட நகர்வு குறித்தோ எதுவும் பேசப்பட்டதா, இல்லையா என்பது பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை.


# மலையகத்தில் போஷாக்கின்மையை ஒழிக்கப் பெண்கள் அணிதிரள வேண்டும்

"பெருந்தோட்டத்துறையிலுள்ள சகல தோட்ட வைத்திசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்று பராமரித்து வர வேண்டும். எவ்வாறு கல்வி அபிவிருத்திக்காக பாடசாலைகள் அனைத்தையும் பொறுப்பேற்று கல்வி வழங்கி வருவதைப் போல் சகல தோட்ட வைத்தியசாலைகளையும் தேசிய வைத்திய சேவைக்குள் அடக்கி, அபிவிருத்தி செய்ய வேண்டும். அதன் மூலம் தோட்ட மக்கள் மத்தியில் ஆரோக்கியமான வாழ்வை ஏற்படுத்தலாம். அதற்காக மாதர் கள் யாவரும் ஒன்று திரண்டு போராட்டம் மேற்கொள்ளல் வேண்டும். இதுவே தோட்ட மக்கள் மத்தியில் போஷாக்கின்றி ஏற்படும் மரணங்களைத் தடுத்து நிறுத்த வழி செய்யும்."

மனித அபிவிருத்தி அமைப்பின் பெண்கள் கண்காணிப்பு காப்பகத்தின் தலைவி திருமதி பி.லோகேஸ்வரி, மஸ்கெலியா சென். ஜோசப்ஸ் தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த நான்காம் திகதி நடை பெற்ற மகளிர் தினக் கொண்டாட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு பேசுகையில் இவ்வாறு கூறினார். சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு "மலையகப் பெண்க ளின் உரிமைகளை பாதுகாப்போம், வென்றெ டுப்போம்" என்ற தொனிப்பொருளில் கூட்டம் நடைபெற்றது. இதனை கண்டி மனித அபிவி ருத்தி மன்ற பெண்கள் கண்காணிப்பு காப்பக மும், ஹார்ட்ஸ் ஸ்தாபனமும் ஒழுங்கு செய்தி ருந்தது.

பிரதேசங்களில் உள்ள மாதர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். கூட்டம் ஆரம்பமாகும் முன்பு, மஸ்கெலியா ஸ்ரீசண்முகநாதர் கோவில் முற்றத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி நகரைச் சுற்றி வலம் வந்தது. அவ்வூர்வலத்தில் மாதர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தொனிப் பொருளில் பல கோரிக்கைகள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு குரல்கள் எழுப்பப்பட்டன. இச் சுலோகங்கள் மும மொழிகளிலும் இடம்பெற்றன.

# மத்திய வங்கி குண்டு வெடிப்பிற்கு உக்ரேனில் வெடி மருந்து கொள்வனவு



மத்திய வங்கி குண்டு வெடிப்புக் காட்சிகள்

11 வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள மத்திய வங்கிக் கட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வெடி மருந்து புலிகளால் உக்ரேனில் கொள்வனவு செய்யப்பட்டதாக கனடாவிலுள்ள 'இலங்கை ஐக்கிய தேசிய சங்கம்' என்ற அமைப்பு அண்மையில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. இதற்கென 72 இலட்சம் கனடிய டொலர்கள் கனடாவில் சேகரித்து அனுப்பப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி மத்திய வங்கிக் கட்டிடம் தாக்கப்பட்டது. வெடிமருந்துகள் பொருத்தப்பட்ட லொறி ஒன்றினை ஓட்டிச் சென்று இக்கட்டிடத்தின் மீது மோதியதால் 114 அப்பாவிப் பொது மக்கள் பலியெடுக்கப்பட்டனர். 1400 பேர் காயமுற்றார்கள். கனடாவில் இயங்கும் புலிகள் அமைப்பு திரட்டிய 72 மில்லியன் டொலர்களும் உக்ரேன் நாட்டிற்கு அனுப்பப்பட்டு, அந்த நிதியைக் கொண்டு 60 தொன் வெடிமருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி கனடாவில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட போதிலும், புலிகளின் முகவர் அமைப்புகள் இன்னமும் அங்கு நிதி சேகரிப்பதாக கூறப்படுகின்றது.

# கப்பம், மோசடிகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஈ.பி.டி.பி. வேண்டுகோள்

மக்களிடம் கப்பம், வரி, நன்கொடை ஆகியவை கேட்டு தொந்தரவு படுத்தும் அமைப்புக்கள் மீதோ, தனி நபர்கள் மீதோ கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் உயர்பீடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. யுத்தப் பாதிப்பினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கும் தமிழ் பேசும் மக்களிடம் பல்வேறு போர்வைகளின் கீழ் நிதி வசூலிப்புக்கள் செய்யப்படுவதை ஊடகங்கள் அம்பலப்படுத்தி இருக்கின்றன. எங்களது கவனத்திற்கும் இவ்வாறான சம்பவங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. விஷேடமாக யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு போன்ற பகுதிகளில் அடாவடித்தன சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றன. இவையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் அரசியல் அபிலாஷைகளுக்கும் தீர்வுகாண அர்ப்பணிப்புடன் செயற்படுமோர் அமைப்பு. அரசியல் தலைமையே எமது கட்சிக்கு வழி காட்டுகின்றதே ஒளிய ஆயுதங்கள் அல்ல. ஆயுதங்களைப் பயன்படுத்தி அல்லது அதன் போர்வையின் கீழ் அப்பாவி மக்களைப் பயமுறுத்திப் பணம் பிடுங்கும் கும்பல்கள் யாராக இருந்தாலும் அல்லது எந்த அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வரப்படவேண்டும் என்பதே எமது இலக்காகும். எமது இயக்கத்தின் பெயரைச் சொல்லி, யாழ். - திருமலை கப்பல் பயணத்திற்கு ஆசனங்கள் ஒதுக்கித் தருவதாக கூறி, பண மோசடி செய்தவர்களை நாமே பிடித்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தி இருக்கின்றோம். எமது உறுப்பினர்கள் மக்களுக்குப் பிரச்சினையையும் கட்சிக்கு அபகீர்த்தியையும் ஏற்படுத்துவதில்லை.

எமது கட்சியின் பெயரைச் சொல்லி யாராவது இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களே யானால், அது குறித்து சம்பந்தப் பட்ட மாவட்டங்களில் கட்சிப் பொறுப்பாளர்களுக்கோ அல்லது தலைமையகத்திற்கோ அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இல்லையேல் பொலிஸில் புகார் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் உயர்பீடம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

# மஹிந்த - புலிகள் இரகசிய உடன்பாடென்பது அபாண்டமான குற்றச்சாட்டு

## - சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்

சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட பூசல்களைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பொறுப்பற்ற குற்றச் சாட்டுக்களினால் மிக மோசமாக சீர்குலைந்திருப்பதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார். அநுரா பண்டாரநாயக்கா, மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் எழுந்த முரண்பாடுகளை சமரசமாகத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் எதிர் பார்த்த பலனைத் தராமல் விட்டதாகவும் அவர் கவலை தெரிவித்தார். அநுர பண்டாரநாயக்காவிற்கும் ஜனாதிபதிக்குமிடையில் எழுந்த முரண்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்ட போதிலும் ஏனைய இருவருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்த முடியாது போய்விட்டது என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மங்கள, புலிகளுடன் மஹிந்த ராஜபக்ஷ இரகசிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டார் என்றும், இதனாலேயே அவரால் வெற்றி பெற முடிந்தது என்றும் மங்கள தரப்பினர் தெரிவித்து வரும் குற்றச்சாட்டு அபாண்டமானது என்று கட்சியின் மற்றொரு முக்கியஸ்தர் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலின் போது வடக்கில் மக்களை வாக்களிக்க விடாமல் புலிகள் தடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனாலேயே மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது என்பது மங்கள தரப்பின் குற்றச்சாட்டு. அப்போது மஹிந்த ராஜபக்ஷவுடன் முரண்பட்டுக் கொள்ளாமல் தேர்தல் வேலைகளில் முன்னின்று உழைத்த மங்களவும், ஸ்ரீபதியும், புலிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாக இன்று கூறும் அவர்கள், அன்று அதனை அம்பலப்படுத்தத் தவறியது ஏன்? தமது அமைச்சுப் பதவிகள் பறிபோகும் வரை, கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேலாக அவர்கள் மௌனம் சாதித்தது ஏன் என்றும் அந்த முக்கியஸ்தர் கேள்வியெழுப்பினார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு மூன்று வாரங்களுக்குள் புலிகள் இயக்கம் தமது தாக்குதல்களை ஆரம்பித்திருக்கின்றது. இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருந்திருக்குமேயானால், புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்திருக்க மாட்டார்கள் என்றும் அவர் சொன்னார்.

# இரண்டும் கெட்டான் நிலையில் நோர்வேத் தூதுவர்

இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படா விட்டால் இலங்கையில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடும் என்று நோர்வேத் தூதுவர் கன்ஸ் பிரஸ்ட்கரிடம் அண்மையில் தமிழ்ச் செல்வன் தெரிவித்திருந்தார். புலிகளின் இன்றைய நிலைப்பாடு குறித்து தமிழ்ச் செல்வனுடன் கான்ஸ் பிரஸ்ட்கர் கலந்துரையாடியபோது தெரிவிக்கப்பட்ட விடயங்களை அரச அதிகாரிகளிடம் தெரிவிப்பதற்காக பிரஸ்ட்கர் அவர்களை சந்திக்கவுள்ளார். அப்போது தமிழ்ச் செல்வனின் எச்சரிக்கை குறித்து விளக்குவாரா என்பது பற்றி திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை.

# சடலங்களைக் கையளிக்க பெற்றோர் மறுப்பு

மட்டக்களப்பு களுவங்கேணியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இரு புலி உறுப்பினர்களின் சடலங்களை புலிகள் இயக்கத்திடம் கையளிக்கப் பெற்றோர்கள் மறுத்து விட்டனர். வாழைச்சேனைப் பொலிஸாரால் மீட்கப்பட்ட இச் சடலங்களை, தம்மிடம் கையளிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்திருந்தது. இக் கோரிக்கை இறந்தவர்களின் பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டபோது அவர்கள் திட்டவட்டமாகவே அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

# புலிகள் தமிழ் மக்களை அடிமைகளாகவே நடத்துகின்றனர் தமிழக முதல்வரிடம் ஆனந்தசங்கரி!

"இந்திய மாநிலங்களின் பாணியில் இலங்கையில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, கலைஞர் கருணாநிதி வலியுறுத்த வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கேட்டுள்ளார். கடந்த 2ஆம் திகதி சென்னையிலுள்ள கலைஞரின் வாசஸ்தலத்தில் அவரைச் சந்தித்துப் பேசியபோதே ஆனந்தசங்கரி இக் கோரிக்கையை விடுத்தார். இலங்கையில் கடந்த 50 வருடங்களாக இல்லாத முறையில் தற்போதைய அரசாங்கம் சமஷ்டித் தீர்வொன்றை முன்வைக்க முன்வந்துள்ளது. சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்க சிலருக்குப் பிடிக்காமல் உள்ளது. இதனாலேயே இந்தியப் பாணியிலான தீர்வு முறையையே நான் வலியுறுத்தி வருகின்றேன்" என்றும் வீ.ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாடு போன்ற இந்திய மாநிலங்களுக்குள்ள அதி காரங்கள் இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கும் வழங்கப்படுமானால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துமாறு தான் தமிழக முதல்வரைக் கேட்டுள்ளதாகவும் "நாம் தீர்வொன்றினைக் காணும் கட்டத்தை நெருங்கியுள்ளோம். 1983ஆம் ஆண்டு முதல் 65ஆயிரத்திற்கு மேற்பட்ட உயிர்களை பலியெடுத்த இலங்கையின் இனமோதல், உலகின் மிகமோசமான நீடித்த ஆயுதப் போராட்டமாக மாறியுள்ளது என்றும் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். ஆனந்தசங்கரியின் வேண்டுகோளை இந்திய மத்திய அரசிற்கு தான் சமர்ப்பிப்பதாகவும், வெகுவிரைவில் சென்னைக்கு வரவிருக்கும் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனிடம் இக்கருத்துக்களைத் தெரிவிக்குமாறும் கருணாநிதி தெரிவித்தார். இலங்கைப் பிணக்கிற்கு இந்தியாவின் ஈடுபாடு இல்லாமல் தீர்வுகாண முடியாது. என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த விடயத்தில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்க வேண்டும். அதாவது மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசிற்கு இருப்பதாக தான் வலியுறுத்தியதாகவும் சங்கரி சொன்னார். புலிகளின் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்கள் அடிமைகளைப் போல் அங்கு வாழ்கின்றார்கள். அவர்கள் உரிமைகளை இழந்திருக்கின்றார்கள். புலிகள் பிள்ளைகளை பலாத்காரமாகப் பிடித்து தமது படையணிகளில் சேர்த்துக் கொள்கின்றார்கள் என்றும் ஆனந்த சங்கரி

சர்வ கட்சி.. 03ஆம் பக்கத் தொடர்ச்சி...

போதிலும், தனது நிலைப்பாட்டினை தளர்த்திக்கொள்ள அக் கட்சி தயாராக இல்லை. சுமார் 10 கட்சிகள் பங்கு பற்றும் இந்த சர்வகட்சிக் கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமயவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தமது சிபாரிசுகளை இன்னமும் சமர்ப்பிக்கவில்லை. எப்படியிருந்த போதும், இறுதி யோசனைகள் இரு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதி யோசனைகளை விரைவில் முன் வைக்குமாறு அழுத்தம் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. சகல இன மக்களினதும் அபிலாஷைகளுக்கு ஈடு செய்யக்கூடிய விதத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும் என்பதே இந்த நாடுகளின் கோரிக்கையாகும்.

# பிரான்சிஸ் பேக்கன்

## (கீ.பி. 1561 ~ 1626)

## உலகை வியக்க வைத்தவர்கள்

"**இந்த** 50 ஆண்டுகளிலேயே இங்கிலாந்தில் மிகவும் நேர்மையான நீதிபதியாக நான் இருந்தேன். ஆனால், அந்த 200 ஆண்டுகளிலேயே நாடாளுமன்றத்தில் எனக்கு விதிக்கப்பட்ட தண்டனை மிகவும் நேர்மையானது என்று நான் கருதுகிறேன்"

இத்தனை வேகமும், நெருக்கடியும் வாய்ந்த அரசியல் வாழ்வில் வேறெந்தப் பணிக்கும் நேரம் கிடைத்திருக்காது. எனினும், பேக்கன் இறவாப் புகழ்பெற்று இந்தப் பட்டியலிலும் இடம்பெறுகிறார் என்றால் அதற்கு அவருடைய மெய்விளக்கத் தத்தவ எழுத்துகள்தாம் முழுமுதற் காரணமேயன்றி, அவருடைய அரசியல் நடவடிக்கைகள் எள்ளளவும் காரணமல்ல. அவரது முக்கியப் படைப்பாகிய "ஆய்வுக் கட்டுரைகள்" என்ற நூல் 1597 ஆம் ஆண்டில் வெளியானது. இந்நூல் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. இந்நூல் பொருட்செறிவும், மிடுக்கும் வாய்ந்த இனிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. அரசியல் விவகாரங்கள் பற்றி மட்டுமன்றி, அவருடைய சொந்த விவகாரங்கள் குறித்தும் ஏராளமான 'துரோக நோக்குடைய கருத்துக்கள்' இதில் இடம்பெற்றுள்ளன. அவருடைய தனிச் சிறப்புமிக்க கருத்துக்களுக்குச் சில சான்றுகள் :

**"இளமையும் முதுமையும் பற்றி"**

"இளைஞர்கள் வழக்காராய்வதைவிட, புத்தாக்கம் புனைவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர்கள். அறிவுரை கூறுவதைவிட, செயல் முடிப்பதற்குப் பொருத்தமானவர்கள். நிலைபெற்றுவிட்ட தொழிலைவிடப் புதிய திட்டங்களுக்கு ஏற்றவர்கள். வயது முதிர்ந்தவர்கள் எதையும் அதிகமாக எதிர்ப்பார்கள். நீண்ட காலம் ஆலோசிப்பர். துணிந்து இறங்க மாட்டார்.... இவ்விரு சாரரையும் ஒருங்கிணைத்துப் பணிகளில் ஈடுபடுத்துவது நல்லது.... ஏனெனில் ஒவ்வொரு வயதினரின் நற்பண்புகளும் இருவரது குறைபாடுகளையும் திருத்திவிடும்"

**இளமையும் வயதும்**

"திருமணமும் தனி வாழ்வும்" பற்றி, "மனைவியும் குழந்தைகளும் கொண்டிருப்பவன்.

மனைவியையும் குழந்தைகளையும் இழந்தவனாகின்றான்"

(பேக்கன் திருமணம் செய்து கொண்டார். ஆனால், குழந்தைகள் இல்லை).

ஆனால், அறிவியல் பற்றிய பேக்கனுடைய எழுத்துக்கள் தாம் மிக மிக முக்கியமானவை. "மாபெரும் மறுமலர்ச்சி" (Instauratio Magna) என்னும் ஒரு பெரிய நூலை ஆறு தொகுதிகளாக எழுத அவர் திட்டமிட்டிருந்தார். முதல் தொகுதியில் தமது அறிவுச் செல்வத்தின் இன்றைய நிலை விளக்கப்பட்டிருக்கும். இரண்டாம் தொகுதியில்,அறிவியல் ஆராய்ச்சிக்கான ஒரு புதிய முறை விவரிக்கப்பட்டிருக்கும். மூன்றாம் தொகுதியில் செயலறிவால் தெரிந்து கொள்ளப்படுகிற தகவல்கள் தொகுத்துக் கூறப்படும். ஐந்தாம் தொகுதி, அவரது புதிய முறையிலிருந்து கிடைத்த செய்திகளின் தொகுப்பாக அமையும். அரிஸ்டாட்டலுக்குப் பிறகு யாரும் மேற்கொள்ள நினைத்திராத இந்தப் பிரமாண்டமான திட்டம் முடிவுறாமல் போனதில் வியப்பில்லை. எனினும், அவரது "கல்வி முன்னேற்றம்" (Advancement of Learning, 1605) புதிய முறையாவணம் (Novum Or ganum - 1620) ஆகிய இரு நூல்களையும் அவர் திட்டமிட்ட மாபெரும் நூலின் முதல் இரு தொகுதிகள் எனக் கருதலாம்.

"புதிய முறையாவணம்" என்ற நூல், பேக்கனுடைய படைப்புக்கள் அனைத்திலும் தலைசிறந்தது எனலாம். அனுபவத்தால் அறிந்திடத்தக்க ஆராய்ச்சி முறையினைக் கைக்கொள்ளுமாறு இந் நூல் அடிப்படையில் வலியுறுத்துகிறது. அரிஸ்டாட்டலினுடைய அனுமானத் தருக்க முறையை (Deductive Logic) முற்றிலுமாக நம்பியிருப்பதில் பயனில்லை. ஒரு புதிய ஆராய்ச்சி முறைவகைத் தேர்வு முறை (Inductive Method) தேவை. அறிவு என்பது ஏதோ ஒன்றில் தொடங்கி, அனுமானிக்கப்பட்ட முடிவுகள் அல்ல நாம் கண்டறியும் ஒன்றுதான் அறிவு. உலகை அறிந்து கொள்வதற்கு முதலில் அதைக் கூர்ந்து நோக்க வேண்டும், "முதலில் உண்மைகளைக்



சேகரியுங்கள், பின்னர், அந்த உண்மைகளிலிருந்து முடிவுகளை வரவழைக்க வேண்டும்." என்று பேக்கன் கூறியிருந்தார். பேக்கனின் வகைத் தேரிவு முறையை ஒவ்வொரு அம்சத்திலும் விஞ்ஞானிகள் பின்பற்றவில்லையென்றாலும், அவர் கூறிய போது, உருவான கொள்கைகள் கூர்ந்து நோக்குதலும், பரிசோதனை செய்தலும் இன்றியமையாதவை என்னும் கொள்கைகள் அது முதற் கொண்டு விஞ்ஞானிகள் பயன் படுத்திவரும் முறையின் இதயமாக அமைந்திருக்கிறது.

பேக்கன் எழுதிய கடைசி நூல் "புதிய உலகம்" (The New Atlantis) என்பதாகும். பசுபிக் பெருங்கடலிலுள்ள ஒரு கற்பனைத் தீவில் அமைந்திருக்கும் ஒரு கற்பனை மக்கட் பொதுவுரிமையாக (Utopian Cammonwealth) பற்றி இந் நூல் விவரிக்கிறது. இந்நூலின் பின்னணி,சர் தாமஸ் மோர் (Sir Thomas More) தீட்டிக் காட்டிய கற்பனை உலகை (Utopia) நினைவூட்டிய போதிலும் பேக்கன் இதில் விவரித்துள்ள செய்திகள் முற்றிலும் வேறானவை. பேக்கனின் நூலின் குறிப்பிட்டுள்ள உன்னதப் பொதுவுரிமையரசின் வளமும், நலமும் அறிவியல் ஆராய்ச்சியின் முடிவுகளை நேரடியாகச் சார்ந்திருக்கின்றன. இதன் மூலம், அறிவியல் ஆராய்ச்சியைத் திறம்படப் பயன்படுத்துவதன் வாயிலாக, தமது கற்பனைத் தீவிலுள்ள மக்களைப் போன்று ஐரோப்பிய மக்களும் வாழ்வு வளமும் மனமகிழ்வும் பெறலாம் என வாசகர்களுக்குப் பேக்கன் உணர்த்துகிறார்.

உண்மையாக முதலாவது நவீன தத்துவஞானி பிரான்சிஸ் பேக்கன்தான் என்று கூறுவது நியாயமானதேயாகும்.

வியப்புக்கள் தொடரும்

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

**வணக்கமுங்கோ!**

வழக்கம் எல்லாம் மாறிப்போய் உள்நாட்டுச் செய்தியைக்கூட வெளிநாட்டு ஊடகங்களில இருந்து தெரிஞ்சு கொள்ளவேண்டியிருக்கு. முன்ன மெல்லாம் சு.பா.சொன்னவர், இளந்திரையன் சொன்னவர் எண்டு எங்கட உள்ளூர் ஊடகங்கள் செய்திபோடுவினம். அண்மைக்காலத்தில இணையத்தளங்களில இருந்தும், பேப்பர்கள், வானொலிகளில இருந்தும் செய்திகளை எடுத்துப் போடுகினம். உவையளைக் கேட்டு என்ன புண்ணியம் எண்டிட்டு நேரடியாகச் செய்தியை எடுக்கவேணுமெண்டு சிங்கப்பூர் பேப்பருக்கு சு.பா. பேட்டி குடுத்த ஒழுங்கிலையே தொடர்புக்குப் போனேனுங்கோ.

***கா.பூ.*** :- அட... ஆச்சரியமாக் கிடக்கு நீங்களே லைனில இருக்கிறியல்.

**சு.பா.** :- பொதுவாக வெளிநாட்டுக் கோல்கள்தான் உதில வாரது. அதுதான் நான் நேரடியாக எடுத்தனான்.

***கா.பூ.*** :- அதுசரி உள்ளூர் அழைப்புக்கள் வார நேரத்தில பக்கத்தில இருந்தாலும் தள்ளி நிக்கிறார், மீட்டிங்கில இருக்கிறார் எண்டு எதையாவது சொல்லி ஒரு இமேஜை ஏற்படுத்திறது தானே.

**சு.பா.** :- சரி...சரி...எடுத்த விஷயத்தைச் சொல்லுங்கோ.

***கா.பூ.*** :- இல்ல வெளிநாட்டு ஊடகங்களுக்கு பேட்டியெல்லாம் குடுக்கிறியள். ஏன் உள்ளூர் ஊடகங்களுக்கு ஒண்டும் குடுக்கிறீங்கள் இல்லை.

**சு.பா.** :- அப்படி ஒண்டுமில்லை. வெளிநாட்டு ஊடகங்கள் தான் கொஞ்சம் ஆர்வமாக இருக்கினம். உள்ளூர் ஊடகங்கள் எங்கட செய்திகள் விஷயத்தில கொஞ்சம் சுருதி குறைச்சிருக்கினம்.

***கா.பூ.*** :- சரி விடுங்கோ. அவை எதைக் காட்டினால் என்ன. எதைக் குறைச்சால் என்ன. எனக்கு மட்டும் சின்னனா ஒரு பேட்டி தாங்கோ.

**சு.பா.** :- என்ன விஷயம் சொல்லுங்கோ.

***கா.பூ.*** :- மட்டக்களப்பில இராஜதந்திரிகள் தாக்குப்பட்ட சம்பவத்தை நீங்களே அனுதா பங்கள் எண்டு செய்தி போட்டது பற்றி என்ன நினைக்கிறியல்?

**சு.பா.** :- ஓம். அது ஸ்ரீலங்கா அரசாங்கம் செய்த சதி. அது தெரியாமல் தூதுவர்களும் வந்து மாட்டிக் கொண்டிச்சினம்.

***கா.பூ.*** :- அப்புடியெண்டால் நீங்கள் தெரியாமல் தான் தாக்குனியளோ?

**சு.பா.** :- ஆம் தாக்குதலின் விபரீதங்கள் தான் எங்களது நிலைப்பாட்டைத் தீர்மானிக்கின்றது.

***கா.பூ.*** :- உதாலை, சர்வதேச சமூகத்தின் மத்தியில் நீங்கள் குறித்த எண்ணம் எப்படி எதிர் காலத்தில இருக்கும்?

**சு.பா.** :- பெரிய மாற்றங்கள் எதுவும் வரும் என்று நம்பவில்லை. உதாரணத்துக்கு இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறுவதற்கு முன்னமே சில நாடுகள் எங்களைப் பயங்கரவாதப்பட்டியலில் சேர்த்து விட்டனவே.

***கா.பூ.*** :- கிழக்கு மாகாணத்தில உங்களுடைய தற்போதைய நிலைமை எப்படி இருக்கு?

**சு.பா.** :- உண்மையைச் சொல்ல வேணுமெண்டால், சில பகுதிகளில இருந்து அதாவது மக்கள் குடியிருப்புகள் சில எங்களிடமிருந்து பறி போயிருக்கிறதே தவிர, பெரும்பாலான காடுகள் இன்னும் எங்களது முழுமையான கட்டுப் பாட்டுக்குள் தான் இருக்கிறது. மக்களுக்குள் இருப்பதை விட காடுகளுக்குள் இருப்பது தான் எங்களுக்குப் பொருத்தமானதும் பாதுகாப்பானதும் என்று நினைக்கிறோம்.

***கா.பூ*** :- அப்ப புலிகள் பின்வாங்கிட்டினம் எண்ட கதை பொய்யெண்டிறியல்.

**சு.பா.** :- அப்பட்டமான பொய். சில ஊடகங்கள் காட்டும் மாயை அது. புலிகளைப் பொறுத்தவரை பின்வாங்கல் என்பது அகராதியிலும் இல்லை. தந்திரோபாய நடவடிக்கை அவ்வளவுதான். கிட்டடியில கொக்கட்டிச் சோலையில இருந்தும் உந்த தந்திரோபாய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதுகளை பின்வாங்கல் எண்டால் நான் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

***கா.பூ.*** :- சரி அதையும் ஒரு பக்கமாகப் போடுவம். இந்தியாவில இருந்து ஆயுதங்கள் கடத்திறதில அடிக்கடி பிடிபட்டு இருக்கிறீங்களே. அதுபற்றி என்ன சொல்லப்போறீங்க.

**சு.பா.** :- மருந்துப் பொருட்களும், உணவுப் பொருட்களும் இந்தியாவில் இருந்து தனியார் வியாபாரிகளால் கொண்டு வரப்படுவதை அவர்கள் ஆயுதம் என்கிறார்கள்.

***கா.பூ.*** :- அலுமினியக் கட்டிகளும், இரும்பு உருளைகளும் மருந்துப் பொருட்களா? உணவுப்பொருட்களா?

**சு.பா.** :- அதுபற்றி நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

**கா.பூ** :- தனியார் வியாபாரிகள் என்கிறீர்களே எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்.

**சு.பா.** :- அதைப்பற்றியும் நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

***கா.பூ.*** :- அப்புடியெண்டால் நீங்கள் ஆயுதக் கடத்தல் செய்யவில்லை என்கிறீர்களா?

**சு.பா.** :- செய்தோம் என்றால் செய்தோம். செய்யவில்லை என்றால் செய்யவில்லை. செய்யவில்லை என்பதை செய்தோமென்றும் செய்தோம் என்பதை செய்யவில்லை என்றும் கூறமுடியாது.

***கா.பூ.*** :- என்னைக் குழப்புவதற்காக நீங்கள் குழம்பிக் கொண்டு பதில் சொல்லலாம். இந்தியா குழம்பாமல் ரொம்பத் தெளிவாக இருக்கிறது எண்டது மட்டும் உண்மை. அதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

**சு.பா.** :- இந்தியா எங்கள் தாய்நாடு இதற்கு மன்னிக்கும் பக்குவம் எப்போதும் இருந்ததில்லை.

***கா.பூ.*** :- தாய் நாடு என்பதற்காக இதையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது கொஞ்சம் அதிகப்படியாகிறது என்று தோன்றவில்லையா.

**சு.பா.** :- தோன்றுகிறது. அதற்காக எப்புடி நிறுத்தமுடியும். தமிழ் மக்கள் அதை விரும்ப மாட்டார்கள்.

பாத்தியளோ. சின்னப் பேட்டி எண்டு சொல்லிப் போட்டு குடைய வெளிக்கிட்டிட்டியளே. இத்தோடு முடிச்சுக் கொள்வம் பாய்...

சு.பா. :- பாய்...பாய்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(08.03.2007 தொடங்கி 14.03.2007 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன், புதன், இராகு. மீனம் - வெள்ளி.
கர்க்கடகம் - சனி. சிங்கம் - கேது. விருச்சிகம் - வியாழன். மகரம் - செவ்வாய்.
சந்திரன், துலாம், விருச்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் மந்தம், பணச் செலவு, வீண் குறை கேட்டல், அந்நியர் நட்பு, பிரயாண மிகுதி, உறவினர் உபத்திரவம், குடும்பக் கவலை, மனப் பயம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் நன்மை, காரியானுகூலம், மனமகிழ்ச்சி, பணவரவு, உயர்ந்தோர் நட்பு, திடீர்ப் பயணம், தேக சுகக் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் அலைச்சல், பணச் செலவு, கடன்படல், பெரியோர் உதவி, மனக்குறை அதிகம், குடும்பத் தொல்லை, உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பகை, எதிர்பாரா செலவு, மனக்குழப்பம், அந்நியர் நட்பு, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, குடும்பப்பேறு மனமகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம். அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், உறவினர் பகை, குடும்பக்கவலை, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம். அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் மாற்றம், காரியக்கேடு, பணச்செலவு, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, கௌரவக்குறைவு, குடும்ப சுகம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகளின் பகை, மாணவர் கல்வி மந்தம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம். அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் கவலை, பணவிரயம், மனக்குறை அதிகம், தேக சுகக் கஷ்டம், வெளியிட வாழ்க்கை, குடும்ப, உறவினர் உதவி, உத்தியோக மேன்மை, பதவி உயர்வு, மாணவர் கல்வி குழப்பம், வியாபாரிகள், விவசாயிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி, பெரியோர் உதவி, பிரயாண மிகுதி, தேக சுகக் கஷ்டம், அந்நியர் பகை, வீண் குறை கேட்டல், குடும்ப நன்மை, உத்தியோக பயம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி கஷ்டம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம் :- 04.

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பணவரவு, மனக்குறை தீரும், புதிய முயற்சி, வெளியார் தொல்லை, உறவினர் உதவி, குடும்ப மேன்மை, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, பணவரவு, தூர இடப்பயணம், இனசன நன்மை, உயர்ந்த நிலை, குடும்பச் சுகம், உத்தியோக பயம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் நன்மை, பண விரயம், எதிர்பாரா செலவு, மனக்குறையதிகம், வெளியிடப் பயணம், குடும்பப் பொறுப்பு, சுபகாரிய நன்மை, உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மந்தம், பணச் செலவு, புதிய முயற்சி, பிரயாண மிகுதி, பொருள் இழப்பு, உறவினர் பகை, குடும்ப வெறுப்பு, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகளின் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

Regd. as a News Paper at the G.P.O.(QD/66/NEWS/2007)



## பாரம்

**படத்தில்**இருப்பது, இங்கிலாந்து வடக்கு சீல்ட் நகரைச் சேர்ந்த 8 வயது சிறுவன் மெக்கிரீடி, தாய் நிகோலாவுடன் உள்ளான். இவனது எடை 90 கிலோ. நொறுக்குத் தீனி சாப்பிடுவதில் இவனை அடிக்க முடியாது. இது உடல் நலத்திற்கு கேடு என்பதால் அவனை சுகாதார மையத்தில் சேர்த்துள்ளனர்.

இப்படியே இவனது உடற் பருமன் கூடிக் கொண்டுபோனால் மாமிச மலைபோல் வளர்ந்து விடுவான் என்று இவனது பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். அதற்குக் காரணம் இப்போது பாடசாலைக்குப் போகும்போதே சக மாணவர்கள் 'குண்டா குண்டா'' என்று கிண்டல் செய்கின்றன ராம்.

**பயங்கரவாதப்** பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நாடுகளின் பங்குச்சந்தை நிலைவரம் நிலையானதாக இருப்பதில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, சீனாவை விட அமெரிக்காவின் பங்குச்சந்தை வீழ்ச்சி கண்டிருக்கிறது. சீனாவின் பொருளாதாரப் போட்டி வளர்ச்சி மிக வேகமாக அதிகரித்து வருகின்ற போதும், பெப்ரவரியில் பங்குச்சந்தை வீழ்ச்சி கண்டுள்ளது. ஜேர்மனி பிராங்பர்ட் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட பங்குச் சந்தை வளாகத்தையே படத்தில் காண்கிறீர்கள்.



## சந்தை



இந்தியாவுக்குச் சுற்றுலா வரும் வெளிநாட்டவர்கள், கடற்கரையில் உருண்டு கிடக்கவும் பொழுது போக்கவும் மட்டும் வருவதில்லை. இந்தியாவின் கலை, கலாசாரம் என்பவற்றைக் கற்றுக் கொள்ளவும் வருகிறார்கள். ஆர்வத்தோடு கலையை கற்றுக்கொள்ள விரும்பும் மேலைத்தேயர்களுக்குக் கலைஞர்கள் கலை ஆர்வத்தோடு சொல்லிக் கொடுக்கிறார்கள். படத்தில் பிரெஞ்சு நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர், கேரளாவில் பிரபல கதக்களி நடனக் கலைஞர் விஜயா சர்மாவிடம் நடனம் கற்கும் காட்சி இது.

## விருது

**வருடா** வருடம் அமெரிக்காவில் வழங்கப்படும் சினிமாவின் உயரிய விருதாக கருதப்படும் 'ஆஸ்கார் விருது' வழங்கும் வைபவம் 79ஆவது தடவையாக நடைபெற்றது. இவ்விழாவில் சிறந்த துணை நடிகையாக விருது பெற்ற ஜெனிபர் ஹட்சனை படத்தில் பார்க்கிறீர்கள். இவ்விருதுக்குச் சிபாரிசு செய்யப்பட்ட இந்தியா வின் 'வாட்டர்' படத்துக்கு விருது எதுவும் கிடைக்கவில்லை.


---

**தலைகள்** ஒட்டிப் பிறப்பது. கால்கள் ஒட்டிப் பிறப்பது இயல்பு. இங்கே சீனாவில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த தவளைக்கு, முன்னங் கால்கள் மட்டும் மூன்று சோடி. பின்கால்களுடன் சேர்த்து எட்டுக்கால் தவளை என்ற அதிசயத்தைச் சீனர்கள் பார்க்கிறார்கள். தவளைக்கறி சாப்பிடும் பிரியர்களுக்கு இந்த எட்டுக்கால் தவளையை ஒரு வறுவல் செய்தால் விஷேட விலையில் விற்கலாம் என்று விடுதி உரிமையாளர் கூறுகிறார்.

## அதிசயம்




## கலை



**இம்மாதம்** மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகும் 'கிரிக்கெட் திருவிழா' என வர்ணிக்கப்படும் உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகளுக்கு பல நாட்டு அணிகளும் சென்றுவிட்டன. இலங்கை அணி வீரர்கள் பயணமாவதற்கு முன்னர் நடத்தப்பட்ட ஆசி வழங்கும் வைபத்தில் பிக்கு ஒருவர், இலங்கையின் நட்சத் திரப் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுக்கு நூல் கட்டி விடுவதையும் அருகில் ஏனைய வீரர்களையும் பார்க்கிறீர்கள். இலங்கை அணி உலகக் கோப்பையை வெற்றி பெற வாய்ப்பு இருப்பதாக வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் பிரதித் தலைவர் ஹாஷே கருத்துக் கூறும்போது, இலங்கை அணி ஆபத்தான அணி. எந்த வேளையில் எப்படி தன் ஆட்டத்தை மாற்றிக் கொள்ளும் என்று தெரியாது என்றும் தங்களுடன் போட்டி போடக்கூடிய அணிகளில் இலங்கை அணியும் ஒன்று என்று கூறியிருக்கிறார். நமது வீரர்கள் இப்படி இருப்பது நமக்குப் பெருமைதான். நாமும் வெற்றிக்காக ஆசிர்வதிப்போம்.





## உலகக் கோப்பை 2007





இப்பத்திரிகை கொழும்பு-06 வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் மார் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்